# கிளி/ வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

# நூற்றாண்டு விழா சிறப்பு மலர்

# நெளி - 2

1919 - 2019




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

# தெள - 2

## நூற்றாண்டு விழா சிறப்பு மலர்

## 1919 - 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைப்பு | : நௌ -2 (நூற்றாண்டு விழா சிறப்பு இதழ்) |
| பதிப்புரிமை | : கிளி/ வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை |
| பதிப்பு | : 09.11.2019 |
| பிரதிகள் | : 200 |
| பக்கங்கள் | : xlii+108 |
| புத்தக வடிவமைப்பு அச்சுப்பதிப்பு | : JS Graphics யாழ்ப்பாணம் |

## மலர்க்குழு

திரு. ம. மரியராசா (அதிபர்)

திருமதி. கி. மதுரநாயகம் (உப அதிபர்)

திரு. இ. ரஜீவன்

திரு. ச. ஜெசிந்தன்

செல்வி. கி. வேர்ஜினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகுடவாசகம்

## கல்வியே வாழ்வின் ஒளி

### தூரநோக்கு

வள முகாமைத்துவத்தினூடாக தரமான கல்வி உள்ளீடுகளை உச்சப்பயன்பாட்டிற்கு உட்படுத்தி நெறிமுறையான சமூகம் ஒன்றை கட்டி எழுப்புதல்

### பணிக்கூற்று

சிறந்த பண்பாட்டு விழுமியங்களைக் கையளிப்பதனூடாக நவீன உலகின் அறைகூவல்களை எதிர்கொண்டு அறிவு, திறன், மனப்பாங்கு கொண்ட சமூகப்பொருத்தப்பாடுடைய மாணவர்களை உருவாக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி வாழ்த்து.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே.
(வாழ்க)

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
(வாழ்க)

சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்றிட
சுடர்க தமிழ் நாடே
(வாழ்க)

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மறிந்த தனைத்தும் அறிந்திடும்
வளர் மொழி வாழியவே
(வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கீதம்

எமது இன்பத் தமிழ் மொழி வாழ்க – எமது
ஈழத்திருநாடு வாழ்க
வளமிகு வலைப்பாடு ஒளியுடன் வளரும் – எம்
வித்தியாலயம் என்றுமே வாழியவே

அரிய நற் கல்வியும் கலைகளும் – ஒழுக்கமும்
அன்புடன் எமக்கு வழங்கியே நிற்கும் – அதிபரும்
அவருடன் ஆசிரியர்களும் – என்றும்
சிறப்புடன் வாழிய வாழியவே

அன்னையின் அணைப்பும் இறைவனின் அருளும் – அலைகடல்
நிறைபொருள் தினம் தினம் பெருகிட – இன்றைய
சிறுவரை தலைவர்களாக்கிடும் – எம்
வித்தியாலயம் என்றுமே வாழியவே

நாற்றிசை யெங்கும் நின் புகழ் ஓங்கிட நலமுடன்
மாணவர் கலைகளைக் கற்றிட பண்புடன்
அறிவுத் தலைவர்கள் தோன்றிட – என்றும்
சிறப்புடன் வாழிய வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை தரவுகள்

| | |
|---|---|
| பாடசாலையின் பெயர் | - கிளி/ வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலை |
| பாடசாலை அடையாள இலக்கம் | - 1104012 |
| பாடசாலை தொகை மதிப்பீட்டு இலக்கம் | - 10034 |
| மாகாணம் | - வடக்கு |
| மாவட்டம் | - கிளிநொச்சி |
| வலயம் | - கிளிநொச்சி |
| கோட்டம் | - பூநகரி |
| கிராம சேவையாளர் பிரிவு | - பொன்னாவெளி Kn/76 |
| பாடசாலையின் வகை | - II |
| பாடசாலை முகவரி | - வலைப்பாடு , வேரவில் |
| தொலைபேசி இலக்கம் | - 0213208378 |
| மின்னஞ்சல் முகவரி | - knvalaipadurctms@yahoo.com |
| அதிபர் | - திரு. ம. மரியராசா |
| தொடர்பு இலக்கம் | - 0779238992 |
| ஆசிரியர் எண்ணிக்கை | - 23 |
| மாணவர் எண்ணிக்கை | - ஆரம்பப் பிரிவு -126 |
| | இடைநிலைப்பிரிவு - 151 |
| | மொத்தம் - 277 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


- ஆசிச்செய்திகள் ix
- வாழ்த்துச் செய்திகள் xiii
- அதிபரின் உள்ளத்திலிருந்து xxxix
- இலங்கையர் எமக்கு சமாதானமும் சகவாழ்வும்... 01
- நிர்வாக முறைமையும் முகாமைத்துவ முறைமையும் 10
- பாடசாலைமட்ட ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தியில்... 16
- வலைப்பாடு புனித அன்னம்மாள் பங்கில் மரியாயின் சேனை 20
- உதயம் 22
- நேரத்தின் முக்கியத்துவம் 24
- தமிழ் அது அவமானமல்ல நம் அடையாளம். 26
- ஏணிகள் 28
- வலைப்பாடும் நானும் 32
- கற்றலைத் தேடி ... 36
- அழகுமிகு வலை நகரே 39
- மகிழ்ச்சிகரமான பாடசாலை 40
- எது சரி? எது தவறு? 43
- எல் நினோ, லாநினா 46
- தாயுமானவள் 49
- பாதை மாற்றும் போதை 50
- தமிழ்க் காலை 51
- திறன் விருத்தி வகுப்பறையும் சாதக பாதகங்களும் 52
- வாசிப்பும் மனிதனும் 55
- கல்வியும் தொலைக்காட்சியும் 56
- பள்ளிப்பருவத்தை முறையாக திட்டமிடுங்கள் 59
- அனைவருக்கும் கல்வி 61
- கல்வியும் அதன் முக்கியத்துவமும் 64
- வாசிப்பு என்னும் சுவாசிப்பு 66
- மரம் வளர்ப்போம்
- வரட்சியை விரட்டுவோம் 68





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ வாசிப்பும் இன்றைய மாணவர் சமூகம் 70
☞ வாழ்வில் ஒரு வசந்த காலம் 73
☞ முக நூலில் இருந்து சுட்ட அழகான பதிவு 75

## மாணவர் ஆக்கங்கள்

☞ பாடசாலையும் என் நினைவுகளும்... 76
☞ ஒழுக்கம் விழுப்பம் தரும் 78
☞ என் பள்ளியின் நட்பும் பிரிவும் 79
☞ புவியில் சுருங்கும் பசுமைப் போர்வை 80
☞ விஞ்ஞானம் தந்த வாழ்க்கை வசதிகள் 82
☞ உலகம் உமது கையில் 83
☞ பொது அறிவு 84
☞ வாழ்க்கையின் பொன் விதிகள் 85
☞ பள்ளிக் கூடம் 85
☞ கெஞ்சும் பிஞ்சு 86
☞ வாழ்வின் படிகள் 86
☞ புவியின் நீர் பற்றிய தகவல்கள் 87
☞ பொது அறிவு 88
☞ விடுகதைகள் 89
☞ பொது அறிவு 90
☞ நேரத்தின் மதிப்பு 92
☞ உறவுகள் மேம்பட... 92
☞ பள்ளியும் ஆசான்களும் 93
☞ என்னை அரவணைத்த என் பள்ளி 94
☞ பொது அறிவு 95
☞ என் கல்லூரித் தாய்க்கு 96
☞ ஆச்சி சொல்லிச்சு 97
☞ ஆசிரியர்கள் 98
☞ சாதனையாளர்கள் 99
☞ நன்றியறிதல்கள் 105



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்குத் தந்தையின் ஆசிச் செய்தி

அறிவுசார் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கி, அதனைத் தக்க வைக்க தொடர்ந்து முயன்று கொண்டிருக்கும் தனித்துவமிக்க ஓர் அறிவியல் சாலையுள் நூற்றாண்டு விழா நூலுக்கு இறையாசீர் வேண்டுவதிலும், வாழ்த்துப் பகிர்வதிலும் பெருமையும், மகிழ்வும் அடைகிறேன்.

வலைப்பாட்டு மண்வாசனையை அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் எல்லோரும் இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா பெருமைக்குரிய, குறிப்பிடத்தக்க ஓர் வரலாற்று நிகழ்வு என்பதை ஐயம் நீக்கமற புரிந்து கொள்வர். கத்தோலிக்க விசுவாசம் எனும் விதையுள் பெருவிருட்சமாக வளர்ந்து கொண்டிருக்கும் ஓர் பாரம்பரிய சமூகத்தின் அறிவு கண்களைத் திறந்து கல்வியோடு அறநெறியூட்டி பல வரையறைகள் மட்டுப்படுத்தல்கள் மத்தியிலும் ஆரோக்கியமான ஆளுமைகளை சமூகத்திற்கு வழங்க எத்தனித்துக் கொண்டிருக்கும் இப் பாடசாலையின் வளர்ச்சியும், இயங்கு நிலையும் எப்போதும் பெருமைக்கும், பாராட்டுக்குமுரியது.

இப் பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவில் இக் கல்விச் சாலையின் வரலாற்றில் ஆரம்பம் தொட்டு இன்றுவரை மாணவர்களின் கற்பித்தல் மற்றும், உருவாக்கல் பணியில் திரியாக உருகி ஒளி கொடுத்த, இன்றும் ஒளியேற்றிக் கொண்டிருக்கிற அதிபர்கள், ஆசிரியர்கள், அருட்சகோதரிகள் அனைவரும் நன்றியோடு நினைவு கூரப்படவேண்டிய வர்கள். இம்மண்ணில் இம்மேலானவர்களின் தியாகம் நிறைந்த பணி மகத்தானது என்பதோடு அவர்களின் தன்னலமற்ற சேவை புனிதமாக மதிக்கப்பட வேண்டியது என்பதையும் இம் மண்ணின் மக்கள் புரிந்து கொள்வர்.

எனவே இவ்வாண்டு நூற்றாண்டு விழா நிறைவைக் கொண்டாடும் கிளி/ வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை சமூகத்திற்கு என்னுடைய வாழ்த்துக்களை கூறுவதோடு தொடர்ந்தும் அறிவுசார் சீர்மிக்க சமூகத்தை செதுக்கும் இப் பாடசாலையின் பயணம் இன்னும் பல நூற்றாண்டுகள் தொடர இறையாசீர் வேண்டுகின்றேன்.

அருட்பணி. M.T அலோய் அருண்நேசகுமார்
தூய அன்னாள் ஆலயம்
வலைப்பாடு
(பங்குத் தந்தை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

கிளிநொச்சி பூநகரி வலைப்பாடு றோ. க. த. க. பாடசாலை நூற்றாண்டு விழாவைக் காணும் பேறுபெற்றதை இட்டு மனமகிழ்வு அடைகின்றோம். வளர்ந்து செல்வதும் நீள, அகலம் ஆழம் அறிய முடியாததும் கல்வி என்ற பெரும் செல்வமாகும். இக்கல்விக் கூடம் ஆரம்பித்தவர்கள் தொடக்கம் இன்றுவரை நிர்வகித்து வருபவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். கடல் எவ்வாறு பெருக் கெடுக்கின்றதோ, சூரியன் எவ்வாறு பிரகாசிக்கின்றானோ இவற்றுக்கு வேறு நிகரான பொருட்கள் இல்லை அதே போன்று ஒருவன் பாடசாலைக் கல்வியை சரியாக நிறைவேற்ற வேண்டியது தலையாய கடமையாகும். இதற்கு பெற்றோர், பாதுகாவலர்கள் மிகவும் உறுதுணை யாக இருக்க வேண்டும். கல்வி என்பது கடையில் வாங்கும் பொருள் அல்ல ஒருவருடைய அரும்பெரும் முயற்சியே அவனது கல்வி வளர்ச்சி யாகும். கல்வி முயற்சியின் பயனாக வளர்ந்து செல்லும்.

கருவறையில் உருவாகும் அறிவு இறுதி உடலைவிட்டு உயிர்பிரியும் வரை தொடர்ந்து கொண்டே செல்லும். இவ்வாறு கல்விக்குக்கூடம் வரை உழைத்து இன்று நூற்றாண்டு விழா எடுக்கும் அத்தனை உள்ளங்களுக்கும் அருள்மிகு வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையாரின் திருவருள் துணைக் கொண்டு நல்லாசி கூறி அமைகின்றேன்.

அன்பே சிவம்

சிவஸ்ரீகதிர் குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Rt.Revd.Dr.Justin B Gnanapragasam*
**Bishop of Jaffna**

**Bishop's House,**
**P.O.Box No. 02**
**Jaffna - Sri Lanka.**
**Tel: +94(0) 21 222 2649(0)**
**Email: gnanamjb48@gmail.com**



12.10.2019

## யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி

கிளி. வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழக் கலவன் பாடசாலையின் 100 ஆவது வருட நிறைவு மலருக்கான ஆசிச் செய்தி தருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப் பாடசாலை 22. 03. 1919ம் திகதி அருட்தந்தை வில்வரசிங்கம் அ. ம. தி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இவரின் அயராத உழைப்பை நன்றியோடு நினைக்கின்றேன். இவரது ஆன்மா இறைவனில் இன்ப இளைப்பாறுதல் அடைய செபிக்கின்றேன்.

ஒரு பாடசாலை என்பது அந்த சமூகத்திலே முக்கிய செல்வாக்கு செலுத்துகின்றது. பிள்ளைகளை நல்ல மனிதர்களாக, சமூகத்தின் நல்ல தலைவர்களாக மாற்றி சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது. அந்த நல்ல நோக்கத்தை இந்த பாடசாலை செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய சிறுவர்கள், சிறுமிகள் தான் எதிர்காலத்தின் தலைவர்கள் என்று சொல்வார்கள். அந்த வகையில் இந்த பாடசாலையில் கல்விகற்கும் மாணவ, மாணவிகள் கிறிஸ்தவ விழுமியங்களை பின்பற்றி, கல்வியில் முன்னேறி, தலைமைத்துவம், ஆளுமைமிக்க நல்ல தலைவர்களாக திகழ எனது ஆசியை கூறி நிற்கின்றேன். இப்பாடசாலையில் பணி புரிகின்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் எல்லோருக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், நன்றிகளையும் கூறி நிற்கின்றேன்.

இறைவனின் ஆசி என்றும் உங்களோடு இருப்பதாக.

கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,

+ Gnanapragasam
..........................................................

Rt. Revd. Dr. Justin B Gnanapragasam Bishop of Jaffna

பேரருட்திரு கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்
யாழ் ஆயர்

*I have come that they may have life, and have it to the full. Jn. 10:10*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குடும்ப மாகாணத் தலைவியின் ஆசிச் செய்தி



நெய்தல் நிலத்தில் நீலக்கடலோசையின் தாலாட்டில் அன்னாள் அன்னையின் பாதுகாவலில் படிப்படியான வளர்ச்சி கண்டு. எழுச்சி கொண்டு தனது 100வது ஆண்டின் நிறைவில் பெருமையோடு நிற்கின்ற கிளி/வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலையை. பாடசாலைச் சமூகத்தை இந்நூற்றாண்டு மலரினூடாக வாழ்த்துவதில் மனமகிழ்வு அடைகின்றேன்.

எம்மை பெற்றெடுத்து இவ்வுலகிற்குக் கொடையாகக் கொடுத்த அன்னைக்கு அடுத்த அன்னையாக எம்மை வளர்த்து சமூகத்திற்கு கொடையாகக் கொடுத்து மகிழ்பவள் எமது பாடசாலைத் தாய். மாணவர் என்ற காலப்பகுதி முழுவதையும் பாடசாலையில் செலவிடும் பிள்ளை களைக் கல்வியிலும். ஒழுக்கத்திலும் சிறந்தவர்களாக்க. சமூகத்தில் உயர்ந்தவர்களாக்க அரும்பாடுபடுகின்ற இப்பாடசாலையும். பாட சாலைச் சமூகமும் போற்றப்பட வேண்டியவர்களே. இந்தப் பாடசாலை யின் தேவையை 100 வருடங்களுக்கு முன்னமே உய்த்துணர்ந்த. கனவு கண்ட அருட்பணியாளர்களையும். 75 வருடங்களின் பின் தரம் 06ற்கு உயர்த்திட அரும்பாடுபட்ட அதிபரையும். அடுத்த 03 வருடங்களில் தரம் 9ற்கு உயர்த்தப்பட்டு வகை II ற்கு உட்புகுத்த உழைத்த அதிபர். ஆசிரியர்களையும், அபிவிருத்திச் சங்கத்தையும். இன்று தம் அதிபர் பணியில் ஏழு வருடங்களே என்றாலும் தமது பாடசாலையை க.பொ.த (சா/த)ற்கு உயர்த்துவதில் முயற்சி எடுத்து வெற்றி கண்ட இந்நாள் அதிபர் மதிப்பிற்குரிய மரியராசா அவர்களையும் மகிழ்ச்சியுடன் பாராட்டி நிற்கின்றேன்.

இப்பகுதி வாழ் மக்களின் ஆன்மீகப் பணியோடு. பாடசாலைப் பணியிலும் இணைந்து செயற்படுவதற்கென ஆயர், பங்குத்தந்தை, பங்குச் சமூகத்தினூடாக அழைப்புப் பெற்று தமது வாழ்வையும் பணியையும் பகிருகின்ற எமது திருக்குடும்ப சகோதரிகளும் இந்த 100 வருட சேவையில் பங்கு கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். போர்ச்சூழலிலும் மக்களோடு மக்களாக வாழ்ந்து மடம் அமைத்துப் பாடசாலைப் பணி செய்த அருட்சகோதரிகளையும். விசேடமாகப் பாராட்டி நிற்கின்றேன்.

அனைத்திற்கும் மேலாக எல்லா அருள் ஆசீரையும் நாளும் பொழுதும் பொழிகின்ற இறைவனுக்கு நன்றி கூறி இறையாசீர் மென்மேலும் பொழியப்பட வாழ்த்துக்களும் செபங்களும் ஆசித்து நிற்கின்றேன். நூற்றாண்டு கண்டு மகிழும் இப்பாடசாலை இன்னும் மாணவ எண்ணிக்கையில் அதிகரித்து தரமுயர்ந்து பல நூற்றாண்டுகள் நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
திருக்குடும்ப மாகாணத் தலைவி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னை நாள் வலைப்பாடு பங்குத்தந்தையின் வாழ்த்துச் செய்தி

வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை நூறாறாண்டு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவின் நிறைவில் முதலில் இறைவனையும், நமது பாதுகாவலி புனித அன்னாளையும் நன்றியோடு நினைத்துக்கொண்டு, இவ்விழாவின் சிறப்பில் மகிழ்வுறும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர் மற்றும் பழைய மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

1919.03.02ல் அமலமரித்தியாகிகள் அருட்தந்தையரால் உருவாக்கிய இக் கல்விக்கூடம், பல அதிபர்கள், ஆசிரியர்கள், பங்குத்தந்தையர், அருட்சகோதரிகள் ஆகியோரின் செயற்திறன் மிக்க உருவாக்கத்தினால் வளர்ச்சியடைந்து, இச்சமூகத்தின் முக்கிய பொக்கிசமாக இருப்பதை நினைத்து மனமகிழ்வடைகின்றேன்.

பொதுவாக வலைப்பாட்டில் பணியாற்றும் பங்குத்தந்தையர்கள் அனைவரும் தங்கள் பணிகளை ஆலயத்தோடு மட்டும் வரையறுத்துக் கொள்வதில்லை. மாறாக கிராமத்தின் அனைத்து செயற்பாடுகளிலும், விடயங்களிலும் : கல்வி, விளையாட்டு, தொழில், சமூக செயற்பாடு, தங்களை அர்ப்பணித்து பணியாற்றுகிறார்கள்.

அந்தவகையில் நான் பங்குத்தந்தையாக பணியாற்றிய காலத்தில் (2010 - 2015) இப்பாடசாலையின் வளர்ச்சி பல நிலைகளிலும் சாதனை படைக்கின்ற உயர்ச்சியை கொண்டிருந்ததை என் அனுபவமாக்கிக் கொண்டேன். சிறப்பாக இக்கால கட்டத்தில் பல வசதியீனங்கள், அசௌகரியங்கள் மத்தயில் வேறு இடங்களில் இருந்து வந்து பணியாற்றும் ஆசிரியர்களின் தியாகத்தையும் திறமையையும் இவ்வேளையில் நன்றியோடு நினைவு கூருகின்றேன்.

பின் தங்கிய நிலையில் உள்ள கிராமத்தின் வளர்ச்சிக்கு பாடசாலை எவ்வாறு பணியாற்ற முடியும் என்பதை உணர்ந்து, 2011ம் ஆண்டு ஆலய பொதுக்கூட்டத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்கு தடையாய் உள்ள பிரச்சனைகளை நிவர்த்தி செய்து, பாடசாலையை தரம் உயர்த்த வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அவற்றை நடைமுறைப்படுத்த கிராமத்தின் பொது அமைப்புக்கள் மூலமாக முயற்சி செய்தேன். ஆரம்பத்தில் முயற்சிகள் தோற்றுப்போயின. என் வாழ்நாளில் முதல் தடவையாக பங்குத்தந்தையாகிய என்னையும் பொலிஸ் விசாரணைக்காக பொலிசார் அழைத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றார்கள். இதன்பின்னர் பங்குமக்கள் வீறு கொண்டு எடுத்து புதியதொரு புரட்சியை பாடசாலையில் குறுகிய காலத்தில் ஏற்படுத்த முயன்றார்கள்.

இதன் பயனாக புதிய அதிபராக 2012ல் எனது நெருங்கிய நண்பன் திரு. மரியராசா பொறுப்பு எடுத்த பின்னர், அவருடைய ஆளுமை, விடாமுயற்சி, இறைபக்தி, செயற்திறன், இணைந்து பணியாற்றுதல் போன்றவை மேற்படி தீர்மானங்களை இலகுவாக நிறைவேற்ற வழிவகுத்தது. இதனால் 2014ம் ஆண்டு இப்பாடசாலை வளர்ச்சியில் ஒருகட்டமாக கிராம பொது அமைப்புக்களின் முழு முயற்சியின் பயனாய் தரம் உயர்த்தப்பட்டு, பூநகரி கோட்டத்தில், கிளிநொச்சி வலயத்தில் அனைவரையும் தன்பால் ஈர்க்கின்ற ஒரு பாடசாலையாய் இருப்பது அனைவருக்கும் பெருமையாக உள்ளது.

அன்று கிளிநொச்சி கல்விப்பணிப்பாளராக இருந்த திரு. குருகுலராஜா அவர்கள் சொன்ன வார்த்தை "பாதர், உங்களில் நம்பிக்கை வைத்து, இப்பாடசாலையை தரம் உயர்ந்த அனுமதிக்கிறேன். நீங்கள் எல்லா அமைப்புக்களையும் இணைத்து பாடசாலைக்கு உதவி செய்யுங்கள்" இன்னும் பசுமையாய் உள்ளது.

இறுதியாக இப்பாடசாலை இன்னும் அதிகம் வளர்ச்சி பெற்று எதிர்காலத்தில் ஒரு கல்லூரியாக சேவை செய்ய ஆசித்து, பாடசாலை குடும்பத்திற்கு இறை அருள் நிறைவாய் கிடைக்க ஆசித்து நிற்கின்றேன்.

அருட்திரு. அ. சில்வெஸ்ரர் தாஸ்
புனித சவேரியார் ஆலயம்
தருமபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம அமைச்சர்

**Prime Minister of Sri Lanka**

## MESSAGE FROM THE HON. PRIME MINISTER

Valaippadu R.C.T.M. School in Kilinochchi founded by Rev. Fr. Vilvarasinkam as a primary school in 1919 has since then come a long way to the level of a secondary school. It continues to support the educational, social and cultural wellbeing of children in the North.

As the Valaippadu R.C.T.M. School celebrates its centenary, I commend its role in preparing students to succeed in the future and making them realize their own potential for personal development and national progress.

I appreciate the students' performances in national level exams and extracurricular activities including sports and literature. I must also applaud the current administration and staff of the school for their continuous efforts to create excellence in education, sports, arts and culture.

I wish the very best to the students and academic and non-academic staff of the school. I believe that it will continue to lead children towards success in the future.

**Ranil Wickremesinghe**
Prime Minister

23rd September 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி இராஜாங்க அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

இலங்கைத் திருநாட்டின் வடபுலத்தின் மத்தியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி/ வலைப்பாடு றோ. க. த. க. பாடசாலையானது 1919. 03. 22ஆம் திகதி அருட்பணியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் நூறாவது ஆண்டினைப் பூர்த்தி செய்துள்ளது. இப்பாடசாலை ஆரம்பத்தில் ஓர் ஆரம்பப்பாடசாலையாக காணப்பட்ட போதும், 1994இல் தரம் 6 ற்கு தரம் உயர்த்தப்பட்டு படிப்படியாக 1998இல் தரம் 9ற்கு தரம் உயர்த்தப்பட்டு வகை II பாடசாலையாக விளங்கியது. 2014ஆம் ஆண்டு தரம் 10ற்கு தரம் உயர்த்தப்பட்டு 2015இல் முதல் தடவையாக க. பொ. த (சா/ த) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றியுள்ளார்கள். இப்பாடசாலையானது இவ்வருடம் நூறாவது ஆண்டினைப் பூர்த்தி செய்து, இன்று நூற்றாண்டுவிழா கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு நூற்றாண்டுவிழா மலர் சிறப்புற அமைய வாழ்த்தி, இப்பாடசாலையின் பணி மேலும் வளர்ச்சியடைய இறைவனை பிராத்திக்கின்றேன்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன் (பா. உ)
கல்வி இராஜாங்க அமைச்சர்,
யாழ் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ :021 2280024 021 2221595,
:021 2280024 021 2221595,
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ :021 2280024 021 2221595,
:021 2280024 021 2221595,
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com



2019.10.25

**கல்விப் பணியில் ஒரு நூற்றாண்டு**

கிளிநொச்சி மாவட்டத்தின் அடிநாதமாய் விளங்கும் பூநகரி மண்ணின் கல்வித்துறை சார் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வலுச்சேர்க்கும் பாடசாலைகள் பலவற்றுள் **கிளி/வலைப்பாடு றோ.க.த.க** பாடசாலை ஆற்றிவரும் பங்கும் அளப்பரியதே! 1919களில் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சிப்பாதை நோக்கி பரிணமித்து இன்று பத்து தசாப்தங்களைக் கடந்தும் தனக்கே உரித்தான தனித் தன்மைகளோடும், பண்பாட்டு மரபியல்களோடும் தனது மாவட்ட மாணவர்களின் பல்பரிமாண வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வெறுமனே ஓரிரு ஆசிரியர்களோடும், மிகக் குறைந்தளவான மாணவர்களோடும் ஆரம்பப் பாடசாலையாக இயங்கத் தொடங்கிய இப்பாடசாலை மெல்லமெல்ல மாற்றம் பெற்று இன்று தன் கனதியான கல்விப்பணிக்கு கிடைத்த கௌரவமாய் தரம்.01 முதல் க.பொ.த.சாதாரண தரம் வரை 277 மாணவர்களையும், 23 ஆசிரியர்களையும் தன்னகத்தே கொண்டு இந்த மாவட்டத்தில் பெயர் சொல்லிச் சுட்டுகின்ற பாடசா்லைகளுள் ஒன்றாக மிளிர்கின்றமை மனநிறைவளிக்கிறது.

இப்பள்ளியால் உருவாக்கப்படும் மாணவர்கள் கல்வித்துறையில் மட்டுமன்றி, கலை, இலக்கிய ஆர்வலர்களாகவும், மனிதநேயப் பண்பாளர்களாகவும், இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ்கின்ற, மற்றவர்களை வாழ்விக்கின்ற மனிதம் நிறைந்த மனிதர்களாகவுமே செதுக்கப்படுகிறார்கள் என்பது இந்த மாவட்டத்திற்கே பெருமை. அருட்பணி வில்வரசிங்கம் அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்டு, அடுத்தடுத்த இடர்மிகு காலகட்டங்களில் பலதரப்பட்டோரின் இரத்தத்தாலும், வியர்வையாலும் வளர்ச்சிகண்ட இப்பள்ளி பல்வேறு இடர்களையும் இன்னல்களையும் தாண்டி, இடப்பெயர்வுகளிலிருந்தும், இழப்புக்களிலிருந்தும் எமது மக்களைப் போலவே மெல்லமெல்ல மீண்டெழுந்து இன்று நூறு ஆண்டுகளை கடந்து நிற்பதென்பது மிகப்பெரும் வரலாற்றுப்பதிவு.

இத்தகைய சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு பரந்து விரிந்த அளவில் கல்விப்பணிக்கும், சமூகப் பணிக்கும் அணிசெய்யும் இப்பள்ளி தன் கல்விப்பணிக்காய் பெரு வரப்பிரசாதமாய் பெற்றிருக்கும் தற்போதைய அதிபர், ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் மேன்மேலும் வளரவும், உயரவும் மனதார வாழ்த்துவதோடு, நூற்றாண்டு விழா சிறக்கவும், மலர் வெளியீடு நிறைவடையவும் இறை ஆசிகளை வேண்டிநிற்கிறேன்.

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
இணைத்தலைவர் – கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு,
கிளிநொச்சி

Shritharan,
Member of Parliament,
Jaffna Electoral District,
No:882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் வாழ்த்துச் செய்தி



அறிவே ஒளி. அறிவே ஆயுதம். அறிவே வழி. அறிவே பண்பு. அறிவே ஆற்றலுக்குத் தூண்டல். அறிவே செயலின் அடிப்படை. இத்தகைய அறிவை இளைய தலைமுறையிடம் வளர்த்தெடுக்கும் கல்விச்சாலைகளின் மேம்பாடே தனிமனித ஆற்றலின் வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் ஏதுவாகும். இந்த வகையில் பாடசாலைகளின் அபிவிருத்தியும் வளர்ச்சியும் முக்கியமானது. இதற்கு முறையான வளப்பகிர்வுகளும் ஒழுங்கான கண் காணிப்பும் சிறந்த முகாமைத்துவமும் நல்ல தலைமைத்துவமும் அவசியம். அதைப்போல, பாடசாலையோடு இணைந்த சூழலில் வாழும் மக்களின் பங்களிப்பும் தேவையானது. இவை அனைத்தும் முறையாக அமையுமிடத்தே மாணவர்களின் கல்வியும் அதன் வழியான அறிவும் மேம்படக்கூடியதாக இருக்கும். இதற்கான பங்களிப்பை அனைத்துத் தரப்பினரும் செய்ய வேண்டும்.

பாடசாலைக் கல்வியை அனைவரும் பெறக்கூடியதான நமது வரலாறு 100 ஆண்டு களுக்குள்ளானதே. இன்று அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள மாணவர்கள் தமக்கான கல்வி அறிவைப் பெறும் உரிமையைப் பெற்றுள்ளனர். ஆனாலும் இந்த உரிமை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் முறையான வளப்பகிர்வும் நிறைவான முகாமைத்துவமும் சில இடங்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் சமத்துவமற்ற கல்வியே நடைமுறையில் உள்ளது.

கிளி/ வலைப்பாடு றோ.க.த. பாடசாலையானது அனைவருக்கும் உரிய கல்வியை வழங்கும் நோக்கோடு உருவாக்கப்பட்டது. இன்று இந்தப் பாடசாலைக்கு 100 ஆண்டு வரலாறு. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் வரலாற்றை நமது அகக்கண் வழியாக நோக்கினால், அன்று வலைப்பாட்டுப் பிரதேசம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை உணர முடியும். போக்குவரத்து வசதி, மின்சாரம் போன்ற நவீன யுகத்தின் வளங்கள் எதுவும் இல்லா திருந்திருக்கும் இருந்தும் வலைப்பாட்டுப் பிரதேசம் ஆற்றல் மிக்க மனிதர்களாலும் வளம் நிறைந்த சூழலினாலும் கட்டமைக்கப்பட்டிருந்தது. இங்கே வாழ்ந்த மக்கள் பண்பிலும் ஒழுக்கத்திலும் ஊக்கத்திலும் சிறந்து விளங்கியுள்ளனர். இதனால்தான் இங்கே ஒரு பாடசாலை 100 ஆண்டுகளுக்கு முன்னே ஆரம்பமாகியிருக்கிறது. இந்தப் பாடசாலை இந்தப் பிரதேசத்தைப் போல படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று க.பொ.த சாதாரண தரத்தில் மாணவர்கள் பயிலக்கூடிய நிலைக்கு உயர்ந்துள்ளது. இதற்காக இதுவரை காலமும் உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், சமூகப் பெரியோர்கள், சமய குருவானவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அதிகாரிகள் அனைவரையும் நன்றியோடு நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கிறேன். இந்தப் பாடசாலையின் வளர்ச்சியானது மேலும் உயர்ந்து எதிர்காலத்தில் இங்கே உயர்தர வகுப்புகளும் கற்பிக்கப்படும் நிலை உருவாகும். அந்த நன்னாளை என் மனக்கண்களால் பார்த்து நிறைவடைகிறேன். அந்த நன்னாளுக்கு என்னுடைய முற்கூட்டிய வாழ்த்துக்கள்.

இதேவேளை இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் எமது பங்களிப்பை வழங்கக் கூடியதாக இருந்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியும் நிறைவும் அடைகிறேன். 2009 இல் ஆரம்பமாகிய மீள்குடியேற்றத்தோடு இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் நாம் கூடிய கரிசனை எடுத்திருந்தோம். இதற்கு இந்தப் பிரதேச மக்கள் அனைவரும் மனமொத்து ஆதரவை நல்கியிருந்தனர். இதனால் இந்தப் பாடசாலையின் புனரமைப்பும் அபிவிருத்தியும் துரித கதியில் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் பாடசாலையைத் தரமுயர்த்தும் நடவடிக்கையை நாம் மேற்கொள்ளவும் முடிந்தது. இந்தப் பிரதேசத்தை மின்மயப்படுத்தி வளப்பகிர்வுகளைச் சரியாக மேற்கொண்டிருந்தோம். இதனால் முன்னெப்போதுமே இல்லாத அளவில் துரித வளர்ச்சியில் ஏற்பட்டது. இன்று நூற்றாண்டு விழாக்காணும் இந்தப் பாடசாலையின் வரலாற்றுப் பெருமிதத்தில் அனைவரும் திழைப்பதையிட்டு மகிழ்கிறேன். இந்த மகிழ்ச்சியில் நாமும் இணைந்து கொள்கிறோம். எதிர்காலத்தில் மேலும் இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு எமது உயரிய பங்களிப்புக்கள் நிச்சயமாக வழங்கப்படும் என்பதை மகிழ்வோடு தெரிவிக்கிறேன்.

100ஆண்டு வரலாற்றுச் சிறப்புக் காணும் வலைப்பாட்டின் அறிவு அன்னைக்கு எமது வாழ்த்துக்கள்.

சமத்துவமும், சமூக நீதியும் தளைக்கட்டும் .
விடுதலை பெற்ற நல்வாழ்வு நிலைக்கட்டும்.

முருகேசு சந்திரகுமார்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
தலைவர், சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ வட மாகாண ஆளுநரின் வாழ்த்துச் செய்தி



வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை 1919 இல் நிறுவப்பட்டதாக அப்பாடசாலையின் வரலாறு கூறுகின்றது. இன்று 1ம் வகுப்பு தொடக்கம் கல்விப்பொதுத் தராதர சாதாரண தரம் வரைக்கும் 277 மாணவர்களைக் கொண்டுள்ள இப் பாடசாலையில் 23 ஆசிரியர்கள் கற்பிப்பதாகவும் அறிய முடிகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குக் கரையோரக் கிராமமான வலைப்பாட்டில், இடைநிலைக் கல்வியை வழங்கக்கூடியதாக இப்பாடசாலை அமைந்திருப்பது அக்கிராம மக்களுக்கும் அயற்கிராம மக்களுக்கும் நன்மையளிப்பதாகவுள்ளது.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் இக்கிராமங்களின் வளர்ச்சிக்கும் நேரடித் தொடர்பு உள்ளது. ஆகையால் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இப்பாடசாலை மேலும் மேலும் வளர்ச்சியடைந்து அப்பிரதேச மக்களுக்கு கல்வியறிவை ஊட்டுவதுடன், அங்கிருந்து க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்து வெளியேறும் மாணவர்கள் பொருத்தமான வேறு பாடசாலைகளில் உயர்தரம் கற்று சித்தியடைந்து மேலும் உயர்கல்வியையும் பொருத்தமான தொழிற்கல்வியையும் கற்று தமது மக்களுக்கு சேவை செய்ய முன்வர வேண்டும்.

இதற்கேற்ற வசதிகளையும் வாய்ப்புக்களையும் துறைசார்ந்த அரச நிர்வாகிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனவும் அப்பிரதேசத்தின் நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்திக்கு கல்வி வளர்ச்சி உதவும் வகையில் கல்வி நிர்வாகிகள் ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

நூற்றாண்டுவிழாக்காணும் பாடசாலையின் மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

கலாநிதி. சுரேன் ராகவன்
ஆளுநர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை

கிளி/ வலைப்பாடு றோ.க.த.க பாடசாலையின் நூற்றாண்டு விழா மலருக்கான வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தூரநோக்கு சிந்தனையுடன் அருட்பணியாளர் அவர்களால் 1919.03.22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, வாழ்வாதாரக் கல்வியை இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு வழங்க முன்வந்தமை ஸ்தாபகரின் நல்லெண்ணத்தைத் துல்லியமாகப் புலப்படுத்துகின்றது. செயலூக்கமும் வினைத்திறனும் மிக்க அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் உதவியுடன் படிப்படியாக உயர்வு கண்டு, இன்று நூற்றாண்டை பாடசாலை நிறைவு செய்கின்றது.

சமூகத்திற்குத் தேவையான கல்வித்துறைகளை இனங்கண்டு வளப்படுத்த முனைந்தமையும் காலவோட்டத்தின் இழுவிசைக்குத் பாடசாலையை இசைவாக்கம் செய்து, முன்னணியில் செல்கின்ற போக்கினையும் உணரமுடிகின்றது. தற்போதைய அதிபர் திரு. மரியநாயகம் மரியராசா அவர்களின் ஆளுமையும் மாணவர்கள் கொண்டுள்ள அக்கறையும் பாடசாலையின் தரம் மேலோங்குவதற்கு காரணமாயிற்று. அந்தவகையில் புலமைத்துவம் பெற்ற ஆளணியினருடன் கூட்டிணைந்து செயற்படுகின்ற இப்பாடசாலை வருங்காலத்தில் சகல வளங்களையும் பெற்று, கல்வியில் மேம்பட நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செ. உதயகுமார்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி



கிளி/ வலைப்பாடு றோ.க.த.க பாடசாலையினால் வெளியிடப்படும் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"கொடையெனும் உயர்ந்த பண்பால்
கொடுத்திடும் கல்வி மட்டும்
பெறுபவர் அன்றி கொடுப்பார்
இருவருக்கும் இன்பம் பயக்கும்"

1919 ஆம் ஆண்டு அருட்பணியாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையானது தனது கல்விச்சேவையை செவ்வனே ஆற்றிவருகின்றது. 'இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்' இத்தலைவர்களை உருவாக்கும் பொறுப்பில் முக்கிய பங்கு வகிப்பது பாடசாலைகளாகும். 'ஒரு பாடசாலை திறக்கப்படும்போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படும்' என்பது பழமொழி. அதற்கேற்ப, நல்ல மாணவர்களை உருவாக்குதல் பாடசாலைகளின் பணியாவதுடன் அவர்களின் எதிர்காலத்தினை நல்வழி படுத்தவேண்டிய பாரிய பொறுப்பும் கடப்பாடும் அதிபர் மற்றும் ஆசிரியர்களினுடையதாகும்.

இம் மலரானது பாடசாலை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் எழுத்தாக்கங்களை தாங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும். இம் முயற்சியானது மாணவர்களது எழுத்தாற்றல் திறனை விருத்தி செய்வதுடன் உலகளாவிய விடயங்களை மாணவர்கள் அறிந்து கொள்ளவும் இம் மலர் களம் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கல்வியில் மட்டுமல்ல இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் பங்குபற்றுவதன் மூலம் அவர்களின் ஆளுமை விருத்தியடையவும் அவர்கள் தமது எண்ணங்களை மெருகூட்டவும் உதவுகின்றன.

இப் பாடசாலை நூற்றாண்டு விழா மலரினை வெளியிடுவதிலும், பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக்காட்டுவதிலும் இப்பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்துள்ளமையினை முன்னிட்டு அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. இளங்கோவன்.
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக்கல்வி பணிப்பாளரின் வாழ்த்துரை

கிளி/ வலைப்பாடு றோ. க. த. க. பாடசாலையின் நூற்றாண்டுவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதனை இட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எமது வலயத்தில் நூற்றாண்டினை கண்டு மகிழ்கின்ற குறிப்பிட்ட பாடசாலைகளில் கிளி/ வலைப்பாடு றோ. க. த. க. பாடசாலையும் ஒன்றாகும்.

இப்பாடசாலையின் உருவாக்குனரான அருட்பணியாளரின் கனவினை நனவாக்கும் பொருட்டு இக்கிராமத்து மக்களிற்கான கல்விச் செல்வத்தினை கடந்த நூறு ஆண்டுகளாக இப்பாடசாலை வழங்கி வருகின்றது. 1919. 03. 22ம் திகதி ஓர் ஆரம்ப பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு 2015ம் ஆண்டு தரம் 11 வரையான வகுப்புக்களை கொண்ட வகை II பாடசாலையாக விளங்குகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தொலைதூரத்தில் உள்ள கிராமப்புற பாடசாலையாக இருந்தாலும் படிப்படியாக கல்வி அடைவு மட்டத்திலும், விளையாட்டுத்துறைகளிலும் வளர்ச்சி கண்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. இப்பாடசாலை தரம் 5 புலமைப்பரீட்சையில் வருடா வருடம் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்து வருவதும், 2016இல் பெண்கள் அணி உதைபந்தாட்டத்தில் தேசியமட்டத்தில் பங்குபற்றியமையும் 2019ம் ஆண்டு தரம் 5 இனையும் 6இனையும் உள்ளடக்கிய Milo Cup அணியின் தேசிய மட்டத்தில் பங்குபற்றியமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாடசாலையில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை மூலம் இக்கிராமத்தின் கல்வி முன்னேற்றப்பாதையில் அமைந்து செல்வது இம்மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

வினைத்திறனுடன் உள்ள வளத்தினைப் பயன்படுத்தி வெற்றிகரமாக இயங்கிவரும் அபிவிருத்திப் பாதையில் நடைபோடும் கிளிநொச்சி வலயப்பாடசாலைகளில் ஒன்று என்பதில் பெருமை கொள்கின்றேன்.

கல்வியே வாழ்வின் ஒளி எனும் மகுட வாசகத்தினைக் கொண்டு கல்விச் செல்வத்தினை மாணவர்களுக்கு அள்ளி வழங்கி வருகின்ற இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகின்றேன்.

கி. கமலராஜன்
வலயக்கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பூநகரி பிரதேச செயலகப் பிரிவின் தெற்கு பகுதியில் கடலும் கடல் சார்ந்த இடமுமான பொன்னாவெளி கிராம சேவையாளர் பிரிவின் வலைப்பாடு கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்து வதற்காக 1919ம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தி இரண்டாம் திகதி அருட்பணியாளரினால் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவரும் பாடசாலையாக விளங்கும் கிளி / வலைப்பாடு றோ.க.த.க பாடசாலையின் நூற்றாண்டு மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் கோட்டக்கல்வி பணிப்பாளர் என்ற வகையில் உவகை அடைகின்றேன்.

முயற்சி திருவினையாக்கும் என்ற நல்வார்த்தையை கையாற்கொண்டு இக் காலப்பகுதியில் பணியாற்றிய அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் போன்றோரின் கூட்டான விலைமதிக்க முடியாத உழைப்பை வழங்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பை வழங்கியுள்ளமை பாராட்டுக்குரியது.

அந்த வகையில் பாடசாலையின் வளர்ச்சி வானளவில் நிற்கும் கவர்ச்சியான கட்டிடங்களைக் கொண்டு மதிப்பீடு செய்வதல்ல. எந்த அளவிற்கு கல்விமான்களையும் புத்திசாலிகளையும் உருவாக்கியது என்பதில் தான் வளர்ச்சி என்பது தீர்மானிக்கப் படுகின்றது. அந்த வளர்ச்சியின் ஒரு அங்கமாகத்தான் இவ் வித்தியாலயமும் 1919ம் ஆண்டு ஒரு ஆரம்ப பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு காலப்போக்கில் 1994ம் ஆண்டு முதல் தரம்2 பாடசாலையாக தரம் உயர்ந்து தற்போது கல்வி பொது (சா/த)ம் வரை கல்வி புகட்டும் ஒரு பாடசாலையாக மிளிர்ந்து வருவதினை நாம் கண்கூடாக கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.

காலத்தின் தேவைகருதி சமுதாயத்திற்கு அதன் வரலாற்றை எடுத்தியம்பும் நோக்குடன் வரலாற்று ஆவணமாக நூற்றாண்டு விழா மலர் வெளிவருவது நாளை வரும் சமுகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் தூரநோக்கம் கருதி இம் மலர் வெளிவருவதை உளமார வாழ்த்துகின்றேன். இதற்காக உழைக்கும் அதிபரையும் தோளோடு தோள் நின்று உழைக்கும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

ஆ. உதயணன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னை நாள் வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

நூற்றாண்டு காலம் அறிவொளி பரப்பிவந்துள்ள வலைப்பாடு உரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

சிறிய பள்ளியாக ஆலய முன்றலில் தொடங்கி வைக்கப்பட்ட பள்ளிக் குழந்தைகள் வளர்ந்து வருவதுபோல் காலச்சக்கரத்தில் தனது வேளை வரும்வரை காத்திருந்து நூற்றாண்டு காலவேளையில் நிறைவான கல்விப் பணியினை தன்னகத்தே உள்வரும் மாணவச் செல்வங்களுக்கு வழங்க பள்ளி தன்னைு அர்ப்பணித்துள்ளமை வலைப்பாடு பெற்றுள்ள பெரும் பாக்கியம்.

இந்நூற்றாண்டு பயணத்தில் பலர் தமது வாழ்வை அர்ப்பணித்தும் சிலரின் துணிவுமிக்க தூரநோக்குச் செயற்பாட்டினால் பள்ளி தொடர் வளர்ச்சி பெற்றமையும் பாராட்டுக்குரியவை.

எனது கல்வி நிருவாகப் பணியில் வலைப்பாட்டு பள்ளியில் ஆறாம் ஆண்டை உருவாக்க எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

மக்கள் வாழ்வு செழிப்புடன் வாழ்வடைவதற்கு வலைப்பாட்டுப் பள்ளி பல வழிகளிலும் உழைத்துள்ளது என்பது நூற்றாண்டு விழாவின் செய்தியாக அமையட்டும்.

த. குருகுலராசா
முன்னை நாள் கல்விப் பணிப்பாளரும்
முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளி/வலைப்பாடு றோ.க.த. கலவன் பாடசாலையின் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துரை வழங்க சந்தர்ப்பம் ஏற்பட்டமையை பெரும் பேறாக எண்ணி பெரிதும் மனம் மகிழ்வடைகின்றேன் நான் கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்த காலத்தில் திரு. ம.மரியராசா அவர்களை இப்பள்ளிக்கு அதிபராக நியமித்ததை எண்ணி இன்றும் மகிழ்வடைகின்றேன். அவர்கள் இப்பள்ளியிலேயே சிறு அறை ஒன்றில் தங்கியிருந்து தன்னுடைய பணியை மிகவும் திறம்பட ஆற்றியதை நான் நன்கு அறிவேன். நகர்ப் புறப் பள்ளிகளின் அதிபர்களாக, ஆசிரியர்களாக வருவதற்கு போட்டா போட்டி உள்ள நிலையில் இங்கு வந்து, கிராமப் புறப் பள்ளிக்கு விருப்புடன் செயலாற்றும் அதிபர், ஆசிரியர்களை பெரிதும், மதிப்புடன் எண்ணி வாழ்த்துகின்றேன்.

கல்வி அலுவலகங்களில் இருந்து மிகவும் தொலைவினில் மிகவும் கடினமான போக்குவரத்து பாதைகளையும் தாண்டிய ஊரிலேயே இப்பள்ளி அமைந்துள்ளது. எனினும் மிகவும் அழகிய இயற்கையாக அமைந்த கிராமிய சூழலில் இப்பள்ளி அமைந்து கல்விச் செல்வத்தை வாரி வழங்கி வருகின்றது. இவ்வாறான பள்ளிகளில் கல்விப் பணியாற்றுபவர்களுக்கு என்றென்றும் இறைவனது அருள் கடாட்சம் கிடைப்பது உறுதி.

"பிச்சை புகினும் கற்கை நன்றே" எனும் ஔவையாரின் முது மொழிக்கு ஏற்ப வறிய கிராமமாக இருந்தாலும் பிள்ளைச் செல்வங்களுக்கு கல்வியை வழங்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட பெற்றோரினையும் இக்கிராமத்தில் நான் கண்டுள்ளேன். அவர்களது கனவுகளும் இந்நூற்றாண்டு விழா சிறப்பது போல் சிறக்க வாழ்த்துகின்றேன்.

காலை விடியும் பொழுதினில் துடுப்பெடுத்து படகோட்டி கடலோடி கரைசேரும் விடா முயற்சி போல உங்கள் பாடசாலையின் வளர்ச்சியினிலும், பிள்ளைகளின் கல்விப் பயணத்திலும் உறுதியாக இருந்து உங்கள் கல்வியன்னையை வளர்த்திடுவீர் என இறையாசி வேண்டி நிறைவு செய்கின்றேன்.

க.முருகவேல்
ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளரது இதயத்தில் இருந்து

கிளி/ வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை தனது நூறாவது ஆண்டு விழாவினை முன்னிட்டு வெளியீடு செய்கின்ற இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனை இட்டு பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

உலகினில் காணப்படுகின்ற செல்வங்களுள் எவரினையும் கவர்ந்து செல்ல முடியாத செல்வமாகிய கல்விச் செல்வத்தினை 100 ஆண்டுகளாக இக்கிராமத்து மக்களுக்கு வாரி வழங்கி வருகின்ற இப்பாடசாலை எனது பணிக் காலத்தில் கல்வி, விளையாட்டு என தனது கால்களினை முன்னோக்கி வைத்ததனை நான் நன்கறிவேன். இப்பாடசாலையின் அதிபரான திரு. ம. மரியராசா அவர்கள் கடின உழைப்பும், அர்ப்பணிப்பும், கிராமப்புறப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆர்வமும் கொண்டவர். அவரது வழிநடத்தலில் இவ்விழா சிறப்புற அமைய எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

கடலலை தாலாட்ட கிராமப்புற மணம் கமழும் இப்பிரதேச மக்களும் படிப்படியாக கல்வியில் வளர்ந்து வருகின்றமையை கண்கூடாகக் காண முடிகின்றது. உலகிற்குத் தேவையான நற்பிரசைகளை உருவாக்குகின்ற கலைக் கூடங்களாக கிராமங்களில் பாடசாலைகளின் பணிகள் மகத்துவம் மிக்கது. அந்த வகையில் இக்கிராமத்து மக்களுக்கு இப்பாடசாலையே கலங்கரை விளக்காக அமைந்து நிற்கின்றது. இதில் பல கஸ்டங்களின் மத்தியிலும் பணியாற்றுகின்ற அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நிறைவாகப் பாராட்டுகின்றேன். இக் கல்வித்தாயின் தலைசாய்த்து பணியாற்றியவர்கள் மேன்மை நிலையில் இன்று இருக்கின்றார்கள் என்பதும் சிறப்பான ஒரு விடயமாக இருக்கின்றது. இந் நிகழ்வு சிறப்பாக நடைபெற உழைத்த அனைவரையும் பாராட்டி வாழ்த்துக் கூறுகின்றேன்.

நன்றி

கு.தர்மரட்ணம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கரைச்சிக் கோட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்
எண்ணும் எழுத்தும் கண்ணாகும்"

எனும் வாக்கிற்கு இணங்க, இன்று எம் மண்ணில் நூற்றாண்டு விழாக் காணும் கி/ வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை சமூகத்திற்கும் நூற்றாண்டு விழா மலர்க் குழுவினருக்கும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இப்பாடசாலை கத்தோலிக்க குருமார்களினால் ஆரம்பிக்கப்பட்டது. வரலாற்று ரீதியாக பாண்டிய குருகுல பரதர் வாழும் நெய்தல் நில பண்பாட்டைக் கொண்ட வலைப்பாட்டு கிராமத்தில் கல்வி ஒளியேற்றி என்னை இக்கிராமத்தில் முதல் ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்வி பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக கல்விப்பணியுடன் சமூகப்பணியாற்ற ஆளாக்கிய பாடசாலையை வாழ்த்தி வணங்குகிறேன்.வலைநகரின் விசுவாச பெட்டகமாக விளங்கும் தூய அன்னாள் ஆலயம் அருகே அமைந்த பாடசாலையில் எனது ஆரம்பக் கல்வியை பயின்றேன் என்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எனது உயர்வுக்கு மட்டுமல்ல, ஏனைய மக்களின் உயர்வுக்காக கல்விப் பணியாற்றி அமரத்துவமடைந்த குருமார்கள், அருட்சகோதரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரையும் நூற்றாண்டு விழாவில் நினைவு கூருவது பொருத்தமானதாகும்.

ஆரம்ப பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு இடைநிலைப் பாடசாலையாக வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு அயராது உழைக்கும் தற்போதைய அதிபர், ஆசிரியர் குழாமுக்கும் எனது பாராட்டுக்கள்!!

கிராமத்தின் ஒளிவிளக்காக திகழ்ந்து வலைப்பாட்டு சமூகத்தின் கல்வி, கலை, பண்பாடு, விளையாட்டுத் துறையிலும் பலர் உருவாக களமாக அமையும் இப்பாடசாலை பல நூற்றாண்டு சேவை புரிய வாழ்த்துகிறேன்!!!

மு. எமிலியாம்பிள்ளை
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
பிரதேச சபை உறுப்பினர்
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னை நாள் ஆசிரியரும் யாழ் வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரது வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கக்கரையில் பூநகரிப் பிரதேசத்தின் தென் பகுதியில் அமைந்த நெய்தல் நிலத்தின் இயல்புகளை தன்னகத்தே கொண்ட வலைப்பாடு எனும் கிராமம் 100% மீன்பிடித் தொழில் சார் பொருளாதார நடவடிக்கைகளை வாழ்வாதாரமாகக் கொண்ட கத்தோலிக்க சமூகம் ஆகும். இக்கிராமத்தின் அச்சாணியாக விளங்கும் பாடசாலை 2019 ல் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதோடு ,நினைவு மலரினையும் வெளியிடுகின்றது. இந்நினைவு மலரிற்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

இப்பாடசாலை தனது 100 ஆண்டு கால வரலாற்றில் பயணித்த தடங்களில் தியாகச் செம்மல்களின் தியாகங்கள், அர்ப்பணிப்புள்ள அறிவு சார் தலைமுறைகளின் வழிகாட்டல் கள் ஆகியவற்றுடன் இன்றும் விடி வெள்ளி நோக்கிப் பயணிக்கிறது. காலத்தின் மாற்றத் திற்கு ஏற்ப இவ் வலைப்பாட்டுச் சமூகம் வளர்ச்சிப்பாதையில் உலகம் போற்றும் மாற்றங் களை தன்னகத்தே கொண்டு சாதனைகள் படைக்கக்கூடிய நற்பிரசைகளை மேலும் மேலும் உருவாக்கவும், உருவாகவும் ஆசித்து வாழ்த்துகிறேன்.

ப.சசிக்குமார்
முன்னாள் ஆசிரியர் ,
உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) ,
யாழ் வலயக் கல்வி அலுவலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி



எமது பூநகரி பிரதேச செயலக பிரிவில் உள்ள பிரதானமான பாடசாலைகளில் கிளி/ வலைப்பாடு றோக.த.க பாடசாலையும் ஒன்று இப் பாடசால 100வது ஆண்டு நிறைவினை கொண்டாடுவதையிட்டு பூநகரி பிரதேச செயலர் என்ற ரீதியில் நான் பெரு மகிழ்வு கொள்கின்றேன்.

வலைப்பாடு கிராம மக்கள், கல்வி அறிவியியலில் உயர்ச்சி அடையும் பொருட்டு 1919ம் ஆண்டு அருட்பணியாளரினால் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலையானது பல சவால்களையும் தடைகளையும் தாண்டி படிப்படியாக தரம்-6, தரம்-10 என உயர்த்தப்பட்டு நூறாவது ஆண்டு நிறைவில் க.பொ.த.சாதாரணம் வரையும் உயர்த்தப்பட்டமையானது மகிழ்ச்சிக்குரியது. இது அப்பிரதேசமக்களின் வாழ்வியலில் தாக்கங்களை ஏற்படுத்தும் செயற்பாடாக நோக்கப்படுகிறது.

இப் பாடசாலை கல்வியில் சிறந்து விளங்குவது மட்டுமல்லாமல் கலை, இலக்கிய முயற்சியிலும் மேலோங்கிக் காணப்படுவதோடு விளையாட்டுத் துறையிலும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்திருப்பது பாராட்டுக்குரியது ஆகும்.

நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இப் பாடசாலையானது எதிர் காலத்தில் பல சாதனைகள் படைத்து வளர்ச்சியடைய வேண்டும். இவ் விழா சிறப்பிக்கும் வண்ணம் வெளியிடப்படும் மலர் சிறப்புற என் வாழ்த்துக்கயையும், ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.ச.கிருஸ்ணேந்திரன்
பிரதேச செயலர்
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச்செய்தி

வலைப்பாடு றோ.க பாடசாலை என்னும் கலைக்கோவில் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இத் தருணத்தில் பாடசாலைச் சமூத்தினருக்கு எனது வாழ்த்துக்கள், பாராட்டுக்கள், ஆசியை கூறி நிற்கின்றேன்.

ஒரு பாடசாலையைத் திறப்பது பல மறியல் கூடங்களை மூடுவதற்கு சமம் என்பார்கள். காரணம் பாடசாலைகள், குடும்பத்திற்கு அடுத்ததாக குழந்தைகளை உருவாக்கும் உயர்ந்த விளைநிலமாகும். நான் 1989-1991களில் பங்குத்தந்தையாக இருந்த போது இராக்கினி என்னும் பெயர் கொண்ட அதிபரும், ஒரு ஆசிரியர் மட்டும் பணிபுரிந்தார்கள். தற்போது 277 மாணவர்கள் , 23 ஆசிரியர்களுடன் வளர்ச்சியடைந்ததையிட்டு மகிழ்வு அடைகிறேன். அக்காலத்தில் இப்பாடசாலையை தரமுயர்த்துவதற்கு உள்ளூர், வெளியிடத்து சக்திகளின் தடைகள் இருந்ததையும் நான் நன்கு அறிவேன்.எனினும் அத் தடைகள் எல்லாவற்றையும் தாண்டி இன்று பெருவிருட்சமாக வளர்ச்சியடைய உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், அனைத்து நலன் விரும்பிகட்கும் எனது பாராட்டுக்கள்.

இக் கலைக்கோயில் மேலும் வளர்ச்சியடைந்து நற்பண்புகள் கொண்ட மக்களை உருவாக்கும் சிறந்த விளைநிலமாக திகழ இறை அருள் வேண்டி நிற்கின்றேன்.

வாழ்த்துவது
அருட்பணி. கி. ஜோ. ஜெயக்குமார்
பங்குத்தந்தை- அச்சுவேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

நெய்தல் அன்னை மடிதவழும், தூயஅன்னாள் காலடி திகழும், வலைப்பாட்டுப் பாடசாலையே, இன்னும் நூறாண்டுகள் நீ வாழ வாழ்த்துகின்றேன். ஆண்டவரை எப்போதும் போற்றிப் புகழ்வேன்.

**1994தொடக்கம் 96 வரை றோ.க வலைப்பாடசாலையின்**

**நீங்காத நினைவுகள்.**

இங்கு தொண்டராசிரியராக நான் கல்வி கற்றுக் கொடுத்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். அது எந்தவொரு வசதிகளுமில்லாத காலப்பகுதியாகும். போரின் மத்தியில் பல கஸ்ரங்களை அனுபவித்தோம். போக்குவரத்து, உணவு, மின்சாரம் இவை எதுவுமில்லாத நெருக்கடி நிறைந்த காலமாக இருந்தாலும் ஆன்மீக வளர்ச்சியும், ஆழமான உறவும் இங்கு நிதைத்திருந்தது. வறுமை, இல்லாமை, இயலாமை, என்றிருந்தாலும், அதிலும் ஓர் திருப்தியை அனுபவித்த காலமாகும். அக் காலப்பகுதிளில் அதிபராக திரு. ஞானப்பிரகாஷம் என்பவரும், உப அதிபராக அருட் சகோ. எலிசபெத் என்பவரும், தொண்டராசிரியர்களாக திரு பிரபாகரன், கலிஸ்ரா தொபியாஸ், ஸ்கொலஸ்ரிக்கம்மா ஆகியோருடன் நானும் இணைந்து பணியாற்றினேன். நாம் கடந்து வந்த அக் காலமெல்லாம் யுத்தகாலமாக இருந்தாலும், அதற்குள்ளும் பல வளர்ச்சிகளையும், மாற்றங்களையும் எம்மால் காண முடிந்தது. பற்பல முகங்கள் எம்மைத் தேடிவந்து நல் உள்ளத்துடன் நன்மைகள் பல செய்து பல வழிகளில் தரத்தை உயர்த்தி விட்டார்கள். எமது காலப்பகுதியில்தான் இப்பாடசாலை தரம் ஆறுக்கு உயர்த்தப்பட்டது. தொடர்ந்து இப்பாடசாலையின் இருபத்தைந்து ஆண்டுகளைப் பார்க்கும் வேளையில் பெருமைக்குரியதாகவும், இரட்டிப்பான மகிழ்ச்சிக்குரியதாகவும் இருக்கின்றது. இக்காலப் பகுதியிலே பணியாற்றிய அதிபர் ஆசிரியர்களின் கடின உழைப்பு அர்ப்பணிப்பு என்பதில் பெருமிதம் கொள்வதோடு அவர்களையும் வாழ்த்துகின்றேன்.

நூற்றாண்டு உண்மையாகவே மலர்ந்துவிட்டது இன்னும் மலர வாழ்த்துகின்றேன்.

திருக்குடும்ப அருட்சகோதரி
றேவதி சவிரி.
வேரவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

## வாழ்த்துவதில் மகிழ்கின்றேன்

வளமான எக்கொடையும், நிலையான எவ்வரமும் ஆண்டவரிடமிருந்தே வருகின்றன கடல் வளமும், நில வளமும் சிறந்து, இறைவனை மையப்படுத்தி, இறைநம்பிக்கையில் வாழ்வின் பயணத்தில் மகிழ்ச்சி கண்டு வாழும், வலைப்பாட்டின் வளர்ச்சிக்கு, வித்திடும் வகையில் அறிவையும், ஆளுமை விருத்தியையும், ஆன்மீக ஒழுக்க விழுமியங்களோடு சமூகப் பொருத்தப்பாடுடைய பிரஜைகளை உருவாக்கி, வழிகாட்டும் மையமாக விளங்கும் கிளி/ வலைப்பாடு றோ. க. த. க. பாடசாலை நூற்றாண்டு விழாக் காணும் வேளை, இந்நூற்றாண்டு விழா மலருக்கு இறை ஆசியோடு கூடிய வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வியுலகில் காலடி பதிக்க "கல்வியே வாழ்வின் ஒளி" என்னும் மகுடம் தாங்கி, வலைப்பாட்டின் சிறப்பிற்கு வித்திடும் அம்சங்களில் மிக முக்கிய அம்சமாக இப்பாடசாலை துலங்குவது கண்கூடான உண்மை. எனது ஆசிரியப்பணியின் ஆரம்பம் இப்பாடசாலை என்பதால், இப்பாடசாலை கற்றுத்தந்த அனுபவங்கள் எனது ஆசிரியத்துவப் பணிக்கு பல தடவைகளில் வழிகாட்டுவதை மறுக்க முடியாது. 2008 இல் இப்பாடசாலை இறுதி யுத்தத்தின்காரணமாக இடம்பெயர்ந்தது, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மயில்வாகனபுரம் என்னும் இடத்திலுள்ள பாடசாலை வளாகத்தில் இயங்கிக் கொண்டிருந்த காலத்தில், புதிதாக நியமனம் பெற்று, இப்பாடசாலையில் ஆசிரியராக இணைந்து கொண்டேன். முதல் நியமன கடமையேற்றல் கடிதத்தினை அவ்வளாகத்தின் மாமரத்தின் கீழ் நடைபெற்ற வகுப்பறைகளின் மத்தியில் அமர்ந்து எழுதிக்கொண்டிருந்த போது, போர் முழக்கங்களுக்கு மத்தியில், ஏனைய ஆசிரியர்களின் தைரியமூட்டும் வார்த்தைகளின் பலம் கண்டு உயிர்களுக்காக போராடி ரணமான காலத்தில் இறைதுணை நம்பி ஆசிரியப் பணிக்குள் கால் பதித்த முதல் அனுபவம் மறக்க முடியாத அனுபம். வலைப்பாட்டு மக்கள், பாடசாலை மாணவர் முதல் அதிபர், ஆசிரியர்கள் ஈறாக இடம்பெயர்ந்தது. இறுதி யுத்தத்தின் கோரப்பிடிக்குள் அனைத்தையும் இழந்து, உயிரை காத்துக் கொள்ள இடம் விட்டு, இடம் மாறி, ஓடிக் கொண்டிருந்த இக்கட்டான காலமும், சூழலும் அது. இச் சூழலில் இப்பாடசாலையில் நான் ஆரம்பித்த ஆசிரியப்பணி பல சவால்களையும், பணியின் தேவைகளையும், எனது ஆசிரியத்துவ அர்ப்பணத்தையும் அர்த்தமுள்ள விதத்தில் ஆரம்பித்து, பொறுப்போடு கடமையாற்ற உந்து சக்தி அளித்தது. இரண்டு மாதங்கள் இவ்விடத்தில் இடம்பெயர்வின் பல அசௌகரியங்களையும், சவால்களையும் தாண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் கற்க கூடிய சூழலை ஏற்படுத்தி, பாடசாலை இயங்கிக் கொண்டிருந்தது. அதன் பின், இறுதி போருக்குள் அகப்பட்டு, அகதி முகாம்களுக்குள் இயங்கிய பாடசாலை, பல இழப்புக்களோடு மீண்டும் 2010 ஆரம்பத்தில், வலைப்பாட்டின் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது.

அனைத்தையும் இழந்து, அனைத்தும் ஆரம்பத்திலிருந்து இயங்க வேண்டிய நிலையில், படிப்படியாக இப்பாடசாலை இயக்க நிலையை அடைய ஆரம்பித்தது. பல இழப்புக்களை சுமந்து வந்த மாணவர், சீருடை அற்ற நிலையில் கற்றலுக்கான உபகரணங்கள் எதுவும் இல்லாத நிலையில், வெறுமையான கூடத்துள் கல்வி கற்க ஆரம்பித்த மாணவரின் நிலையும், வீடுகள் இழந்து, உடமைகள் உறவுகள் இழந்து, மீண்டும் வாழ்வை கட்டியெழுப்ப துடித்த பாடசாலை சமூகத்தின் சூழலும், பணியின் தேவைகளை காத்திரமாக சிந்திக்க தூண்டியது. இக் காலத்தில் மிகவும் அர்ப்பணிப்போடு மாணவர், பெற்றோர், சூழலின் நிலை கண்டு, பணியாற்றிய அதிபர், ஆசிரியர்கள், உதவி செய்த நிறுவனங்கள், பங்குச் சூழல் அனைவரையும் நன்றியோடு இவ்வேளை நினைந்து பாராட்டுகின்றேன்.

போர், இடம்பெயர்வு, மீள்குடியேற்றம் போன்ற வித்தியாசமான இடர்பாடுகளை சந்தித்த காலத்தில், இங்கு பணிபுரியக் கிடைத்த சந்தர்ப்பத்திற்கு நன்றி கூறுகின்றேன். இழப்புகளோடு மூழ்கிவிடாது, வாழ்வைக் கட்டியெழுப்பத் துடித்து, ஆர்வத்தோடு முன்னேற்றப் பாதைக்கு வழிகாட்ட உழைத்த பாடசாலை சமூகத்தினரை பாராட்டுகின்றேன்.

படிப்படியாக வளர்ச்சிப் பயணத்தில் பயணிக்க ஆரம்பித்த பாடசாலை பல வெற்றிகளை கண்டது. தரம் 9 வரை, இயங்கிய பாடசாலை 2013 இல் தரம் உயர்த்தப்பட்டு தரம் 11 வரையாக இயங்கும் நிலை அடைந்தது பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவ்வாறு உயர்த்தப்பட்டதால், பல மாணவர்கள் கற்க கூடிய வசதி ஏற்பட்டு, கற்றவரின் தொகை அதிகரித்து வருவது மகிழ்ச்சியான விடயம். தொடர்ந்தும் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக் கப்பட்டு, இப் பாடசாலை உயர்வு நோக்கி பயணிக்க, செபங்களோடு கூடிய வாழ்த்துக்களை பெருமனதுடன் தெரிவிக்கின்றேன்.

வளமான சிறந்த ஆற்றல்கள், பல் திறமை கொண்ட சமநிலை ஆளுமைமிக்க, நுண்ணறிவு கொண்ட மாணவர்களை சமூகப் பிரஜைகளை இப் பாடசாலை படைத்திருப்பது கண்கூடான உண்மை. பல் துறை தேர்ச்சிபெற்ற பல வளங்களை, கற்ற சமுதாயத்தினரை இப்பாடசாலை சமூகத்திற்கு வழங்குவதற்கு, ஆரம்ப அத்திவாரமாக துலங்கியுள்ளது அனைவரும் அறிந்த உண்மை. இங்கு கற்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் வரை சென்று, உயர் தொழில் வாய்ப்புக்களோடு, நற் பதவிகளில் உள்ளார்கள். குரு, துறவிகள், அதிபர், ஆசிரியர்கள், சமூக சேவையாளர்களை இப் பாடசாலை உருவாக்கி கொடுத்திருக்கிறது. அனைவரின் ஆரம்ப கற்றலுக்கு அத்திவாரமாக அமைந்திருக்கிறது.

கல்வி, கலை, பண்பாடு, விளையாட்டு துறைகளில் அதிக ஆற்றல்களும், ஈடுபாடும், கொண்ட வளம் மிகுந்த சமூகத்தை கொண்ட இப்பாடசாலை, நூற்றாண்டு கடந்த நிலையில், மேலும் பல சாதனைகளை நிலைநாட்டி, உயர்தர நிலையில் துலங்கவும், பல கற்ற சமுதாயத்தை இப்பாடசாலை உருவாக்கவும், இறையாசி வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூற்றாண்டு காலத்தில் இப் பாடசாலையின் வளர்ச்சிப் பயணத்தில் உறுதுணையாக இருந்த பங்குத்தந்தையர்கள், திருக்குடும்பத் துறவிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் நன்றியோடு நினைக்கின்றேன்.

இவ் விழா சிறப்புற நடந்தேறவும், இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பாடசாலை சமூகத்தினருக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். தொடர்ந்தும் பல நூற்றாண்டுகளை இப் பாடசாலை கண்டு, தரமுயர்த்தப்பட்டு, கற்ற சமூகத்தை தொடர்ந்தும் இப்பாடசாலை படைக்க இறையாசிகளையும், வாழ்த்துக்களையும் பெருமனதோடு தெரிவிப்பதில் மகிழ்கின்றேன்.

தூய அன்னாள் எந்நாளும் இப்பாடசாலைக்காக பரிந்துரைக்கவும், வளங்கள் பெருகவும் இறையாசிகள்.

இறை ஆசீருடன்,

அருட்சகோதரி மு. றோஸ்மேரி (திகு)

மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உப அதிபரின் வாழ்த்துச் செய்தி

கடலோரக் காவியமே எல்லையில்லாக் கல்விக்கு இலக்கியமானவளே, பல்லோரும் போற்றும் பண்புறு திருமகளே பல்லாண்டு நீ வாழி பார் போற்ற நீ வாழி

1919ல் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை 100ஆவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மேலைத்தேச அமலமரித்தியாகிகளால் ஆரம்பிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு அதன் பின்பு சுதேச நிர்வாகிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

அண்மைக்கால இடப் பெயர்வுகளையும் வள இழப்புக்களையும்சந்தித்த போதும் தனத சொந்த இடத்தில் தற்போது வளமாக இயங்கி வருகிறது. எமது கல்விச் சமூகத்தின் அறுவடைகளாக விளங்கும் எமது மாணவர்கள் கல்வி அறிவும், பண்பாடும், ஆற்றல், நல்லொழுக்கமும் உள்ள சிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும். சமூகப்பற்றும் நேர் மனப்பான்மையும் சமநிலை ஆளுமையும் உள்ள பெருமை மிக்க சமூகத்தினை ஒழுங்கமைக்க வேண்டும். என வாழ்த்துவதுடன் இப் பாடசாலை இச் சமுதாயத்திற்கு ஆற்றி வரும் அளப்பரிய பணிகளைப் பாராட்டுவதுடன் எதிர்காலத்திலும் இப்பாடசாலையின் புகழ் தரணியெங்கும் பரவி சரித்திரம் படைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வாழ்த்துகிறேன்.

திருமதி.கி.மதுரநாயகம்
உப அதிபர்
கிளி/ வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்பக்கல்வி பகுதித் தலைவரின் வாழ்த்துச் செய்தி

தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்டு தம் மாணவச் செல்வங்களை வளர்த்து வருகின்ற பாடசாலைகளில் கிளி/வலைப்பாடு றோ.க.த.க பாடசாலையும் குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது.

எமது பாடசாலை ஆரம்பித்து நூறுவருடங்களைக் கடந்துள்ளமைக்காக எடுக்கப்படும் விழா இக்கிராமத்திற்கே உயரிய விழா ஆகும். பல்வேறு தடைகளையும் தாண்டி கல்வி வளர்ச்சியில் முன்னேற அடி எடுத்து வைத்து முன்னேறிக் கொண்டிருக்கும் இப்பாடசாலை நூற்றாண்டு விழாவையும் நூற்றாண்டு மலரினையும் வெளியிடுவதையிட்டு பெருமிதம் அடைகிறேன். இவ்விழாவினை கொண்டாட ஆக்கமும் ஊக்கமும் எடுத்த எமது பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள்அனைவரினதும் பணியும் மிகவும் கனதி மிக்கதே அந்த வகையில் பாடசாலையின் ஒட்டு மொத்த மாணவர் செயற்பாடுகள், சாதனைகள் பாடசாலை சமூகத்தின் பண்புகள் அனைத்தையும் வெளிக் கொணர்ந்து பாடசாலையின் பெருமைகளை பறைசாற்றி நிற்கும் இம் முயற்சிச் செயற்பாடுகள் தொடர்ந்து மாணவரின் முன்னேற்றத்திற்கு வழிகோல வேண்டும். அத்துடன் மாணவர் கற்றல் அடைவு மட்டங்களிலும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று இன்னும் பல சாதனை படைத்திட வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி.அற்புதராணி அரிச்சந்திரன்
ஆரம்பக்கல்வி . பகுதித் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி



பூநகரியின் தென்புலத்தில் அமைந்துள்ள மிகப் பழமை வாய்ந்த பாடசாலையான, கிளி/ வலைப்பாடு றோ. க. த. க பாடசாலை நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தின் முத்துக்களாக விளங்கியது தூய அன்னாள் ஆலயமும், வித்தியாலயமும். இவை இரண்டும் வலைப்பாடு மக்களின் இரு கண்களாகவே காணப்பட்டன. ஆரம்பத்தில் தரம் 1 - 5 வரை வகுப்புக்களை கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இடைநிலைப் பாடசாலையாக வளர்ச்சியடைந்து, 2015ம் ஆண்டில் முதல்முதலாக O/L மாணவர்கள் தோற்றி கல்வியின் வளர்ச்சிப் பாதையில் பல முன்னேற்றம் அடைந்துள்ள கல்வி, ஒழுக்கம், விளையாட்டு இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பல சாதனைகள் புரிந்துள்ளனர்.

இங்கு கல்வி கற்று உருவாகிய ஆசிரியர்கள், அறிவாளிகள், சமூகத்தொண்டர்களை வளர்த்த தொட்டிலாகவும், தாயாகவும், இக் கிரமத்திற்கு ஒளி கொடுக்கு கலங்கரை தீபமாகவும் இப் பாடசாலை திகழ்கின்றது.

பணிவு, எளிவு, தேவபக்தி, கடமை, கட்டுப்பாடு, பெரியோரை கனம் பண்ணுதல் போன்ற நற்பண்புகளை இப் பாடசாலை மாணவர்கள் தன்னகத்தே கொண்டுள்ளனர்.

தனக்கென மிக நீண்ட வரலாற்றையும், தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் கொண்டு விளங்கும் இப்பாடசாலை மென்மேலும் பல வளர்ச்சிகள் பெறவும், அறியாமை இருள் அகற்றி கல்வியே வாழ்வின் ஒளியாகக் கொண்டு வாழவும், இங்கு பல வசதியீனங்கள் மத்தியில் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்து வரும் அதிபர், ஆசிரியர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

கி.றொபேட்
செயலாளர்
பா.அ.குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அதிபர்



திரு. ம. மரியராசா (B.Com. HNDE, PGDE, MEd)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபரின் உள்ளத்தில் இருந்து ...

கிளி/ வலைப்பாடு றோ.க.த.க பாடசாலையானது இவ்வருடம் தனது 100வது ஆண்டு விழாவினை நிறைவு செய்வதனையிட்டு வெளியீடு செய்யப்படுகின்ற இம்மலருக்கான வாழ்த்துச் செய்தியை பெருமகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

எமது பாடசாலையானது 1919.03.22ம் திகதி அருட்பணியாளரினால் ஆரம்பிக்கப்பட்டு, படிப்படியாக இங்கு கடமையாற்றிய அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பான சேவையின் மூலம் தனது வளர்ச்சியினைக் கண்டுவந்துள்ளது.

2012.04.23ம் திகதி அன்று இப்பாடசாலையினை நான் பொறுப்பேற்றுக் கொண்டபோது 194 மாணவர்களினையும் 7 ஆசிரியர்களையும் கொண்டமைந்த தரம் 9 வரையான வகுப்புக்களுடன் விளங்கியது.

2014ம் ஆண்டு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்களின் முயற்சியினாலும், கௌரவ வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா அவர்களின் பங்களிப்புடனும், வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.க. முருகவேல், கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சு.தர்மரட்ணம் அவர்களின் வழிப்படுத்தலுடனும் தரம் 10ற்கு தரம் உயர்த்தப்பட்டு 2015ம் ஆண்டு முதல் தடவையாக தரம் 11 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் கா.பொ.த (சா/து)ப் பாரீட்சைக்குத் தோற்றினார்கள்.

இன்று 22 ஆசிரியர்களினையும் 277 மாணவர்களினையும் ஒரு பாடசாலைப் பணியாளரினையும் கொண்டு வலைப்பாட்டு கிராமத்திற்கு கல்விச் செல்வத்தினை வழங்குகின்ற கல்விக் கலையகமாக விளங்குகின்றது.

எமது மாணவர்களுக்கான கற்றல் சூழல்கள் பாடசாலையினைத் தவிர்ந்து வேறு எங்கும் இல்லாத நிலமையில் மாணவர்களினை கற்றலின் பால் ஈர்த்து கல்வித்தாயின் கரம் பற்ற வைப்பது என்பது மிகவும் கடினமான ஒரு செயற்பாடாகவே காணப்பட்டு வருகின்றது. இருப்பினும் தரம் 11 மாணவர்களின் கா.பொ.த (சா/து) ச் சித்தியினை நோக்குகின்ற போது 2015ம் ஆண்டில் இருந்து 6.25%, 16.67%, 18.18% 28.5% எனப்படிப்படியாக அதிகரித்து வருகின்றதனை அவதானிக்க முடிகின்றது. 2018 க.பொ.த. பெறுபேற்றில் கணித பாடத்தினை தவிர்த்து, க.பொ.த (உ/த) இல் இணையக் கூடிய மாணவர்களின் வீதமானது 66% ஆக இருப்பதனை நோக்க முடியும்.

எத்தனை வசதிக் குறைவுகள் இருந்தாலும் மாணவர்களுக்கான கல்வியை செவ்வனே வழங்கிவிடவேண்டும் என்பதில் எமது ஆசிரியர்கள் அயராது ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இங்கு இருக்கின்ற பெற்றோர்கள் கல்வியின் மீதான முக்கியத்துவத்தினை உணர்ந்து கொள்ளமுடியாதவர்களாக, அதற்காக தங்களை அர்ப்பணம் செய்யமுடியாதவர் களாக, சின்னத்திரைக்குள்ளும், சினிமாப் பாடல்களுக்குள்ளும், களியாட்டங்களுக்குள்ளும் மூழ்கிப் போயிருக்கின்ற துர்ப்பாக்கிய நிலையினையும் காணக்கூடியதாக உள்ளது. மேலும் போதைவஸ்து கடத்துவதற்கு ஏதுவான சூழல்களை உருவாக்கிக் கொடுக்கின்ற நிலமை களுக்குள்ளும் இருப்பதனால் கல்விப்படகேறி கரை சேருவதற்கு கடினத் தன்மைகளை இப் பிரதேசம் தன்னகத்தே கொண்டுள்ளது கவலைக்குரியதே.

பாடசாலையின் வளர்ச்சியே கிராமத்தின் வளர்ச்சி என்பார்கள். இன்றைய சூழலில் கிராமத்தில் காணப்படுகின்ற பிளவு பாடசாலையை வளர்த்தெடுப்பதில் தடையாக அமைவதற்கு ஆதிக்கம் செலுத்துவதினை அவதானிக்க முடிகின்றது. பாடசாலையின் வளர்ச்சியை விட தங்கள் தங்களது குழுக்களின் கௌரவங்கள் கனம் மிக்கது எனக் கருதுகின்றார்கள். இந்நிலை இக்கிராமத்தினை அதல பாதாளத்திற்கு கொண்டு போய் சேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை. பாடசாலையின் நலன் கருதி செயற்படுமாறு பெற்றோர்களிடம் அன்பாக வேண்டுகின்றேன்.

இதே போன்று தரம் 5 மாணவர்களின் சித்தி வீதங்களினை நோக்குகின்ற போது 70 புள்ளிக்கு மேல் பெற்றவர்கள் 2013ம் ஆண்டில் இருந்து 36%, 64%, 55%, 62%, 50%, 90%, 48% ஆக காணப்படுகின்றது. 2013ம் ஆண்டில் 1 மாணவியும், 2014ம் ஆண்டு -2 மாணவர்களும், 2018ம் ஆண்டு 2 மாணவர்களும், 2019ம் ஆண்டு 1 மாணவியும் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்றிருக்கிறார்கள். மேலும் எமது மாணவர்கள் கல்வி, விளையாட்டு, மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தங்களது திறமைகளை கோட்டம், மாவட்டம், மாகாணம் வரை காட்டி நிற்பதுடன், தேசிய ரீதியில் உதைப் பந்தாட்டத்தில் பெண்கள் அணியினரும் போட்டியிலும் பங்குபற்றியும் உள்ளார்கள். இத்தனைக்கும் எமது பாடசாலையில் முறையான மைதானம் எதுவும் இருக்கவில்லை.

தரமான கல்வியை வழங்க வேண்டுமாயின் தரமான பௌதீக வளங்களும் அவசியமானதாகும். ஆனால் எமது பாடசாலையைப் பொறுத்தவரை வகுப்பறைகளைத் தவிர ஏனைய கற்றல் சார் வள அறைகளோ, கணிணி அறையோ, நூலகமோ, விஞ்ஞான ஆய்வுகூட வசதியோ, களஞ்சிய அறையோ, ஆசிரியர் அறைகளோ, ஆசிரியர், அதிபர் விடுதிகளோ ஏதுமற்ற பாடசாலையாகவே கடந்த 100 ஆண்டுகளாக காணப்படுகின்றது.

எமது பாடசாலின் மகுடவாசகமான "கல்வியே வாழ்வின் ஒளி" என்பதற்கு இணங்க இறுதியாக, எமது பாடசாலை மாணவர்களினையும் நகரப் புறப் பாடசாலைகளின் மாணவர்களிற்கு இணையாக உருவாக்குவதற்கு எமது தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதுடன் நகரத்தில் இருந்து சுமார் 75km தூரத்திற்கு அப்பால் உள்ள கிராமப் பாடசாலையாக கொள்ளப்பட்டு ஒதுக்கப்படுகின்ற தன்மைகள் குறைக்கப்பட வேண்டும், வளர்க்கப்பட வேண்டிய சிந்தனைகள் உயர்த்தப்பட வேண்டும்.

இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடுகின்ற போது இப்பாடசாலையின் அதிபராக நான் இருப்பதற்கு சித்தம் கொண்ட இறைவனுக்கு நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதுடன், இன்றைய நிகழ்வினை அலங்கரித்திருக்கின்ற பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள், பி.க.பணிப்பாளர்கள், உ.க. பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், முந்னய நாள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

அதிபர்
கிளி/ வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை
வலைப்பாடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னை நாள் அதிபர்கள்

| | | |
|---|---|---|
| 1919 - 1944 : | | திரு. மார்ட்டின் |
| | | திரு. அல்போன்ஸ் |
| | | திரு. சூசைப்பிள்ளை |
| 1945 | - | திரு. ஜேம்ஸ் |
| 1956 | - | திருமதி. இ. பாக்கியநாதன் |
| 1993 | - | திரு. தி. ஞானப்பிரகாசம் |
| 2003 | - | திரு. சு. செல்வரெத்தினம் |
| 2007 | - | திரு. த. பிரபாகரன் |
| 2012 | - | திரு. ம. மரியராசா |



திருமதி. இ. பாக்கியநாதன்



திரு. சு. செல்வரெத்தினம்



திரு. த. பிரபாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை ஆளணி



**இருப்பவர்கள்** - (இடமிருந்து வலம்)

செல்வி. கி. வேர்ஜினி, திருமதி. கொ. கிருபாநந்தன், திரு. கோ. லக்ஷன், திரு. தீ. யஸ்ரின், அருட்சகோதரி சி. அன்ற்றா, திரு. ம. மரியராசா (அதிபர்),
திருமதி. கி. மதுரநாயகம் (உப அதிபர்) திரு. அ. அகஸ்ரின், திரு. இ. ரஜீவன், திருமதி. அ. அரிச்சந்திரன் (பகுதித்தலைவர் – ஆரம்பப்பிரிவு), திருமதி. ஸ். மேரி ஷாளினி,

**நிற்பவர்கள்** – (இடமிருந்து வலம்)

திருமதி. ச. தேவநாயகி, செல்வி. தி. சமிக்கா, திருமதி. ப. வினாஜினி, திரு. ந. ரவிசங்கர், திரு. ச. ஜெசிந்தன், திரு. ம. நிரோஜன், திரு. அ. குயின்ரெஸ்,
திருமதி. சா. ஆன்சோபியா, திருமதி. அ. அமலகௌரி, செல்வி. கோ. கிரிஷாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ம.பிரான்சிஸ்க்**

**ஆசிரியர்**

**தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்,**

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**


# 'இலங்கையர் எமக்குள் சமாதானமும் சகவாழ்வும் உருவாக்க வழிவகுக்கும் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்" பாடசாலைகளில் அறிமுகப்படுத்த வேண்டிய அவசிய பாடமாகும்

தொடர்பாடல் மனிதனுடைய அடிப்படைச் செயற்பாடுகளில் ஒன்றாகும். ஆள்களிடையே தொடர்புகளை உருவாக்குவதற்குத் தொடர்பாடல் அவசியமானது. "இருசாரரிடையே உணர்வுகள், எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள், அபிப்பிராயங்கள், அபிநயங்கள், சமிக்ஞைகள், முகக்குறிகள், குரலொலிகள், குறியீடுகள், சைகைகள், தகவல்கள் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றமை தொடர்பாடல்" எனக்கூறலாம். தொடர்பாடல் படிப்படியாக வளர்ந்து, இன்று வெகுசன ஊடகம் மற்றும் டிஜிட்டல் தொடர்பாடல் தொழில் நுட்பச்சாதனங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் தகவல் பரிமாற்றம்வரை விரிவடைந்து செல்கின்றது. தொடர்பாடலின் வளர்ச்சியால் உலகம் குடும்பமாகச் சுருங்கும் வண்ணம் மானுட இடைத்தொடர்புகள் வலுப்பெற்றுள்ளன. அன்றாடவாழ்வில் தொடர்பாடல் நுட்பங்களை அறிந்து, அதனை திறம்பட நடைமுறைப்படுத்துவதன் மூலம், நாம் செய்யும் அனைத்துக் காரியங்களையும் அற்புதமாகச்செய்து முடிக்கமுடியும் என்பதை அறிந்து வைத்திருப்பது அனைவருக்கும் நன்மையே.

## யுனெஸ்கோ அமைப்பின் குருன்வெல்ட் பிரகடனம்:

கல்வி, அறிவியல், பண்பாட்டு மற்றும் கலாசாரம் ஆகியவற்றை வளர்க்கும் ஐ.நா.வின் ஓர் அங்கமான யுனெஸ்கோ (UNESCO) அமைப்பினால் 1982ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட குருன்வெல்ட் பிரகடனத்தில் 'ஊடகத்தின் எதிர்மறையான தாக்கங்களிலிருந்து சிறுவர்கள் மற்றும் இளையோர்களைப் பாதுகாத்தல் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. இங்கு, ஊடகவிளங்கறிவு மற்றும் விமர்சனரீதியாக ஊடகத்தைநுகரும் மதிநுட்பம் என்பவற்றோடு சிறுவர்களிடையே படைப்பாக்கச் சிந்தனையையும் வளர்க்கவேண்டும்" எனும்கருத்தும் உற்றுநோக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. "பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவிலிருந்து மாணவர்களுக்கு ஊடகக்கல்வி வழங்கவேண்டும்" என்று யுனெஸ்கோ அமைப்புபரிந்துரை செய்ததும் இதன் காரணமாகவேயாகும்.

தொடர்பாடலும் ஊடகக்கற்கையினை மாணவர்கள் கற்கும்போது ஊடகவிளங்கறிவு, மதிநுட்பம் மற்றும் விமர்சனரீதியாக ஊடகத்தை நுகரும் அறிவாற்றலுடன் செயற்றிறன்மிக்க தொடர்பாடுநராக இருப்பார்கள். சமூக முன்னேற்றத்தில் முதுகெலும்பாக திகழும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடல், படைப்பாக்கரீதியான சிந்தனை மற்றும் ஊடகத்தகவல் உருவாக்கம் செய்யும் ஆற்றல், அபிவிருத்திசார் மற்றும் ஜனநாயக சிந்தனையால் நிறைவான பிரஜையாகத் திகழத்தேவையான அறிவு, திறன், ஆற்றல் மற்றும் நற்பழக்கவழக்கங்கள் போன்றவற்றை ஒரு மாணவரிடத்தில் உருவாக்கவல்லது. அதற்கு ஏற்ற வகையில் பாடவிடயங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இன்று ஒருவர் தான் சார்ந்து வாழும் சமூகத்துடன் வினைத்திறனான தொடர்பாடலை சாமர்த்தியமான முறையில் மேற்கொள்வதற்கு முடியாமல் போனதே முன்னேற்றங்கள் முட்டுக்கட்டையாவதற்கு மூலகாரணமாகிறது எனலாம். சிறந்த, ஒழுக்கமான, வினைத்திறனான மானுட இடைத்தொடர்புகள் உருவாக்கவல்ல தொடர்பாடல் அனைத்துத்தொழில்துறைகளின் வெற்றிக்கும் அத்தியாவசியம். இதனால் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் தற்காலத்தில் பிரியோசனமானதுமாகும்.

ஒருவருடைய மிகமுக்கிய பிரச்சினைகளில் ஒன்று முறையான தொடர்பாடலைச் செய்யமுடியாமையே. இதனால் ஆள்களிடைத் தொடர்பு முறிவடைந்து வேண்டாதபாரிய உறவுவிரிசல்கள் குடும்பம், சமூகம், சமயம், இனம் மற்றும் வேலைத்தளங்கள் வரை ஏற்படுவதற்குக் காரணமாகிறது. அத்துடன் இன்று எமது இலங்கைக்குள் இனங்களுக் கிடையே இனக்குரோதத்தையும் துவேசத்தையும் தூண்டிவிடுபவர்களாக மாறும் போக்கும், சமயங்களிடையே மதம் பிடித்தவர்களாக கருத்துக்களைப் பரிவர்த்தனை செய்பவர்களாக உருவாகப்பார்ப்பதும் வேதனைதருகின்றது. ஆனால் இவ் அழிவுச்செயல்களை விலக்கிச் சகவாழ்வுடன் வாழ்வதற்குப்பழகும் நிலைமையை உருவாக்குவதற்கு அரசு தொடர்ந்தும் செயற்பட்டுவருவதை நாம் மனதாரப்பாராட்டுகின்றோம். அரசின் இத்தொடர்செயற்பாடுகளுடன் பாடசாலைகளில் தொடர்பாடலும் ஊடகக்கற்கையினை கட்டாயபாடமாக்கி மாணவர் களிடையே புரிந்துணர்வுடன்-சகவாழ்வுடன் கூடிய ஒரு நிலைமையை இலங்கைக்குள் உருவாக்க நாம் முன்வரவேண்டும்.

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் கற்பதனால் மாணவருக்குக் கிடைக்கும் நன்மைகள்:-

மாணவர் தன்னுடைய அனுபவம், படைப்புத்திறன், ஆய்வுத்திறன் என்பவற்றின் ஊடாகத்தனக்குள் எழுகின்ற ஒருபுதிய சிந்தனையை, வெளிப்படுத்துவதற்குத் தொடர்பாடல் மிகஅவசியமானது. இச்செயன்முறையினை கச்சிதமாக மேற்கொள்வதற்குத் இப் பாடநெறி அற்புதமாக வழிகாட்டுகின்றது. மாணவரின் நடத்தைசார் அபிவிருத்தி எனும் பரிமாணத்தை நோக்குகையில் "கல்வியின் இலக்கானது அறிகைசார் அடைவினை தொழில்சார் உலகுடன் தொடர்புபடுத்தலாக அமைகிறது". எனவே, பாடசாலைக்கு வெளியேயான உலகுடன், கற்பவர் தொடர்பு கொள்வதற்குத் தேவையான தகுதிப்பாடுகளை மேம்படுத்த இப்பாடநெறி அற்புதமாக வழிகாட்டுகின்றது. இப்பாடத்தினை அறிமுகப்படுத்தப்பட்டதன் பிரதான குறிக்கோளாக உயர் தொடர்பாடல் மற்றும் ஊடகத்தேர்ச்சியுடனான, சகவாழ்வுடன் வாழ்வதற்குப்பழகிய, நிலவுகின்ற தொடர்பாடல் மற்றும் ஊடகக்கலாசாரத்தை ஊடுருவிப்பார்த்து, தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யத்தயாரான இளம் சமுதாயத்தினரை உருவாக்குதல் என்பது அமைகிறது என தேசிய கல்வி நிறுவகம் கூறுகின்றது.

ஒரு மாணவர் சிறுபராயத்திலிருந்தே நேர்கணிய உளப்பாங்கு, புத்துருவாக்கச்சிந்தனை, விடாமுயற்சி, குழுச்செயற்பாடு, அணைத்துஒழுகும் மனவளமை, ஆன்மீகம், ஒழுக்கம், வினைத்திறனான தொடர்பாடல், தார்மீக விழுமியங்கள், பன்முகத்தன்மையை மதித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல்மிகு தொழில்தர்மம் போன்ற குடியியல் விழுமியங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இப்பண்புகளை உருவாக்குவதற்கு இப்பாடநெறி துணை புரிகின்றது. அதுமட்டுமல்ல ஒரு மாணவர் சிறுவயதிலிருந்து முகாமைத்துவத்திலுள்ள 4Aக்களில் (உளப்பாங்கு (Attitude), பகுப்பாய்வு (Anolysis), செயற்பாடு (Action), மற்றும் பொறுப்புக்கூறல் (Accountability), போன்றவற்றில் கவனஞ்செலுத்துவது கட்டயமாகும். இப்பாடநெறி இந்த 4Aக்களை அடைவதற்கு துணைபுரிகின்றது.

இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பது நான்கு குறுக்குக்கலைத்திட்டக் கருப்பொருள் களை அடிப்படையாகக் கொண்டாகும்: சௌஜன்யம், அபிவிருத்தி, ஊடகஅறிவு, தொடர்பாடற்தேர்ச்சி என்பவையாகும். இப்பாடத்தினைக் கற்றுக்கொள்வதனால் ஒரு மாணவரிடத்தில் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகளும் உருவாகுகின்றன: **தொடர்பாடல் தேர்ச்சிகள்:** எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திரஅறிவு, தகவல் தொழினுட் பத்தகைமை. **ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:** ஆக்கம், விரிந்தசிந்தனை, தற்றுணிவு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்,நேர்மை, சகிப் புத்தன்மை, மனிதகௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள், மனஎழுச்சிகள், நுண்ணறிவு போன்றன.**வேலை உலகிற்குத்தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள், சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:** அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமான முறையில்மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக்கொள்ள வதற்குத் துணைபுரிதல். சிந்தனையின் ஆக்கபூர்வமான வடிவத்தை விமர்சித்தல், ஆக்கபூர் வமான அவதானிப்புக்கள் தொடர்பான அனுபவங்களை வெளிப்படுத்தல், ஆக்கபூர்வமான கட்டுரையின் விசேடதன்மைகள் மற்றும் தன்மையைச் சமநிலையில் காட்டுதல், ஆக்கபூர்வமான சித்திரங்கள், புகைப்படங்கள் மற்றும் கிரபிக் ஆக்கக் கலைகளின் தன்மையைச் சமநிலையில் காட்டுதல், ஆக்கபூர்வமான கட்டுரையின், நடிப்பின், பேச்சின் மற்றும் வாசிப்பின் அனுபவங்களைப் பகுத்தாய்தல் போன்றவற்றிற்குத் துணைபுரிதல்.

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடம் பாடசாலைகளில் அறிமுகம்:-

தொடர்பாடல் திறன்களின் முக்கியத்துவத்தையும், இலங்கையர்கள் தமக்குள் சகவாழ்வுடன் வாழும்போது பாரிய வளர்ச்சிகளை, அபிவிருத்திகளை எமக்குள் உருவாக்கமுடியும் எனபதாலோ அரசு இப்பாடநெறியினை பாடசாலைகள் மட்டத்தில் ஆரம்பித்துள்ளது. 2006லிருந்து தரம்-10லும், க.பொத.சாதரணதரத்தில் 2007லிருந் தும், 2008லிருந்து க.பொ.த.உயர்தரத்திலும் அறிமுகப்படுத்தியுள்ளது. இன்று எமது நாட்டில் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் சம்மந்தமாக பலபாடநெறிகள் பல்கலைக்கழகம், திறந்தபல்கலைக்கழகம், வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் மட்டங்களில் கற்பிக்கப்பட்டுவருகின்றன. க.பொ.த. உயர்தரத்தில் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் பாடத்தை ஒருபாடமாக எடுத்துக் கற்றுக்கொள்வதற்கு க.பொத.சாதரணதரத்தில் இப்பாடத்திற்கு-C சித்தி பெற்றுக்கொள்ளவோ அல்லது இப்பாடத்தைக் கற்றிருக்க வேண்டிய கட்டாய தேவையோ இல்லை என அதிகாரபூர்வ ஏடுகள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு:-

இலங்கைப்பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பட்டப்பயில் நெறிக்கான அனுமதி விபரங்களை விளக்கி வெளியிடும் கையேட்டின்படி இலங்கையில் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்னும் பாடநெறிகள் கற்பிக்கப்பட்டு இளமாணிப்பட்டங்கள் வழங்கப்படுவருகின்றன. தற்காலத்தில் தொடர்பாடலும் ஊடகக்கற்கை யும் தொடர்பான பாடநெறிகள் களனிப்பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம், ரஜரட்ட பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், கிழக்குப்பல்கலைக்கழக திருகோணமலை வளாகம் ஆகியவற்றில் நடைபெறுகின்றது.

அத்துடன் அரசினுடைய வர்தகமானி அறிவித்தலினூடாக இவ்வருடம் மார்ச்-27திகதி (27.03.2019 யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத்தில் தனியான ஒருதுறையாக தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கடந்த வருடங்களில் கலைத்துறை யில் ஒரு பட்டக்கற்கையாக மட்டும் இருந்துவந்த இப்பட்டப்படிப்பு தனித்துறையாக உருவாக்கப்பட்டுள்ளமை ஒரு வரப்பிரசாதமே. அவர்கள் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்னும் துறையில் இளமாணிப்பட்டங்களை (B.A. in Media Studies) வழங்குவதற்கு உழைத்த உள்ளங்களைப்பாராட்டித்தான் ஆகவேண்டும். இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டபல பல்கலைக் கழகங்களில் வியாபித்திருக்கும் இக்கற்கைநெறி டிப்ளோமா, பட்டப்படிப்பு, பொதுப்பட்டம், சிறப்புப்பட்டம், பட்டப்பின்படிப்பு மற்றும் முதுமாணிக்கற்கை என பல்வேறு மட்டங்களில் விருத்தி பெற்றுள்ளது சிறப்பாகும்.

கொழும்புபல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகத்தினால் வழங்கப்படும் இக்கற்கைநெறிக்கான பட்டமாக வெகு ஜன ஊடகத்தில் இளமாணி சிறப்புப்பட்டம்- B.A. Special Degree in Mass Media அமைகிறது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் தொடர்பாடல் கற்கைகள் நெறியின் பின்வரும் இரு பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது: தொடர்பாடல் கற்கைகள் இளமாணிப்பட்டம். (B.A. in Communication Studies) மற்றும் மொழிகளில் இளமாணிப்பட்டம் (B.A. in Languages) போன்றன அமைகின்றன.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும் இக்கற்கை நெறியினை கற்று பட்டத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். இதனைவிட இலங்கை பல்கலைக்கழகமானிய ஆணைக் குழுவினால் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும் கற்றும் பட்டத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

களனிப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் இளமாணிக் கௌரவ சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் [BAHons (Peace and Conflict Resolution)] பட்டத்திற்கு க.பொ.த.உயர்தரத்தில் உள்ள பாடங்களில் மூன்றில் ஒன்றாக ஒருவர் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்னும் பாடத்தையும் கற்று அப்பாடத்தில் குறைந்தபட்ச சாதாரண சித்தியான-S சித்தி மட்டுமே பெற்றுக்கொண்டாலே போதுமானது என அதிகார பூர்வ ஏட்டிலிருந்து தெரிய வருகின்றது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் இளமாணி இஸ்லாமியக் கற்கைகள் பட்டத்திற்கு க.பொ.த.உயர்தரத்தில் உள்ள பாடங்களில் மூன்றில் ஒன்றாக தொடர்பாடலும் ஊடகக்கற்கை யும் என்னும் பாடத்தையும் கற்று குறைந்தபட்ச சாதாரண சித்தியான-S சித்தி பெற்றுக் கொண்டாலே போது மானது என அதிகாரபூர்வ ஏட்டிலிருந்து தெரியவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கல்லூரியால் வழங்கப்படும் சங்கீதம்,நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளுக்கான நுண்கலைப் பட்டங்களுக்கு (Bachelor of Fine Arts) க.பொ.த.உயர்தரத்தில் உள்ள பாடங்களில் மூன்றில் ஒன்றாக தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்னும் பாடத்தை கற்று குறைந்தபட்ச சாதாரண சித்தியான-S சித்தி பெற்றுக்கொண்டாலே போதுமானது என அதிகார பூர்வ ஏட்டிலிருந்து தெரியவருகின்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் வழங்கப்படும் சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கமும், கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் நெறிகளுக்கான நுண்கலைப் பட்டங்களுக்குக் க.பொ.த.உயர்தரத்தில் உள்ள பாடங்களில் மூன்றில் ஒன்றாக தொடர்பாடலும் ஊடக்கற்கையும் என்னும் பாடத்தையும் கற்று அப்பாடத்தில் குறைந்தபட்ச சாதாரண சித்தியான-S சித்தி பெற்றுக்கொண்டாலே போதுமானது என அதிகாரபூர்வ ஏட்டிலிருந்து தெரியவருகின்றது.

## புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இளமாணிப்பட்டங்கள்:-

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமூகப்பணி, புவியியல் தகவல் விஞ்ஞானம் என்னும் கற்கைநெறிகள் இளமாணிப்பட்டங்களை வழங்கிவருகின்றன: சமூகப்பணி இளமாணி கௌரவப்பட்டம் - Bachelor of Social Work Honours- BSW(Hons), புவியியல் தகவல் விஞ்ஞானத்திற்கான விஞ்ஞானமாணி கௌரவப்பட்டம் (Bachelor of Science Honours in Geographical Information Science). இவ்பட்டங்களுக்கு க.பொ.த. உயர்தரத்தில் உள்ளபாடங்களில் மூன்றில்ஒன்றாக தொடர்பாடலும் ஊடகக்கற்கையினை கற்று குறைந்த பட்ச சாதாரண சித்தியான-Sசித்தி பெற்றுக்கொண்டாலே போதுமானது என அதிகாரபூர்வ ஏட்டிலிருந்து தெரியவருகின்றது.

## க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உள்ள பாடங்கள்:-

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உள்ள பாடங்கள் **ஆறு** முக்கிய பிரிவுகளுள் வகுக்கப்பட்டருக்கின்றன: கலைப்பிரிவு, வணிகவியல்பிரிவு, உயிரியல் விஞ்ஞானப்பிரிவு, பௌதிக விஞ்ஞானப் பிரிவு, பொறியல் தொழில் நுட்பப்பிரிவு, உயிர் முறைமைகள் தொழில் நுட்பப்பிரிவு என்பன ஆகும். தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் எனும் இக்கற்கைப்பாடம் கலைப்பிரிவு, வணிகவியல்பிரிவு, பொறியல் தொழில் நுட்பப்பிரிவு, உயிர் முறைமைகள் தொழில் நுட்பப்பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளில் உள்ளபாடச் சேர்மானங்களில் உள்ளடக்கி ஒரு மாணவர் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பாடமாகும்.

க.பொ.த உயர்தரத்தில் ஒரு மாணவர் கலைப்பிரிவுனுள் கற்கக்கூடிய பாடங்களை நான்கு தொகுதிகளாகப் பிரித்திருக்கின்றார்கள்: சமூகவிஞ்ஞானம்-பிரயோகசமூகக்கற்கைகள், சமயங்களும் நாகரீகங்களும், அழகியற் கற்கைகள், மொழிகள் என்பன அந்தநான்கு தொகுதிகளும் ஆகும், இவற்றினுள் காணப்படும் சமூக விஞ்ஞானம், மொழிகள் தொகுதிகளுக்குள் இருந்து மட்டுமே ஒரு மாணவர் தனது பாடச்சேர்மானங்களில் அவர் விரும்பிய மூன்று பாடங்களையும் இணைத்துக் கற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு கற்றுக்கொள் ளும்போது மட்டுமே அவர் பல்கலைக்கழக நுழைவிற்கான ஆரம்ப அடிப்படைத் தகமையைப் பெறுகிறார். எனவே சமயங்களும் நாகரீகங்களும், அழகியற்கற்கைகள் பிரிவுகளுக்குள்ளும் இருந்து ஒரு மாணவர் இருபாடங்களைத் தெரிவு செய்யவாராயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாயம் அவரது மூன்றாவது பாடம் சமூகவிஞ்ஞானப் பிரிவுகளுக்குள் ஒரு பாடமாக இருக்கவேண்டும். தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்னும் பாடம் இந்த சமூகவிஞ்ஞானம் பிரிவினுள் ஒரு பாடமாக இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. க.பொ.த.உயர்தரத்தில் கலைப்பாடப்பிரிவில் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகள் **27** வகையான கற்கை நெறிகளுக்கும் அனுமதியை நாடலாம். மேலதிக விபரங்களுக்கு- இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிக்கான அனுமதிஎன வெளியிடும் கையேட்டின் தெளிவாக கூறப்பட்டுள்ளது (ENGLISH HANDBOOK 2018-2019, page 38, தமிழ்- பக்கம்41)

## Z புள்ளி:-

இப்பாடத்திற்கான-Z புள்ளி எனப்படும் பல்கலைக்கழகத்திற்கான தெரிவுப்புள்ளி உயர்வாக காணப்படுதும் ஒரு வரப்பிரசாதமே என்பதையும் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

## தொழில் நுட்பப் பிரிவு பாடங்கள்:-

இப்பிரிவினுள் பொறியல் தொழில் நுட்பப் பிரிவு, உயிர் முறைமைகள் தொழில் நுட்பப் பிரிவு என இரு பிரிவுகள் உண்டு. இப்பிரிவின் கீழ் பல்கலைக்கழக அனுமதிக்காக க.பொ.த. உயர்தரத்தில் பரீட்சையில் அதற்கே உரிய இருபாடங்களுடன் மூன்றாவதாக க.பொ.த.உயர்தரத்தில் தொடர்பாடலும் ஊடகக்கற்கையினைக் கற்று அதற்கு ஆகக்குறைந்தது சாதாரண-Sசித்தி பெற்றிருந்தாலே போதுமானதாகும்.

இத்துறையின் கீழ் கற்றவர்கள் இன்னும் 18 வகையான பட்டங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு- (ENGLISH HANDBOOK 2018-2019, 67 page, தமிழ்-68 பக்கம்).

## வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் அறிவுரைகள்:-

இங்கு வடக்குமாகாணக் கல்வித்திணைக்களத்தினால் 07.12.2018அன்று திகதியிடப்பட்டு வலிகாம வலய அதிபர்களின் கவனத்திற்காக என்னும் பாடசாலைகளுக்கான கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் முக்கியமான ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுவது சாலச்சிறந்தது: பாடசாலையில் தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் பாடத்தை நடைமுறைப்படுத்தல் என்னும் தலைப்பில் வெளிவந்த அக்கடிதத்தில்: க.பொ.த.உயர்தர கலைத்துறையில், தொழினுட்பவியல் துறையில் ஒருபாடமாக தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தை மாணவர்கள் தெரிவு செய்வதற்கு ஊக்குவித்தல் என்பதாகும்.

யாழ்மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகள் இப்பாடத்தினை தமது மாணவர்களுக்கு கற்பிக்கின்றார் கள் என்பது வரவேற்கத்தக்க ஒருவிடயம். யாழ்மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வடமராட்சி, தென்மராட்சி வலயங்களே இப்பாடநெறியை தமது பாடசாலைகளில் கற்பிக்காத வலயங்களாகக் காணப்படுகின்றன. இன்று இத்துறையில் பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் பல பாடசாலைகளில் இக்கற்கை நெறியினை கற்பிக்கின்றார்கள். ஆயினும் இப்பாடத்துறை ஆசிரியர்கள் இல்லாதபோதும் இப்பாடத்தின் முக்கியத்து வத்தினை உணர்ந்த அதிபர்கள் தமது பாடசாலைகளில் வேறுதுறைப்பட்டதாரி ஆசிரியர்களை வைத்துக் கொண்டு இப்பாடத்தினைக் கற்பித்துவருகிறார்கள் என்பதும் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலவித பாடப்பிரிவுகளிலிருந்து மாணவர்கள் தகுதி பெறக்கூடிய கற்கைகள்:-

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதி தொடர்பான விளக்கங் களை தெளிவுபடுத்தும் உத்தியோகபூர்வ கைநூலில் உள்ளவற்றில் குறிப்பாக சிலவற்றை இங்கும் குறிப்பி டுவது நல்லது. சட்ட இளமாணிப்பட்டம், மொழிபெயர்புக் கற்கைகள் இளமாணிப்பட்டம், கட்டடக்கலை இள மாணிப்பட்டம், நிலத்தோற்றக் கட்டடக்கலை இளமாணிப்பட்டம், நவநாகரிக வடிவமைப்பில் இளமாணி பட்டம்(கௌரவ) ( B Des Hons), வடிவமைப்பு கௌரவ இளமாணி (Bacholor of Design Honours)-(இக்கற்கை நெறி மூன்று சிறப்பு தெரிவுகளை உள்ளடக்கியது. அதனுள் ஊடக மற்றும் தொடர்பாடல் வடிவமைப்பும் ஒன்றாகும். இதன்கீழ் பின்வருவனவும் அடங்குகின்றன: கிரபிக் வடிவமைப்பு, விளம்பர வடிவமைப்பு, நகரும் படம் வடிவமைப்பு மற்றும் மனிதன் கணினி தொடர்பாடல் வடிவமைப்பில் திறன்களை விருத்தி செய்தல்). பீ.எஸ்சி. முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும், பீ.பீ.எம். தொழில் முயற்சியும் முகாமைத்துவமும், கைத்தொழில் தகவல் தொழில்நுட்ப இளமாணிபட்டம் (BIIT), பீபீஎம் விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச் சிகள் முகாமைத்துவம், பீ.எஸ்சி. உடற்றொழில் கல்வி(சிறப்பு), பீ.எஸ்சி. விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும், பீ.எஸ்சி. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்(கௌரவ), சுற்றுலா முகாமைத் துவத்தில் விஞ்ஞான இளமாணி(சிறப்பு) மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு), தகவல் முறைமைகள் விஞ்ஞான இளமாணி பட்டம், திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள் இளமாணி(சிறப்பு), பீ.பீ.எம். செயற்திட்ட முகாமைத்துவம்(பொது), சமூகப்பணி இளமாணி கௌரவப் பட்டம், புவியியல் தகவல் விஞ்ஞானத்திற்கான விஞ்ஞானமாணி கௌரவப்பட்டம் போன்ற இளமாணிப் பட்டங்களை பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழக அனுமதிக்காக க.பொ.த உயர்தரத்தில் ஒருபாடமாக தொடர்பாட லும் ஊடகக்கற்கையும் என்னும் பாடத்தினையும் கற்று அதற்கு ஆகக்குறைந்தது சாதாரண-S சித்தியினைப் பெற்றிருந்தாலே போதுமானதாகும்.

## அரச நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புக்கள்:-

தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்னும் கற்கைநெறியினை ஒரு மாணவர் கற்றுக் கொள்வதனால் அரச நிறுவனங்களான: மாவட்டசெயலகம், பிரதேசசெயலகம் பிரதேசசபை, வைத்தியசாலை, பொலீஸ் பிரிவுகள் இவற்றுடன் இன்னும் பல அரச நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புக்கள் சிலவற்றை முதலில் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்: தொடர்பாடல் மற்றும் வெளிக்களப்பணிகள் தலைவர். நிறுவனத்தின் மேலதிகாரி, நிறைவேற்றுப்பணிப்பாளர், நிறுவனமுகாமையாளர், மனிதவள முகாமையாளர்கள், பொதுசனத் தொடர்புஉத்தியோகத்தர், தகவல்தொடர்பு உத்தியோகத்தர், ஊடகத்தொடர்பு அதிகாரி, ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர், மக்கள் தொடர்பு உத்தியோகத்தர், பொதுமக்கள் உறவுகள் நிபுணர்கள், கூட்டங்கள் ஒருங்கிணைப்பாளர், ஊடகத்திட்டமிடலாளர், சுகாதாரகல்வியாளர்கள்-உத்தியோகத்தர்கள், ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் மற்றும் ஆவணமாக்கல் அதிகாரிகள், பொலீஸ் ஊடகப்பேச்சாளர், பொலீஸ் இணையச் செய்தியாளர், செய்திப்புலனாய்வாளர், ஊடகஇணைப்பாளர், முதன்மைத்தகவல் அலுவலகர்,தகவல் அலுவல கர், உதவித்தகவல் அலுவலகர், கல்லூரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள். அரச பாடசாலை களில் ஆசிரியர்கள், இவைதவிர அரச ஊடக நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புக்கள். இவற்றைவிட இன்னும் பலபதவிகள் பணிக்காக காணப்படுகின்றன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுதல் பிரிவின் தலைவர், ஆய்வு உத்யோகத்தர், குடும்ப உதவித்தலைவர்,குடும்பஉதவி உத்தியோகத்தர், மொழிபெயர்ப்பாளர், முகாமைத்துவ உதவியாளர், அபிவி ருத்தி உதவியாளர், பாதுகாப்புத்தலைவர், நிறுவன அதிகாரிகளின் தனிப்பட்ட செயலாளர்கள், இவை தவிர ஒரு பட்டதாரிக்குப் பொருத்தமாக பெற்றுக் கொள்ளக்கூடிய வேலைவாய்புக்கள் போன்றன ஆகும்.

எனவே இப்போதும்-எதிர்வரும் காலங்களில் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் என்னும் கற்கை நெறி ஊடாக இளமாணிப்பட்டம் பெற்றவர்களுக்கே இப்பதவிகளில் வேலைகள் வழங்கப்படும் என்பது தெரிய வருகின்றது. ஏனெனில் இப்போது அரச வர்த்தகமானி அறிவித்தலில் இப்பதவிகளுக்கான தகைமைகளின் கீழ் படிப்படியாக **தொடர்பாடல் இளமாணிப்பட்டம்** தேவை என தெளிவாக கோரப்படுவதை நாம் காண முடிகின்றது.

## தனியார் நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புக்கள்:-

கற்கைநெறியினை ஒரு மாணவர் கற்றுக் கொள்வதனால் தனியார் துறைகளில் பெற்றுக்கொள்ளக் கூடிய வேலைவாய்ப்புக்கள்: ஐ.நா சபை நிறுவனங்களின் ஊடக-தொடர்பாடல் இணைப்பாளர்கள், (இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்). மற்றும் சர்வதேச, உள்ளநாட்டு தனியார் நிறுவனங்களில் (INGOs, NGOs) மேலே அரச நிறுவனப்பதவிகளில் நாம் குறிப்பிடப்பட்டவற்றுடன் மேலதிகமாக ஊடகதிட்ட மிடலாளர், சமூகஊடக முகாமையாளர், வணிக நிருபர்கள், விற்பனைபிரதிநிதிகள், தொடர்பாடல் மற்றும் நிதிதிரட்டும் முகாமையாளர்கள், சந்தைப்படுத்தல் முகாமையாளர், உதவி சந்தைப்படுத்தல் முகாமையாளர், தனிப்பட்ட செயலாளர்கள். தனியார் பாடசாலை யில் ஆசிரியர்கள், இவைதவிர தனியார் ஊடக நிறுவனங்களில் உள்ள வேலைவாய்புக்கள் என்பன ஆகும்.

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தினை ஆரம்பிக்கும் முறைகளில் ஒன்று:-

இப்பாடநெறி இலங்கைக் கலைத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட ஒரு பாடநெறியாகும். இப்பாடம் இலங்கையர் எமக்குள் சமாதானமும் சகவாழ்வும் உருவாக்க வழிவகுக்கும் ஒரு சிறந்த பாடமாகவும் உள்ளது என்பதனை நாம் உணரவேண்டும். இப்பாடநெறியைத் தமது மாணவர்களுக்குக் கற்பிக்க விரும்பும் அதிபர்கள் இத்துறையில் பட்டம் பெற்றபட்டதாரி ஆசிரியர்கள்தான் வேண்டும் என்று தட்டிக்கழிக்காது முதலில் தரம்-10இல் உள்ள மாணவர்களுக்கும் இப்பாடநெறியினை தம்மிடம் உள்ள யாராவது ஓர் ஆசிரி யரை வைத்துக் கொண்டு ஆரம்பிக்கலாம். பின்னர் மாகாணக்கல்வித் திணைக்களத்திற்குத் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடத்தினைக்கற்பிப்பதற்கு இத்துறைப்பட்டம் பெற்ற ஆசிரியர்களைப் பெற்றுத்தருமாறு விண்ணப்பங்களை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பங்கு:-

ஊடகக்கற்கை பாடநெறியினையும் பட்டங்களையும் வழங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கையும் துறையின் பாரிய பங்களிப்பையும் நாம் மறந்து விடலாகாது. அவர்கள், கல்வித்துறை அதிகாரி களுக்கும் மாணவர்களுக்கும் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடநெறி தொடர்பான விழிப்புணர்வை வழங்கி வருகிறார்கள். இப்பட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்கள் இன்று அரச, தனியார் துறைகளில் நாம் மேலேகுறிப்பிட்ட அதிகாரிகளாக பணிபுரிகிறர்கள் என்பதை குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். அத்துடன் அரசினுடைய வர்தகமானி அறிவித்தலினூடாக இவ்வருடம் மார்ச்-27திகதி(27.03.2019) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனியான ஒருதுறையாக தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிடுவது சாலச்சிறந்தது.

## மாணவர்களை இன்றே நாம் வழிநடத்துவோம்:-

யாழ்மாவட்டத்தில் ஒப்பீட்டு ரீதியில் தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடநெறியினை தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்து வருகின்றது. அது படிப்படியாக இப்போது முன் னேற்றங்கண்டு வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. தென்பகுதியில் வாழும் எமது சகோதரர்கள் புதியபாடங்கள் அறிமுகப்படுத்தப்படும் போது அதனை தேடிச்சென்று கற்றுப்பட்டங்கள் பெற்று பாரிய பணிப்பொறுப்புக்களில் இருப்பதை நாம் தெளிவாக அறிவது எம்மை வளர்த்துக் கொள்வதற்கு பாரிய துணைபுரியும். இப்பாடநெறியைக் கற்றவர்கள் பலர் ஒன்றிணைந்து மேலைத்தேய நாடுகளுடன் சேர்ந்து பட்டக்கல்லூரிகளை இலங்கையில் நிறுவிவருவதையும் நாம் அறிவது நல்லது. இன்னும் யாழ்மாவட்டத்தில் சில வலயங்கள் இப்பாடத்தை கற்பிப்பதற்கு முன்வராமை ஒரு வேதனைகலந்த உண்மையாகும். எனவே நாம் அனைவரும் ஒருநல்ல முயற்சி எடுத்து தொடர்பாடலும் ஊடகக்கற்கைகற்கை நெறியினை மாணவர்கள் கற்பதற்கு துணைநிற்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். நாம் மேலே குறிப்பிடப்பட்ட தேர்ச்சிக ளுடன் ஆளுமை விருத்தி கொண்டவர்களாக மாணவர்கள் வளர்வதற்கும் சகோதரத்துவத்துடன் இனங்களுக்கிடையில், சமயங்களுக்கிடையில் சகவாழ்வுடனும் கூடிய ஒரு சுபீட்சமான வாழ்வை முன்னெடுக்க தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடநெறி நல்ல சந்தர்ப்பத்தை ஒவ்வொருவருக்கும் வழங்குகின்றது. பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவிலிருந்து மாணவர்களுக்கு ஊடகக் கல்வி வழங்கவேண்டும் என்று யுனெஸ்கோ அமைப்பு பரிந்துரை செய்ததையும் நாம் மனதில் கொண்டு எமக்குள் உள்ள வரையறைகளை அல்லது தடைகளை கடந்து தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பாடநெறியினை பரவலாக பாடசாலைகளில் கட்டாயம் அறிமுகம் செய்யவேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். அவ்வாறு கற்பிப்பதனால், கற்றுக்கொள்வதால் நன்மைகள் பல உண்டு. எனவே இத்துறைசார்பாக இன்று உருவாகியுள்ள பாரிய வேலை வாய்ப்புச்சந்தையில் எம்மவர்கள் தம்மை சந்தைப்படுத்தி வெற்றி பெற்று அப்பணிகளில் மக்களைநோக்கி அவர்கள் பணியாற்ற எமதுமாணவர்களை இன்றே நாம் வழிநடத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி மீ. இதயசிவதாஸ்,**
SLPS I, BA, Med, PGDEM
(அதிபர்),
கிளி/உருத்திரபுரம் ம. வி.

# நிர்வாக முறைமையும் முகாமைத்துவ முறைமையும்

நிர்வாகம் முகாமைத்துவம் எனும் இரு பதங்களும் நடைமுறையில் ஒரே கருத்தில் நோக்கப்படுகின்றன. ஆயினும் இவை வேறுபட்ட கருத்துக்களை உடையன. இவற்றை முதன் முதலில் வேறுபடுத்தி விளக்கிய முகாமைத்துவ அறிஞர் EFL Breech என்பவராவார் இவரது கருத்துப்படி நிர்வாகம் என்பது நிறுவனத்தின் பிரதான இலக்குகளைத் தீர்மானிக்கின்ற முகாமைத்துவத்தின் உயர்மட்டச் செயற்பாடுகளைக் குறிக்கும் நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட முகாமைத்துவ செயன்முறையின் ஒருபகுதியாக விளங்குவதுடன் அச் செயற்பாடுகள் தீர்மானிக்கப்பட்டு தொடர்புகொள்வதற்கு ஆதாரமாக இருக்கின்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதுடன் அச்செயற்பாடுகளின் வளர்ச்சியானது ஒழுங்குபடுத்தலுடன் இலக்குகள் திட்டங்களுக்கேற்ப அமைகின்றதா என்பது பரிசீலிக்கப்படும்.

ஒரு நிறுவகத்தின் பணிகளை நிறுவுறுத்துவதற்குப் பல்வேறு வழிமுறைகள் உள்ளன. இதற்காகப் பயன்படுத்தப்பட்டதே நிர்வாகம் "முகாமைத்துவம்' தலைமைத்துவம் என அழைக்கப்படுகிறது. அந்த வகையில் நிர்வாகம் என்பது பொறுப்பளிக்கப்படும் வேலைகளை மட்டும் செய்வதே நிர்வாகம் ஆகும். தானாக சிந்தித்து மாற்றங்களை ஏற்படுத்தவோ தாமதமாகவோ அல்லது அதனை மாற்றிச் செய்யவோ முடியாது.

இன்னொருவகையில் கூறின் உரிய வேலையை உரிய படிமுறையில் நிறைவேற்றல் கட்டளை இடும்போது அதனை உடனடியாக நிறை வேற்றல் வேண்டும். ஆனால் முகாமைத்துவம் என்பது இதிலிருந்து வேறுபட்டு செய்ய வேண்டிய வேலைகளை ஏனையோருடன் இணைந்து வினைத்திறனாகச் செய்தல். இங்கு ஒன்றிணைந்து நிறுவனத்தின் வினைத்திறன் விளைவுளை உயர்த்தும் பங்குதாரராக முகாமைத்துவம் செயற்படும். இவ்விரு எடுகோள்களின் அடிப்படையிலும் நோக்குகையில்,

நிர்வாக அணுகுமுறைகளை முதன்முதலில் ஒழுங்குபடுத்திய விஞ்ஞான முகாமைத்துவத்தின் தந்தையான F.W.Taylor (Frederi.w tailor) கீழ்மட்ட ஊழியர்கள் மீது கவனத்தைச் செலுத்தி அவர்களூடாக உற்பத்தியை அதிகரிக்கலாம் எனும் கருத்தைப் பிரான்சில் நிலக்கரி உலோகச் சுரங்கக் கம்பனி பொது முகாமையாளராகப் பணியாற்றிய தமது அனுபவத்தினூடாகக் கூறினார்

ஹென்றி பயோல் என்பவர் உயர்மட்ட முகாமையாளர்கள் மீது கவனம் செலுத்தி அவர்களூடாக உற்பத்தியை அதிகரிக்கும் முறையில் ஈடுபட்டனர். இதனடிப்படையில் நிர்வாக அணுகுமுறைகளை ஒழுங்குபடுத்தி அவற்றை முகாமைத்துவத்தில் செயற்பாடுகளாக கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை POSDCORB எனவும் அழைக்கப்படுகிறது.

1. திட்டமிடல் - Planning
2. ஒழுங்கமைத்தல் - Organizing
3. ஊழியரிடல் - Staffing
4. செயற்படுத்தல்/ வழிநடத்தல் - Directing
5. ஒருங்கிணைத்தல் - Co-coordinating
6. அறிக்கையிடல் - Reporting
7. வரவு, செலவுத் திட்டம் தயாரித்தல் - Budjeting

என்ற வகையில் நிர்வாக முறைமையை Henri Fayal வகைப்படுத்திக் கூறியுள்ளார்.

இவ் அணுகுமுறைகளினூடாக நிர்வாக செயற்பாடுகளை மேலும் ஐந்து பிரிவுகளாக பிரித்து பயோல் கூறியுள்ளார்

- எதிர்வு கூறல் - Forecasting
- ஒழுங்கமைத்தல் - Organizing
- இயைபுபடுத்தல் - Coordinating
- கட்டளையிடுதல் - Commanding
- கட்டுப்படுத்தல் - Controlling

காலத்திற்கு காலம் நிர்வாக செயற்பாடுகளில் பல பரிணாம வளர்ச்சிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன ஏனெனில் நிறுவனத்தின் வினைத்திறனை அதிகரிக்க வேண்டுமாயின் புதிய புதிய உத்திகள் கையாளப்பட வேண்டும் தர்க்கச் சிந்தனைகள் உருவாக்கும் இடத்து நிறுவனத்தின் வினைத்திறனும் அதிகரிக்கும் பொதுவாக நிர்வாகம் என்பது முகாமைத்துவத்தையும் தலைமைத்துவத்தையும் உள்ளடக்கியுள்ளது. நிர்வாகமானது நிறுவனத்துடன் சம்பநதப்பட்ட முகாமைத்துவ செயற்பாட்டின் ஒரு பகுதியாக விளங்குவதுடன் அச் செயற்பாடுகள் தீர்மானிக்கப்பட்டு தொடர்பு கொள்ளப்படுவதற்கு ஆதாரமாக இருக்கின்ற நிகழ்வுகளை நடைமுறைப்படுத்துவதாகும்.

நிர்வாக அலுவல்களை இலகுவாகவும் வேகமாகவும் திறைமையாகவும் செயற்படுத்தவே நிர்வாக பரவலாக்கம் வேண்டப்படுகின்றது. இங்கு செயற்பாட்டு ரீதியான பன்முகப்படுத்தல் வேண்டும்.

நிர்வாக பரவலாக்கம் என்பது அதிகாரம் சட்டவாக்கம் நிர்வாக முறை என்பவற்றை உயர்மட்டத்திலிருந்து அடி மட்டத்திற்கு மாற்றும் முறை என மெக்மல்லன் விளக்கியுள்ளார்.

தொழில் பிரிப்பு என்பது முகாமைத்துவத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையில் ஒருவருக்கு பணிக்கப்படுபவரின் சேவையாக இருக்கும். தொழில் பிரிப்புக்கு அமைவாக மாத்திரமே செயற்பட முடியும். வேலையை சிந்தித்து மாற்றங்களை ஏற்படுத்தி காலதாமதமாக வேலைகளைச் செய்ய முடியாது. ('Do this Work')-'நீர் இதைச் செய்', ('Order Carryout') -'கட்டளையை நிறைவேற்று' என்பதே நிர்வாகமாக உள்ளது.

சில குறிப்பிட்ட நிலமைகளின் கீழ் நிர்வாகத்தைக் கொண்டு நடாத்துவதற்குச் சில தனியாள் பண்புகள் காரணமாவதை அறியமுடிகின்றது. எனினும் சகல நிர்வாகப் பிரச்சினைகளையும் கையாள்வதற்குப் பொருந்தமாட்டாது என்பதைனை இத்துணை ஆய்வாளரான J.W. Getzels கூறியுள்ளார். நிர்வாகம் என்பது ஒரு வகையான தொழில்நுட்பமாக கருதப்படுகின்றது. ஏனெனில் நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான நுட்பங்களைக் கையாள வேண்டும். இது ஒரு வகையில் மொழியியல் பாங்கானது. நிர்வாகி எத்தகைய கட்டளைகளைப் பின்பற்றி செயற்பட வேண்டும் என்பது பற்றி தெரிந்திருக்க வேண்டும். நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது சொல்லப்பட்ட கட்டங்களுக்கமைய செயற்படுமிடத்து பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக்கொள்ள முடியும்.

நிர்வாகச் செயற்பாட்டில் கொள்கைகளைப் பயன்படுத்தும்போது பல நன்மைகள் இருப்பினும் அதனை எதிர்ப்பவர்கள் சில காரணங்களைக் கூறுகின்றனர்.

- ❖ நிர்வாக கொள்கைகளை புரிந்து கொள்வதும் நடைமுறைப்பிரச்சனைகளின் போது அவற்றைப் பயன்டுத்துவதும் கடினமானது.
- ❖ நிர்வாக சுதந்திரமாக சில தீர்மானங்களை எடுப்பதற்கு கொள்கைகள் கட்டுப்படுத்துகின்றது.
- ❖ கொள்கைகள் அதிகமாக இருப்பதால் அவை காலப்போக்கில் மறைந்துவிடுகின்றன
- ❖ தனிப்பட்ட கொள்கைகளில் தங்கி இருப்பது ஆபத்தானது

பொது நிரவாகிகள் எதிர் கொள்ளும் ஒருநடைமுறைப்பிரச்சினை தனக்குக்கீழே பணி புரியும் ஊழியர்களின் நம்பிக்கையை எவ்விதம் பெற்றுக் கொள்ளலாம் என்பதாகும். மனித மனங்களை வெல்லக்கூடிய நுட்பங்களை நிர்வாகிகள் அறிந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அடுத்து முகாமைத்துவ முறைமையை எவ்வாறு நிர்வாக முறையிலிருந்து வேண்டப்பட்டிருக்கிறது என்பதை விரிவாக நோக்கின் முகாமைத்துவம் (Manegement) நிர்வாக செயற்பாட்டின் பரிணாம வளர்ச்சி என்று கூறலாம் பணி நிறைவேற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதே முகாமைத்துவம் ஆகும்.

கிடைக்கும் வளங்களை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் பயன்படுத்தி நிறுவனத்தின் இலக்கை அடைய மேற்கொள்ளும் முயற்சி முகாமைத்துவம் எனலாம்.

முகாமைத்துவம் என்பதன் ஆங்கிலப்பதமான Management என்பதில் ஆயயெபந என்பது சமாளித்து போதல் என பொருள்படும். men என்பது மனிதர்கள் பற்றியது இது நிறுவன ஊழியர்களை குறிக்கின்றது. T என்பது Technical, Technic அதாவது தொழில் நுட்பம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மனிதர்களை நுட்பமாக நடத்தி உரிய இலக்கை அடையச்செய்வதே முகாமைத்துவம் ஆகும்.

முகாமைத்துவம் தொடர்பான வரைவிலக்கணங்களின் மூலம் முறைமையை அறியலாம் அதாவது ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளை அதன் கொள்கைகள் குறிக்கோள்களை நோக்கி ஒழுங்குபடுத்தி இணையப்படுத்தி செல்லுதல் அத்தோடு முகாமைத்துவம் என்பது சிறந்த உற்பத்தி எனும் காரணியோடு தொடர்புடையது. உற்பத்தி என்ற ஆக்கத்திற்குள் உபகரணங்கள் கருவிகள் இயந்திரங்கள் உள்ளடங்கும் என்பது Peter Drucker 1999-2005 கருத்தாகும்.

முகாமைத்துவம் இரு முக்கிய செயற்பாடுகளைக் கொண்டது.

1. சந்தைப்படுத்தல்
2. புத்தாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனடிப்படையில் ஒரு நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஒரு நிறுவனத்தை பொறுப்பேற்று நடாத்தும் பொறுப்பினை பணிப்பாளர்களுக்கும் முகாமையாளர்களுக்கும் மெற்கொள்வதற்கு உரித்தும் அதிகாரமும் உள்ளது.

முகாமைத்துவம் பற்றிய வரைவிலக்கணத்தில் அது ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கியதாக கூறப்படுகிறது. ஹென்றி பயோல் எனும் முகாமைத்துவ சிந்தனையாளரது பயோலின் மூலங்கள் Foyols Elements மூலம் முகாமைத்துவ செயன்முறையை விளக்கியுள்ளார்.

இதே போன்று முகாமைத்துவ செயல் ஒழுங்கு பற்றி "கலிக்"உர்விக் ஆகிய முகாமைத்துவ நிபுணர்கள் தாம் மேற்கொண்ட பகுப்பாய்வு BODSCORP எனும் சொற் பகுதியை பயன்படுத்தி முகாமைத்துவ செயற்பாட்டை பின்வருமாறு விளக்கியுள்ளார்.

| | | | | |
|---|---|---|---|---|
| P | ⟶ | திட்டமிடல் | ⟶ | Planning |
| O | ⟶ | ஒழுங்கமைத்தல் | ⟶ | Organizing |
| D | ⟶ | நெறிப்படுத்தல் | ⟶ | Direction |
| S | ⟶ | ஆளணி வழங்கல் | ⟶ | Staffing |
| CO | ⟶ | இயைபாக்கம் | ⟶ | CO - Ordination |
| R | ⟶ | அறிக்கை தயாரித்தல் | ⟶ | Reporting |
| B | ⟶ | வரவு செலவுத்திட்டம் தயாரித்தல் | ⟶ | Budgeting |

இவற்றோடு நவீன முகாமைத்துவ ஆய்வறிஞர்கள்

- உருவாக்கம்
- வளங்களை ஒருங்கிணைத்தல்
- மேற்பார்வையிடல்
- மதிப்பிடல்

இவற்றினூடாக ஓர் நிறுவனம் மேற்பார்வை செய்யப்படுவதன் மூலமே அதன் ஆளணியினர் மதிப்பீட்டிற்குட்படுவதன் மூலமும் அந் நிறுவனத்தின் வினைத்திறன் அதிகரித்து விளைதிறன் (பயனுறுதி) அதிகரிக்கும் என எதிர்பாக்கப்படுகின்றது.

ஒரு நிறுவனத்தை முகாமை செய்யும் ஒருவருக்கு பின்வரும் திறன்கள் தற்காலத்தில் தேவையென எதிர்பார்க்கப்படுகின்றது.

- அரசியல் ⟶ வலுவை மேம்படுத்தி இணைப்புக்களை உருவாக்குவதற்கு
- எண்ணக்கரு ⟶ சிக்கலான சந்தர்ப்பங்களில் பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கு
- சிக்கல் அனுமானம் ⟶ மிகவும் சிக்கலான சந்தர்ப்பங்களில் மிகவும் பொருத்தமான நிலைப்பாட்டைக் கண்டறிவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் முகாமைத்துவத்தின் முக்கிய மூலங்களாக,

- சிந்தித்தல்
- உண்மைகளைக் கண்டறிதல்
- ஒப்பாய்வு
- எதிர்வுகூறல்
- அளவிடுதல்
- தெரிவித்தல்

முதலான முகாமைத்துவ செயல்வட்டத்தின் பிரதான அம்சங்களாக விளங்குகின்றன.


நிருவாகம் கீழ்மட்டப் பணிகளை (Low Order Tasks) முன்னெடுத்துச் செல்ல முகாமைத்துவம் நாளாந்தப் பராமரிப்புப் பணிகளைத் தொடர்ந்து முன்கொண்டு செல்வதைக் குறிக்கின்றது. எனவே இந்த இரண்டு செயன்முறைகளுமே வினைத்திறனான வெளியீட்டு செயற்பாட்டிற்கு உயிர் காட்டியாக திகழ்வன.

ஒரு நிறுவனத்தின் முகாமைக்கு வழிகாட்டியாக கடைப்பிடிக்க வேண்டியனவாக,

- தொழில் பகுப்பு- ஊழியப்பிரிப்பு (Division of labour)
- அதிகாரம் (Authority and Responsibility)
- கட்டுப்பாடு (Disciplene)
- ஒழுங்கமைத்த கட்டளை (Unity of Command)
- ஒருங்கிணைந்த வழிநடத்தல் (Unity of Direction)
- பொதுநலன் பேணல் (Interest of Common good)
- ஊதியம் (Remuneration)
- ஐயப்படுத்தல் (Centraligation)
- முகாமை வரிசை (Scolar Chain)
- ஒழுங்கு (order)
- நடுநிலமை (Equality)
- நிலையான பதவிக்காலம் (Stability of Personal)
- முன்முனைதல் (Initiative)
- ஒற்றுமையே பலம் (Unity of Strength) Team Spirit



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முகாமைத்துவ சிந்தனையாளர்களது செயற்பாட்டு முறைமைகளை கடைப்பிடிக்குமிடத்து நிறுவனம் சார்ந்த திறனை அதிகரிக்க முடியும் நிர்வாகத்தை கொண்டு நடத்துபவர் தாமாக சிந்தித்து மாற்றங்களை ஏற்படுத்தாது உரிய வேலையை உரியவாறு பொறுப்பளிக்கப்படும் வேலையை மட்டும் ஆய்பவராக இருக்க முகாமையாளரே செய்ய வேண்டிய வேயினை ஏனையோருடன் இணைந்து வினைத்திறனாக செயற்பட்டு நிறுவனத்தின் செயற்பாட்டிலும் உயர்ச்சியிலும் பங்குதாரராக உழைக்கவேண்டும் இவ்விரு எண்ணக்கருக்களின் அடிப்படையில் இன்று ஒரு நிர்வாகியாக இருந்து கட்டளைகளையும் சுற்று நிருபங்களையும் அமுல்படுத்துவதை விட தானாக சிந்தித்து புதிய புதிய நுட்பங்களினூடாக வளவிரையம் இன்றி மேம்பாட்டுத்திறனுடைய உற்பத்தி உழைப்பை உருவாக்கும் முகாமைத்துவம் சிறந்ததாக கருதப்படுகிறது.

மேலும் ஒரு நிறுவனத்தை கொண்டு நடத்தும் அந்த நிறுவனத்தின் தலைவரின் நாளாந்த செயற்பாடுகளை அட்டவணைப்படுத்தினால் அதுவே முகாமைத்துவம் எனப்படுகிறது. அதே நேரம் ஒரு நிறுவனம் சார்ந்து பெறுகின்ற அனுபவங்களும் வெற்றிகளும் தோல்விகளும் ஒரு நிர்வாகியை சிறந்த நிர்வாகியாகவும் மாற்ற முடியும் தோல்வி உள்ள ஆளுமையற்ற நிர்வாகியாகவும் மாற்றக்கூடும். எனவே இவ்விரு எண்ணக்கருக்களின் அடிப்படையிலும் நிர்வகிக்கின்றதாலும் முகாமையாளரானாலும் தன்னை மாற்றும் திறனும் மாற்றங்களை ஏற்கும் திறனும் முக்கியமானதாகும் இல்லையேல் நிறுவனத்தின் இலக்கை நோக்கி பயணிக்க முடியாது. இதனால் தான் நிறுவனத்தின் வெற்றி நோக்கிய பயணத்திற்காக முகாமைத்துவ ஆய்வாளர்கள் புதிய புதிய நுட்பங்களை கையாளும் திறனை ஆய்வு செய்து முன்வைக்கின்றனர் என்பது இவ்விரு பதங்களின் செயற்பாட்டினூடாக அறியலாம்.

நிறுவனத்தின் செயற்பாடுகளை வெற்றிகொள்வதற்கு திறமையின்மையை விட கடினத்தன்மை மேலானதென நினைக்கும் மனோநிலையை மாற்றும்போது தான் நிறுவனம் சார் ஊழியர்களின் மனங்களை வெல்ல முடியும். நிர்வாகியின் கடினத்தன்மையோ முகாமையின் இறுக்கமோ நீண்டகாலத்தில் வெற்றியளிக்க முடியாதென்பதே பல்வேறு முகாமைத்துவ சிந்தனையாளர்களினதும் கருத்தாக உள்ளது. காலத்திற்கு ஏற்ற வகையில் கொள்கைகளும் மாற்றமடைவதை ஏற்கும் நிறுவனங்கள் வெற்றிப் பாதையில் செல்கின்றன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம. மரியராசா
(B.Com,HNDE,PGDE,M.Ed)
முதல்வர்
கிளி/ வலைப்பாடு றோ.க.த. பாடசாலை
வலைப்பாடு

# பாடசாலைமட்ட ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தியில் ஆசிரியர் செயலாற்றுகை தரக் கணிப்பீட்டின் பங்களிப்பு

## அறிமுகம்

தரமான கற்றல் விளைவுகள் பெறப்பட வேண்டுமாயின் தரமான கறிபித்தல் இடம் பெற வேண்டும். இதற்கு தரமான வாண்மைத்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் அவசியமானவர்களாக காணப்படுகின்றார்கள். ஆசிரியத்துவப் பணியில் தமது சேவை நிலையங்களிலையே அபிவிருத்தி அடையச் சந்தர்ப்பம் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதே பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தியாகும். இதனால் ஆசிரியர்கள் "நமக்குள் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் ஏனையோரையும் மாற்றுவோம்" என்ற கல்வித் தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டதாக காணப்படுகின்றது.

மேலும் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி செயன்முறையானது எல்லா மட்டங்களிலேயும் முகாமைத்துவ பொறுப்புக்களை ஒவ்வொருவரும் பகிர்ந்து கொள்வதையும், தேவையானபோது தீர்மானம் மேற்கொள்ளலில் உரிய தனி நபர்களை இணைத்துக் கொள்வதையும் உள்ளடக்கியது. இது சிறந்த ஆற்றுகையாளருக்கு உயர் வெகுமதியைகொண்டு வருவதை உறுதிப்படுத்தும். இந்த வெகுமதிகள் ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தல், உயர் பங்கு பற்றுதல், அதிகரித்த மனவுறுதி, நிறுவனத்திற்குச் சொந்தமானவர் என்ற உணர்வு என்பவற்றை உள்ளடக்கியதாகும். ஆசிரியர் அபிவிருத்தி என்பது குறித்த பணியைச் செய்வதற்கு தனிநபரை தயார் படுத்துதல் மற்றும், தனிநபர் தனது ஆற்றல், தொழில், இரண்டிலும் மேலும் விருத்தி அடைவதற்கான சந்தர்ப்பங்களை தொடர்ச்சியாக வழங்குதல் என்பவற்றையும் உள்ளடக்குகிறது.

(பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வழிகாட்டல் கை நூல் ப. 4)

## பயிற்சித் தேவைகளை இனம் காணல்

ஆசிரியரினை வாண்மைத்துவ ரீதியாக அபிவிருத்தி செய்வதற்கு அவரிடம் கற்பித்தல் பணியில் காணப்படுகின்ற பலங்கள்/ பலவீனங்கள் இனம் காணப்படல் வேண்டும். கற்பித்தல் பணியினை இலாவகமாக மேற்கொள்ளக் கூடிய ஆற்றலினை (Art of teaching) எல்லா ஆசிரியர்களும் தமது கற்பித்தல் காலத்தின் ஆரம்ப கட்டங்களில் பெற்று விடுவதுமில்லை. இதனால் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பணியின்போது பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்பாடுகளை வகுப்பறைகளில் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. எனவே ஆசிரியர் அனைவருக்கும் நன்மையை பெற்றுக் கொடுக்கும் சந்தர்ப்பங்களான.

1. தனிநபர் மட்டத்திலும் பாடசாலையிலும் இவை காணப்பட்டதும், ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான தேவைகள் அடிப்படையிலான செயற்பாடுகள்.
2. திட்டவட்டமான செயற்பாட்டு நோக்கங்கள்.
3. பங்குபற்றுவோரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடுகள்
4. திட்டமிடல் அணியில் ஆசிரியர்கள் ஈடுபட்டிருத்தல்
5. திட்டமிடலானது பொதுவான விருப்புக்களைக் கொண்டிருத்தல்
6. இணைப்புக்கான பொறுப்பை நேரமும் நிபுணத்துவமும் உடைய ஆசிரியர் குழுவிடம் ஒப்படைத்தல்
7. கற்பிக்கப்பட்டவற்றை மதிப்பீடு செய்து குழு/ தனியார் வெற்றி உணர்வை பகிர்ந்து கொள்ள முடிதல்.

இவ்வாறான செயற்பாடுகளினூடாக ஆசிரியர்களை பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மைத்துவ அபிவிருத்தி நோக்கி இழுத்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை பின்வரும் வழிகளினூடாக இனம் கண்டு வழங்க முடியும்.

பிரச்சினைகளின் பகுப்பாய்வு
ஊகித்தறியும் செயலமர்வுகள்
நெருக்கடியான சம்பவ நுட்பம்
விகிபாகத் தொகுதியினருடனான நேர்முகம்
அவதானிப்பு முறை
ஆற்றுகை மதிப்பீட்டு முறை (ஆசிரியர் தரங்கணிப்பு)
மனப்பாங்கு அளவீடுகள்
பெற்றோர், பொதுமக்கள், ஊடகங்கள், ஆகியவற்றிலிருந்தான தகவல்கள்
நெருக்கடியான நிகழ்வுகள் தொடர்பான நுட்பங்கள்
சிறு குழுக் கலந்துரையாடல்

இவற்றில் ஆசிரியர் தரங் கணிப்பீடும்ஆசிரியர் அபிவிருத்தியும் நேரடியாகவே தொடர்ந்து கற்பித்தல் பணியில் செல்வாக்கச் செலுத்துகின்றது.

## ஆசிரியர் தரங் கணிப்பீடு

2003.12.31ம் திகதி வெளியீடு செய்யப்பட்ட 2003/39ம் இலக்கம் கொண்ட சுற்று நிருபத்தின்படி ஆசிரியர்களின் தொழில் விருத்தி மற்றும் தொழில்வாண்மையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பாடசாலைக் கல்வியின் பண்புசார் விருத்தியை ஏற்படுத்தும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்டதே ஆசிரியர் தரங் கணிப்பீடாகும்.

ஆசிரியர் செயலாற்றுகை தரங் கணிப்பீடானது பா.ம.ஆ. அபிவிருத்தியின் முக்கியமான அடிப்படையாகும். ஆசிரியர் அபிவிருத்தித் தேவைகளை இனம் காண்பதற்கு ஆசிரியர் செயலாற்றுகை தரங் கணிப்பீடு அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டும். இது பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி திட்டத்தில் முன்னுரிமை ஒழுங்கில் இணைக்கப்பட வேண்டும். ஆசிரியர் செயலாற்றுகைத் தரங் கணிப்பீடானது தனியார் ஆசிரியர் விருத்திக்கும் பாடசாலை அபிவிருத்திக்கும் பயனுள்ளதாக அமையும் என்பது இதன் மூலம் உறுதிப்படுத்தப்படும். எல்லா ஆசிரியர்களும் வருடாந்த ஆசிரியர் நேர் காணலினை தமது வரிசை நிலை முகாமையாளருடன் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இச் செயலாற்றுகைத் திட்டமானது வழமையாக வருட ஆரம்பத்தில் அல்லது குறித்த பாடசாலையில் தனது கற்பித்தல் பணியினை ஆரம்பிக்கும் தருணத்தில் இடம்பெறும். இச்செயலாற்றுகைத் தரம் கணிப்பீட்டுடன் மூன்று முக்கிய நபர்கள் தொடர்புடையவர்களாக காணப்படுவார்கள்.

ஆசிரியர் - மதிப்பிடப்படுபவர்

உதவி அதிபர்/ பகுதித் தலைவர்/ சிரேஸ்ட ஆசிரியர் - மதிப்பிடுபவர்கள்.

அதிபர் - மிதப்படுத்துபவர்கள்

ஆசிரியர்கள் குறைந்த பாடசாலைகளில் மதிப்பிடுபவராகவும், மிதப்படுத்துபவராகவும் அதிபரே காணப்படுவார்.

இங்கு மதிப்பிடுபவர் ஆசிரியரை இனம் காணப்பட்ட பொருத்தமான நேரத்தில் சந்தித்து கலந்துரையாடி இணக்கப் பாட்டுடனான வேலையிலக்குகள், எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை அமைத்துக் கொள்வார். இவ்வேளையில்

- எதிர்வரும் ஆண்டுகளுக்கான இலக்குகளும் எதிர்பார்க்கும் பெறுபேறுகளும்
- ஆசிரியருக்கான தேர்ச்சிகளும் அவற்றிற்குரிய இலக்கு மட்டங்களும்
- ஆசிரியருக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள்.

இவற்றினை மதிப்பிடுபவரும் ஆசிரியரும் உத்தமமான மட்டங்களில் அடைந்து கொள்வதற்கு இணக்கப்பாடு காண்பர்.

## ஆசிரியர் தரங் கணிப்பீடு எழுதப்படும் முறை

ஆசிரியர் தரங் கணிப்பீட்டின் 4 படி நிலைகளையும் உரிய முறையில் மேற்கொள்கின்றபோது பாடசாலையின் ஆண்டுக்கான அபிவிருத்தி திட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய முக்கியமான விடயங்கள் இனம் காணப்படும். இது ஆசிரியர் அபிவிருத்தியை இலகுவாக ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்து விடுகின்றது. ஆசிரியர் தரங் கணிப்பீட்டு படிவமானது 1 தொடக்கம் 07 வரையான தலைப்பின் கீழ் நோக்கப்படுகின்றது. இவை பின்வரும் விடயங்களை உள்ளடக்கும்.

1. மதிப்பிடப்படுபவரின் தனியார் விபரங்கள்
2. மதிப்பிடுபவரின் விபரங்கள்
3. மதிப்பீட்டுக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அறிவுறுத்தல்கள்

5. மதிப்பிடப்படுபவரின் வேலை வரைவிலக்கணம்

6. ஆற்றுகை மதிப்பீட்டுத் திட்டம்

7. கையொப்பங்கள்

இங்கு தலைப்பு 6 இன் கீழ் வருகின்ற ஆற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்தினை எழுதுவதே ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தியினை அடைந்து கொள்வதற்கு .முக்கியமானதாக விளங்குகின்றது.

இப்படிவமானது 5 உ.ப தலைப்பின் கீழ் நோக்கப்படுகின்றது. முதலாவது தலைப்பின்கீழ் ஆசிரியர் தனது ஆண்டுக்கான பணியினை, இலக்குகளை தெளிவாக குறிப்பிட வேண்டும். இதற்கு முன்னையவருடத்தின் மூன்றாம் தவணைப் புள்ளிகள், அல்லது முற்சோதனைப் புள்ளிகள் அடிப்படையாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். இங்கு ஒவ்வொரு மாணவன் தொடர்பாகவும் ஆசிரியர் தெளிவான பார்வையினைக் கொண்டிருப்பதோடு, அனைத்து மாணவர்களினையும் தனது பாடத்தில் சித்தியெடுக்க வைக்க வேண்டிய கடமைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றார் என்பதனை மதிப்பிடுபவர் கவனத்தில் கொள்ளல் வேண்டும். உதாரணமாக 85% மான மாணவர்களை சித்தியெடுக்க வைத்தல் எனக் குறிப்பிடப்படுமாயின், 15% மான மாணவர்களினை கவனத்தில் கொள்ள மாட்டேன் என்கின்ற விடயம் உட்கிடையாக கூறப்படுகின்றது. உண்மையில் ஒரு சிறந்த ஆசிரியர் ஒவ்வொரு மாணவனதும் நிலையினை நன்கு உணர்ந்த பின்னரே இதனை எழுதுதல் வேண்டும்.

தனது பணியினையும், இலக்குகளையும் நிறைவேற்றுவதற்கு தேவையான வளங்களினையும், பயிற்சித் தேவைகளையும் சரியான முறையில் அடுத்து குறிப்பிடப்படல் வேண்டும்.

அடுத்து குறிப்பிடப்பட்ட வருடத்திற்குரிய இலக்குகளை இமை காட்டக்கூடிய குறிகாட்டிகளை மதிப்பிடப்படுபவர் குறிப்பிட வேண்டும்.இவற்றினை அடிப்படையாகக் கொண்டு தவணை முடிவில் அடைவுகளின் நிலைமைகள் பற்றி மதிப்பிடுபவரும்-மதிப்பிடப்படுபவரும் கலந்தாலோசிக்கின்ற போது அக்குறிகாட்டிகளிலும் கவனம் செலுத்தி முன்னேற்றத் தன்மைகள் தொடர்பாக ஆராய்வதுடன், இன்னும் கையாளக்கூடிய புதிய நுட்பங்கள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்க வேண்டும்.

நான்காவது நிரலில் மதிப்பிடப்படுபவர் பெற்றுக் கொண்ட அடைவுகளையும் வருட இறுதியில் குறிப்பிட வேண்டும். ஐந்தாவது நிரலில் மதிப்பிடுபவர் ஆசிரியரின் ஊக்கம் வெளிப்படுத்துமாறும் தனது அவதானிப்புக்களின் பின்னூட்டல்கள் தொடர்பாகவும் தனது குறிப்பினை இடல் வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளினூடாகவும் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தியில் பெரிதும் பங்காற்றுகின்ற விடயமாக ஆசிரியர் தரங் கணிப்பீடு விளங்குகின்றது என கூறுவது மிகையாகாது.

**உசாத்துணைகள்**

1) பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வழிகாட்டல் கைநூல், கல்வி அமைச்சு-2013

2) 2003/39ம் இலக்க சுற்றறிக்கை (கல்வி அமைச்சு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த். தவமலர்
வலைப்பாடு

## வலைப்பாடு புனித அன்னம்மாள் பங்கில் 'மரியாயின் சேனை'

வலைப்பாடு புனித அன்னம்மாள் பங்கின் மரியாயின் சேனைப் பிரசீடியமானது, இரணைதீவு - வலைப்பாடு பங்குத் தந்தையாயிருந்த பிரான்ஸ் தேச குருவான அருட்பணி. ஹென்றிமோறோ அடிகளாரால் 1958ல் ஆரம்பிக்கப்பட்டது. இவ் ஆரம்பத்திற்கு நெடுந்தீவு ஜேம்ஸ் மாஸ்ரர், இராக்கினியம்மா ரீச்சர், மற்றும் மரியாம்பிள்ளை உபதேசியார் போன்றோர் பங்குத் தந்தைக்கு உறுதுணையாயிருந்தனர்.

பங்கின் முதல் பிரசீடியம் "பாவிகளின் அடைக்கலம்" எனும் பெயரில் 20 உறுப்பினர்களுடன் ஆரம்பமானது. இதில் காலம் சென்றவர்களான திருமதி. செ. மரியமுத்து தலைவராகவும் திருமதி அ. எலிசபெத் உபதலைவராகவும், செல்வி ச.இராக்கினியம்மா (ரீச்சர்) செயலாளராகவும், திருமதி ஞா. ஆகத்தம்மா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டு சேனை சிறப்பாக செயலாற்றி வந்தது. அக்காலப் பகுதியில் இரணைதீவு - வலைப்பாடு பங்குகளில் இயங்கி வந்த பிரசீடியங்கள் மன்னார் மறைக்கோட்டத்துடன் இணைக்கப் பட்டிருந்தன.

வண. பிதா ஹென்றி மொறோ அவர்கள் இடம் மாற்றலாகிச் சென்ற பின்னர் ஸ்பெயின் தேச குருவான பொனிபஸ் கொன்சால்வோஸ் மற்றும் அருட்பணியாளர் J.P.தேவராஜா கியோர் சேனையை விசுவாசத்திலும் பற்றுறுதியிலும் வழிநடத்தி வந்தனர்.

மன்னார் மறைக்கோட்டம், மறைமாவட்டமாக ஆக்கப்பட்டதன் பின் மன்னார் கொமிற்சியத்திலிருந்த எமது பிரசீடியம் யாழ்ப்பாண கொமிற்சியத்துடன் இணைக்கப்பட்டது. அத்தோடு எமது பங்கில் பாலர் பிரசீடியம், இளைஞர் பிரசீடியம் எனும் இரண்டு பிரசீடியங்கள் உருவாக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வந்தன. 1988ல் அருடபணியாளர் ஜெயக்குமார் அடிகளார் "கிறிஸ்தவர்களின் சகாயம்" எனும் பெயரில் இன்னுமொரு பிரசீடியத்தை ஆரம்பித்தார்.

கிளி முல்லை மறைக்கோட்டத்தில் கியூறியா இல்லாத குறை உணரப்பட்டபொழுது அப்போது குருமுதல்வராக பணியாற்றிய அருட்பணி தேவசகாயம் அடிகளாரதும், அருட்பணி பீற்றர் அடிகளாரதும் அயராத முயற்சியின் பயனாக கிளி - முல்லை மறைக்கோட்ட முதல் கியூறியா 2002.03.09ல் உருவாகியது. இக் கியூறியாவில் திருமதி தீ. தவமலர் தலைவராகவும், திருமதி. யே.மேரிமாக்கிறட் உப தலைவராகவும், தோ.மரியகன்னி செயலாளராகவும், ப.புஸ்பவதி பொருளாளராகவும் அருட்பணி பீற்றர் ஆன்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குனராகவும் தெரிவு செய்யப்பட்டு கிளி – முல்லை மறைக் கோட்டத்தை வழிநடத்தினர். இதன் பயனாக இங்குள்ள பல பங்குகளில் பல பிரசீடியங்கள் உருவாகின.

2009ல் வன்னிப் பெருநிலப் பரப்பில் ஏற்பட்ட பெரும் யுத்தமும் இடப்பெயர்வும் சேனையினரை மிகவும் பாதித்தது. சேனையின் பொக்கிசங்களான கைநூல்கள் , ஏடுகள், அறிக்கைகள், சொருபங்கள் என அனைத்தும் அழிந்து போனதுடன் சேனையினர் பலரினதும் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. சேனையினர் சிதறடிக்கப்பட்டனர். எனினும் அவர்கள் எங்கெல்லாம் இருந்தார்களோ அங்கெல்லாம் மரியாளின் அன்புப் பணிகள் தொடர்ந்தன. துன்பப் பட்டோருக்கு உதவுவதும், ஆறுதலாயிருப்பதும் அவர்கள் பணியாயின.

2010ல் மீள் குடியேற்றங்கள் நிகழ்ந்தன மரியாயின் சேனையினர் அன்னை மரியாளின் மேல்வைத்திருந்த பற்றுறுதி பங்கில் மீண்டும் புத்துயிர் பெற்றது. அப்போது பங்குத் தந்தையாயிருந்த அருட்பணியாளர் நேசநாயகம் அடிகளார் மரியாயின் சேனையினரை ஒன்றுபடுத்தி பிரசீடியங்களை அருட்சியுடன் நெறிப்படுத்தினார். இதனால் புதிய உறுப்பினர்கள் சேனையில் இணைய ஆர்வம் கொண்டனர். அருட்பணி நேசநாயகம் அடிகளாரின் இடமாற்றத்தின் பின்னர் நமது பங்குக்குருவான அருட்பணி சில்வெஸ்ரர்தாஸ் அடிகளார். பங்கில் மேலும் ஒரு பிரசீடியத்தினை “மகா பரிசுத்த மாதா” எனும் பெயரில் உருவாக்கினார்.

தற்போது எமது பங்கில் மூன்று பிரசீடியங்கள் அன்னை மரியாளின் அன்புப் பணியைத் தொடர்கின்றன.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரி எலிசபெத்
திருக்குடும்ப கன்னியர் மடம்
குமிழ முனை

# உதயம்

1992 ஆவணி 12 இல் இரணைதீவில் இருந்து இடம்பெயர்ந்து வலைப்பாட்டிற்கு வந்த பொழுது மறைந்த ஆயர் மேதகு தீயோகுப்பிள்ளையின் பணிப்பின் பெயரில் வலைப்பாட்டில் தங்கி இருந்து எமது பணியை ஆரம்பித்தோம்.

1992 புரட்டாதி முதலாம் திகதி எனக்கு ஆசிரிய நியமனம் வலைப்பாடு றோ.க. வித்தியாலயத்தில் கிடைத்தது. வலைப்பாடு பங்கு பணிமனையில் தங்கி இருந்து எனது பணியை ஆரம்பித்தேன். என்னோடு சகோதரிகள் கேமன்யோசப், கிளமெண்ற், யொசப்பின் மேரி, இணைந்து பணி செய்தார்கள்.

பாடசாலை ஆலயத்திற்கு அருகில் இருந்தது. தரம்1– தரம்5 வரை மாணவர்கள் கல்வி கற்றார்கள். அதிபர் உட்பட இரண்டு ஆசிரியர்கள் பணி புரிந்தோம். 180ற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்ற காலத்தில் 2 ஆசிரியர்களுடன் பாடசாலையை நடத்துவது மிகக் கடினகாக இருந்தது. அக்காலத்தில் பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி லோரன்ஸ் அடிகளார் 3 தொண்டர் ஆசிரியர்கனை நியமித்து சிறிய ஊதியம் வழங்கினார்.மறைந்த ஆசிரியர் லலிதா, திருமதி தொபியாஸ் கலிஸ்ரா, திரு. பிரபாகரன் தங்கள் தரமான சேவையை பாடசாலைக்கு வழங்கினார்கள். நிரந்தர ஆசிரியர்களைப் போன்று இவர்கள் ஆற்றிய சேவை காலத்தால் அழியாதது.

இக்காலத்தில் வேரவில் கிராமத்தில் கன்னியர் மடம் அமைக்கப்பட்டு 1993 ஆடி 6ம் திகதி 20 குடும்பங்களுடன் புதிய கிராமத்தில் குடியேறினோம். 1993இல் அருட் சகோதரி றேவதி தனது முதல் அர்ப்பணத்தை முடித்து எமது குழுவிற்கு அனுப்பப்பட்டார். நாம் இருவரும் அங்கிருந்து கால் நடையாக பாடசாலைக்கு வருவோம். இப்போது இருக்கின்ற வீதிகளும் புதிய கிராமங்களும் பெருங்காடாக இருந்தது.

பாடசாலைக்கு வரும் போது எமக்கு மகிழ்ச்சி. காலைச் செபத்துடன் விளையாட்டு,கற்றல் செயல்கள் எல்லாவற்றிலும்மாணவரோடு இணைந்து இருந்தோம்.தரம் 1,தரம்2 இல் 92மாணவர்கள் கல்வி கற்றார்கள். நான் வகுப்பாசிரியராக இருந்தேன்.சகோதரி றேவதி எனக்கு துணையாக இருந்து கற்பித்தார். ஆரம்பத்தில் ஒழுங்கற்ற வரவு,பாடசாலைக்கு பிந்தி வருதல்,கற்றல் உபகரணங்கள் ஒழுங்கின்மை,போன்ற குறைபாடுகள் நாளுக்கு நாள் சீரடைந்து வளர்ச்சியுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரின் விருப்பின் பேரில் தரம் 6 ஆரம்பிப்பதற்கு அருட்பணி லோரன்ஸ்சால் எடுக்கப்பட்ட முயற்சிகள் பல தடைகளுக்குள்ளானது. அக்காலத்தில் கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்த முன்னாள் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா எமது பாடசாலையை தரிசித்த போது பிள்ளைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தார். ஆங்கிலப் பாடல்களை சிறுவர்கள் பாடி வகுப்பில் அவரை வரவேற்றார்கள். பிள்ளைகளின் திறமை ஆர்வத்தைப் பார்த்து இங்கு தரம் 6 தொடங்க வேண்டுமென்றால் கன்னியர் இல்லத்தில் விடுதிச்சாலை திறந்து குறைந்தது 10 பிள்ளைகளை சேர்க்கும் படி கூறினார். அதற்கமைய விடுதிச்சாலை திறக்கப்பட்டு 16 ற்கு கூடுதலான மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

ஆனாலும் வலைப்பாட்டு மக்களில் ஒரு சில குடும்பங்கள் தரம் உயர்த்தப்படுவதைத் தடுத்தார்கள். பல சவால்களுக்கு மத்தியில் தரம் 06 உதயமானது. இன்று 1992 இல் விதைத்த விதை, சிந்திய வியர்வைத் துளிகள், கடின உழைப்பு எல்லாம் சேர்ந்து பெரிய மரமாக ஒரு வித்தியாலயமாக வளர்ச்சியடைவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றேன். பாடசாலையின் உயர்வுக்கு அடிக்கற்களாக இருந்த மறைந்த அருட்பணி கருணாரட்ணம், அருட்பணி ஜெயக்குமார், அமலமரித்தியாகிகள், அருட்பணி லோரன்ஸ் இவர்களின் பணியை வலைப்பாட்டு கிராம மக்கள் மறக்கமாட்டார்கள் என நம்புகின்றேன்.

அகவை 100இல கால் பதிக்கும்
கல்விக் கூடமே நீ வாழ்க
அறிவூட்டிய ஆசான்களே நீவிர் வாழ்க
ஆன்மீகப்பணிக்காய் கால் பதித்த குருகுலமே
அறிவுக்கண்களை திறந்த உங்கள் பணி வாழ்க
என்னைப் பின் தொடர்ந்து கல்விப் பணியை முன்னெடுக்கும்
அருட்சகோதரிகளே நீவிர் வாழ்க
வாழ்க வாழ்க
நெய்தல் நிலச் சிறப்புக் கொண்ட
அன்னையின் நிழலில் வாழும்
மழலைச் செல்வங்களே நீவிர் வாழ்க
100ஆண்டு அகவையைக் காணும்பாடசாலை முதல்வரே நீவிர் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்சகோதரி.சி.அனற்றா,
ஆசிரியர்,
கிளி/வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை

# நேரத்தின் முக்கியத்துவம்

கடவுள் மனிதனுக்கு கொடுத்த மாபெரும் கொடை வாழ்வாகும். இல் வாழ்வை மனிதன் அழகுற அமைத்து வாழ்வது அவனது தலையான கடமையாகும். இதற்குநேரத்தை திட்டமிட்டு ஒழுங்குபடுத்த வேண்டும். நேரத்தை இழந்தால் அதை மீண்டும் பெற முடியாது அது தாய் மாதிரி. இன்னொரு தாய் கிடைப்பது இல்லை. நீங்கள் வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை கண்ட படி செலவளித்து விடாதீர்கள். அதை திட்டமிட்டு பயன்படுத்த வேண்டும்.

இதை திருவிவிலியத்தில் சபை உரையாடல் நூலில் ( சபை.உரை 3/1-8 ) ஒவ்வொன்றிற்கும் ஒரு நேரமுண்டு. உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு. பிறப்புக்கு ஒரு காலம் ,அறுவடைக்கு ஒரு காலம், அழுகைக்கு ஒரு காலம், சிரிப்புக்கு ஒரு காலம், அன்புக்கு ஒரு காலம், வெறுப்புக்கு ஒரு காலம்,போருக்கு ஒரு காலம், அமைதிக்கு ஒரு காலம் என்று காலத்தின் மேன்மையை திருவிவிலியம் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

கடலலையும் , காலமும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை அது அது வந்து போய் கொண்டிருக்கும்.

கடிகாரம் ஓடு முன் நீ ஓடு என்று பாரதியார் அழகாக கூறியுள்ளார். அதாவது நாம் செய்ய வேண்டிய செயல்களை மிக விரைவாக செய்ய வேண்டும் என்பதாகும்.

பாடசாலை வாழ்வில் மாணவப்பருவத்தில் கல்வியில் முன்னேறிச் செல்வதற்கு நேர முகாமைத்துவம்,நேரம் திட்டமிட்டு செயல்படுவது என்பது முக்கியமான ஓர் அம்சமாகும். நாம் நேரத்தின் பயன்பாடு பற்றி சிந்தித்துப் பார்த்தால், நேரத்தை எப்படி செலவழிப்பது என்பதைப் பொறுத்தே எதிர் காலம் அமையும். மாணவர்களின் உயர்வும், தாழ்வும் பொன்னான நேரங்களை அவர்கள் எப்படி பயன்படுத்துகின்றார்கள் என்பதை பொறுத்தே வாழ்வு அமையும். வீண் களியாட்டங்களிலும், பொழுது போக்குகளிலும், அதிக நேர விளையாட்டிலும், ரீ.வி நாடகங்கள் பார்ப்பதிலும் நேரத்தை துஸ்பிரயோகம் செய்பவர்களின் வாழ்வில் முன்னேற்றம் இருக்காது.

நேரம் பொன்னானது கடந்து போன காலத்தையும் , இறந்து போன உன் உறவுகளையும் மீண்டும் உன்னால் பெற முடியாது . இன்று பலரும் கூறுவார்கள் தண்ணீரை வீண்விரயம் செய்யாதீர்கள், பொதுச்சொத்துக்களை நாசமாக்காதீர்கள், வளங்களை வீண்விரைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்காதீர்கள் என்று ஆனால் நாம் எவ்வளவு வீணடிக்கின்றோம்? நீ வாழ்வை அன்பு செய்கின்றாயா? அப்படியெனில் நேரத்தை வீணாக்காதே என்கிறார் அறிஞர் பிராங்கிலின். ஒரு செக்கன் நேரத்தின் அருமையைப்பற்றி ஒலிம்பிக் போட்டியில் 100து ஓட்டத்தில் முதலிடத்தை தவறவிட்டவனிடம் கேட்டால் , கண்களில் நீர் ஓடக் கூறுவான். தனது சோகத்தை எதையும் திட்டமிட்டுச் செய்யும் ஒருவனுக்கு ஒரு நாளில் 24 மணித்தியாலம் அல்ல 25மணித்தியாலம் கிடைக்குமாம். நாம் எமது நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தும் போது அதிகாலையில் நேரத்திற்கு எழுந்து படிக்க, இறைவனை தியானிக்க, எமது வீட்டு வேலைகளை செய்ய முடியும். அத்துடன் அதிகாலையில் நேரத்துடன் கண் விழித்து எழுபவனுக்கு சிறிது நேரமேனும் இயற்கையுடன் சங்கமிப்பவனுக்கு பிரபஞ்சத்தின் பஞ்ச பூத சக்திகள் அனைத்தும் ஒருங்கே கிடைக்க அவன் உடலும் உள்ளமும் ஆரோக் கியமடைவான்.

நீங்கள் சிந்திப்பதற்குச் செலவிடும் நேரம்
உங்கள் ஆற்றலுக்கான ஊற்று

வாசிப்பதற்குச் செலவிடும் நேரம்
உங்கள் அறிவை வளப்படுத்தும்

நேசிப்பதற்கு ஒதுக்குகின்ற நேரம்
நிறையவே மகிழ்ச்சியைக் கொண்டு வரும்

விளையாட்டுக்கு நீங்கள் ஒதுக்குகின்ற நேரம்
உங்கள் மாறா இளமையின் இரகசியம்

உழைப்புக்கு நீங்கள் செலவிடும் நேரம்
உங்கள் வெற்றிக்குத் தருகின்ற விலை

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற பழமொழிக்கமைய எமது மாணவப் பருவத்தில் நேரத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டும். காலத்தையும், நேரத்தையும் பொன்னாக்க வேண்டியது உமது கடமையும் பொறுப்புமாகும். உங்கள் நேரத்தை செலவிடுவதில் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் எப்படி நேரத்தை செலவழிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அமையும் உங்கள் எதிர் காலம்.

உங்கள் உயர்வும் தாழ்வும் அந்த பொன்னான கணங்களை நீங்கள் பயன்படுத்தும் முறையைச் சார்ந்திருக்கின்றது. எனவே நேரத்தை திட்டமிடுதல் மூலம், எமது செயற்பாடுகளை மேற்கொண்டு, உச்ச பயனைப் பெறவும், வாழ்வில் உயர்வு அடையவும், காலத்தையும் நேரத்தையும் அர்த்தமுள்ள வகையில், பொருள் பொதிந்த முறையில் செலவிட்டுவாழ்வில் முன்னேற வேண்டும்.

"நேரம் பொன்னானது" நாமும் நேரத்தையும் மதித்து வாழ்வை வெல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி. சி. சிந்துஜா
ஆசிரியர்,
கிளி/கிராஞ்சி அ.த.க. பாடசாலை
கிராஞ்சி.

# தமிழ்
# அது அவமானமல்ல நம் அடையாளம்.

எல்லா மொழிக்கும் இல்லாத ஓர் சிறப்பு நம் தமிழ் மொழிக்குண்டு. அதாவது இந்த உலகத்தில் வாழ்கின்ற சுமார் ஒன்பது கோடி மக்கள் தமிழ் பேசுகின்றார்கள். இந்த உலகிலேயே மொத்தமாக 6809 மொழிகள் காணப்படுகின்றன. இதில் நூறு மொழிகளே எழுத்துக்களைக் கொண்ட மொழிகளாகக் காணப்படுகின்றன. இதிலும் ஆறு மொழிகளே மிகப் பழமையான மொழிகள், அவையாவன கீப்று, கிரேக்க மொழி, லத்தீன், சமஸ்கிருதம், சீன மொழி மற்றும் தமிழ் மொழி. ஆனால் இன்று தமிழ், சீன, கீப்று ஆகிய மொழிகள் தான் பேச்சு மற்றும் எழுத்து வடிவில் உள்ளன. இது நாம் பெருமை கொள்ள வேண்டிய விடயம். உலகிலே மனிதர்களுக்குத் தெரிந்த முதல் மொழி தமிழ் மொழி தான் என்று ஆய்வாளர் அலைக்ஸ்கோலியர் கூறியுள்ளார். சுமார் இருபது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் மொழி தோன்றியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

உலகத்தில் தமிழ் பேசத் தெரிந்த மக்களுள் ஒரு கால் ( 1/4 )பகுதி மக்களுக்கு தமிழ் மொழியை வாசிக்கவோ எழுதவோ தெரியாது. நம் தமிழ் மொழி திராவிட குடும்பத்தைச் சேர்ந்த மொழியாகும். தமிழ் மொழி பரவலாக இலங்கை மற்றும் இந்தியாவின் தமிழ் நாடு, பாண்டிச் சேரி ஆகிய இடங்களில் தான் பேசப்படுகின்றது. தமிழ் நாடு, சிங்கப்பூர், புதுச்சேரி, மற்றும் இலங்கை ஆகிய இடங்களில் தான் தமிழ் மொழி ஆட்சிமொழியாக காணப் படுகின்றது.

“அம்மா” என்ற வார்த்தையானது தமிழ் மொழியின் அழகியலை உணர்த்துகின்றது. அ என்பது உயிர் எழுத்தையும், ம் என்பது மெய் எழுத்தையும் மா என்பது உயிர் மெய் எழுத்தையும் குறிக்கின்றது. தமிழ் மொழியில் ஏறத்தாள இருபத்து இரண்டு வகை வழக்குத் தமிழ்கள் காணப்படுகின்றன. தமிழினை அ என்ற சொல்லிலே ஆரம்பித்துள்ளனர். அம்மா, அன்பு என்றெல்லாம் அர்த்தம் சொல்வார்கள். அவ்வாறே வேற்று மொழியில் அப்பிள், ஆப்பர் என்று கூறுகின்றார்கள். இதனால் தான் உணவில் இருந்து தோன்றியது வேற்று மொழி, உணர்வில் இருந்து தோன்றியது தமிழ் மொழி என்று தமிழின் பெருமையை கூற முடிகின்றது. உணர்வுகளுடன் ஒன்றிப்பதனால்தான் தமிழ் என்றும் அடையாளமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தமிழ் மொழியை அமுது என்று நம் முன்னோர் ஏன் அன்று கூறியிருந்தார்கள்? அதாவது தமிழை சிறப்பாக உச்சரிக்கும் போது குறிப்பாக ழ கரத்தினை உச்சரிக்கும் போது நாவின் நுனியைக் கொண்டு மேலண்ணத்தை தொடுகின்றோம். அவ்வாறு மேலண்ணத் தைத் தொடும் போது மேலண்ணத்திற்கு மேலாகவும் கண்ணிற்கு பின்பாகவும் இருக்கக் கூடிய மூளையின் சில பகுதிகள், மூளைக்கு நடுவே இருக்கக் கூடிய ( பிச்சுட்டி கிளாண்ட், பைனியல் பிளான்ட் ) என்று சொல்லக் கூடிய சில சுரப்பிகள், மெலற்றோனின், சிலற் றோனின் என்ற இன்னும் சில அமுதாக இருக்கக் கூடிய சில சுரப்பிகளை உற்பத்தி செய்து நம் உடம்பை அழிவில்லாது பாதுகாக்கின்றது. எனவே தமிழ் என்று சொன்னாலே உடல் நலனும் மன நலமும் பாதுகாக்கப்பட்டு நம் வாழ்நாள் நீடிக்கப்படுகின்றது. அவ்வாறே தான் சித்த மருத்துவத்திலும் கூட தமிழ் மொழியும், தமிழ் கலாச்சாரமும் தான் முன்னோர்களின் ஆரோக்கியத்திற்கு சிறந்த மருந்தாக காணப்பட்டிருக்கின்றது என்பதற்கு "பதார்த்தகுண சிந்தாமணி" என்கின்ற நூல் ஆதாரமாக காணப்படுகிறது.

ஆனால் இன்றைக்கு இருக்கின்ற இச் சூழலில் எல்லாத் துறைகளிலும் நம் மொழியையும் பண்பாட்டையும் புரட்டிப் போட்டுள்ளதை காணக் கிடைக்கின்றது. இதுவே மன வேதனைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. முற்காலத்தில் போற்றப்பட்டு வந்த நம் தமிழ் பண்பாடு, பிற்காலத்தில் மறக்கப்பட்டிருந்தது. ஆனால் அது தற்காலத்தில் மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. என்பதுதான் தமிழின், தமிழரின் தலைவிதியா? இருந்தாலும் மறைப்பதற்கு நம் தமிழ் ஒன்றும் அவமானமல்ல. அது நம் அடையாளம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இன்னாசி தீத்தூரசப்பர் ( சைமன் )**

பழைய மாணவர்

# ஏணிகள்

கப்பல் துறைசார் வெளிநாட்டுக் கல்வி பெற புலமைப் பரிசிலினூடாக சிங்கப்பூர் செல்வதற்கு வடக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவர்களில் ஒருவராக என்னை ஆக்கிய பெருமை, இவ்வாண்டில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இப் பாடசாலைக்கும் உரியது. என்ற வகையில் இவ்விழாவையொட்டி மலரவிருக்கும் நூற்றாண்டு விழா மலரூடாக எனது பழைய நினைவுகளை மீட்டுக் கொள்வதில் பெருமை கொள்கின்றேன்.

யாழ் மறைமாவட்டத்தில் பூநகரியின் மேற்கே வழி மீசாமாகத் திகழ்ந்த வலைப்பாடு அலை தழுவி களி நடனம் புரியும் அழகிய கிராமமாகும். அக்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தாலும் இக் கிராமக் கத்தோலிக்க குருக்களாகிய அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்திருந்தது. அந்த வகையில் இம் மக்களின் கல்வி சார்ந்த விடயங்களுக்கும் அவர்களே பொறுப்பாயிருந்தனர். அதன்படி இருக்கனும், உபதேசிமார்களுமே மக்களுக்கு ஞான உபதேசம், மொழி மற்றும் கணித அறிவைப் புகட்டி வந்தனர்.

1919. 03. 22ல் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தையரால் முறையான கல்விச் செயற்பாடுகளுள்ளதாக இப்பாடசாலை யா/ வலைப்பாடு றோமன் கத்தோலிக்க பாடசாலை எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென கோவில் வளவினுள், கோவிலின் வடக்கேயிருந்த பெரிய புளியமரத்தை ஒட்டியதாக ஒரு சிறிய கொட்டில் அமைக்கப்பட்டது. இக் கொட்டில் நான்கு காட்டுமரக் கொப்புகளின் ஆதாரத்தில் தென்னோலைத் கிடுகளால் வேயப்பட்டிருந்தது. பக்க அடைப்புகள் ஏதுமின்றி வெளியாய் இருந்தது. தரை முழுதும் வெண்மணலால் நிறைந்திருந்தது.

வகுப்புகள் யாவும் அங்கிருந்த புளியமர, வேப்பமர நிழலிலேதான் நடைபெற்றன. இப் பாடசாலையின் முதல் தலைமை ஆசிரியராக திரு மார்ட்டீன் அவர்கள் நியமிக்கப்பட்டிருந் தார். அவருக்கு உதவியாக ஒருவர் இருந்தார். இந்த உபதேசியாரே ஆலய வழிபாடுகளில் சுவாமிக்கு துணையாக இருப்பவர்.

1942ம் ஆண்டு நான் பள்ளிக்கூடம் சென்றேன். அப்போது ஆசிரியராக இருந்தவர். இளவாலை அல்போன்ஸ் மாஸ்டர் ஆவார். இவர் சிறந்த நாடகக் கலைஞர் பாடகரும் கூட. பாடம் நடாத்தும் போது நடிகராகி விடுவார். கதை கூறும் போது அதிலுள்ள பாத்திரமாக மாறிவிடுவார். பாட்டும், ஆட்டமுமாக பாடம் நடக்கும். நாங்கள் குறிப்பெடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதில்லை எனினும் அவர் கற்பித்த யாவும் பசு மரத்தாணி போல் மனதில் பதிந்து சிலையில் எழுத்தாய் நினைவில் நிற்கும்.

நான் பாடசாலை சேர்ந்த அடுத்த வருடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சூசைப் பிள்ளை மாஸ்டர் தலைமை ஆசிரியராக பொறுப்பேற்றார்.மிகவும் கண்டிப்பானவர். இவர் எமதூரில் தங்குவதில்லை. பொன்னாவெளியில் இருந்து கால்நடையாகவே பாடசாலைக்கு வருவார். அவர் வரும் போது மாணவர் இடாப்புக்களை தலையில் வைத்து சுமந்தபடி வருவார். இதனால் அவருக்கு கூடார வண்டி என பட்டப் பெயர் சூட்டியிருந்தோம். அவர் வருவ தற்கு முன்னரே தென்னம் பூக்கு விளக்குமாற்றால் (தென்னம் பூம்பாளை) முற்றத்தை அழகுற கூட்டி வைத்திருக்க வேண்டும். அள்ளாது போனால் "சணல் பறந்த" அடிவிழும்.

எமது பாடசாலையில் ஐந்தாம் தரத்திற்கு மேல் வகுப்புகள் இல்லை. எனினும் மாணவர்கள் அடுத்து வரும் ஆண்டுகளிலும் பாடசாலைக்குச் செல்வார்கள். அந்த வகையில் நானும் பாடசாலை சேர்ந்து ஏழாவது ஆண்டில் நவாலி தேவரெட்டினம், கரையூர் அ. றிஜ்மண்ட் ஆகிய இரண்டு ஆசிரியர்கள் பாடசாலைக்கு புதிதாய் வந்தார்கள். அவர்களுள் நவாலி தேவரெட்டினம் மாஸ்ரர் ஆங்கிலம் படிப்பிக்கவும், கரையூர் அ. றிஜ்மண்ட் ஆசிரியர் மொழி கற்பிக்கவும் வந்தனர்.

நவாலி தேவரெட்டினம் ஆசிரியர் சமூக முன்னேற்றத்தில் அக்கறையுடையவர். இவர்தான் முதன்முதலில் எமதூருக்கு துவிச்சக்கரவண்டியை கொண்டுவந்தவர். எமது வாலிபர்களுக்கு சைக்கிள் ஓட்டப் பழக்கியவரும் இவரே. அரச உத்தரவுப் பத்திரம் பெற்று 12ம் நம்பர் துப்பாக்கி ஒன்றும் வைத்திருந்தார். இரவில் வாலிபர்களை அழைத்துக் கொண்டு லைற் வேட்டைக்குச் செல்வார். வேட்டையில் கிடைப்பதை கிராம மக்களுக்கு பங்கு வைத்து இலவசமாகவே கொடுப்பார். இச் செயற்பாடுகளால் கிராமத்தாரோடு அந்நியோன்யமாகிய இவர் வாலிபர்களை ஒன்று சேர்த்து வாசிகசாலை ஒன்றை உருவாக்கினார். அதற்கு "ஜெக மீட்பர் முன்னேற்றக் கழகம்" எனும் பெயர் சூட்டினார். இப் பெயரே பிற்காலத்தில் ஸ்பானி யாவைச் சேர்ந்த வெள்ளைக்கார குருவான அருட்தந்தை பொனிபஸ் கொன்சால்வேஸ் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட விளையாட்டுக் கழகத்தினதும் பெயரானது.

கரையூரைச் சேர்ந்த அ. றிஜ்மண்ட் மாஸ்ரர் இனிய சுபாவமுடையவர். சிறந்த பக்திமான். மாணவர்களை இறைபக்தியில் வாழவும் நல்ல விழுமியமுடையவர்களாக மாற்றவும் சிரத்தையுடன் செயற்பட்டார். பெரியவர்களை மதிக்க வேண்டும் அனைவருடனும் அன்பாக, பணிவாகப் பழக வேண்டும் போன்ற பண்புகளை மொழிப் பாடத்தினூடாக மாணவர்களுக்கு சொல்லித் தருவார். இவர் தனது காலத்தில் ஒருவரையாவது வெளியூர் (யாழ்ப்பாணம்) பெரிய பாடசாலையில் படிப்பிக்க வேண்டும் எனும் ஆவல் கொண்டிருந்தார். அவரது ஆசைக்கு முதற்கனி நான் ஆனேன். எட்டாம் வகுப்பு படிக்க வேண்டிய வயதிலும் மேல் வகுப்புக்கள் இல்லாமையினால் ஐந்தாம் வகுப்பிலேயே தொடர்ந்தும் கற்றுக் கொண்டிருந்தேன். மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சிறந்து விளங்கிய என்னை யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லவென எனது பெற்றோரிடம் அனுமதி கேட்ட போது அவர்கள் ஏதோ பயங்கரத்தை கேட்டது போன்று "குய்யோ முய்யோ" என சத்தம் போட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையெழுத்துப் போடத் தெரியும் தானே, அவனுக்கு படிப்புக் காணும் எங்கள் மகன் எங்களோடயே இருக்கட்டும் என்றனர். ஏனென்றால் அக்காலம் வரையில் கல்வி கற்பதற்கோ,தொழில் புரிவதற்கோ என எவரும் ஊரை விட்டு சென்றிருக்கவில்லை. இதனால்தான் பிற்காலத்தில் கொலசிப் மூலம் வெளிநாடு சென்று படிப்பதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்த போதும் அதன் பெறுமதியை உணராது "பாசம்" என்று கூறி எனது வெளிநாட்டுக் கல்விப் பயணத்திற்கு தடைபோட்டார்கள். ஆனாலும் றிஜ்மண்ட் மாஸ்ரர் விடவில்லை சுவாமியாருடன் பேசி வீட்டாரைச் சம்மதிக்க வைத்தார். சம்மதம் கிடைத்ததும் அவர் என்னை யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று எனக்கு உடுப்புகளும் கொப்பி புத்தகங்களும் வாங்கித் தந்தார். யா/கொழும்புத்துறை சூசையப்பர் வித்தியாலயத்தில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்தார். விடுதியில் நின்று நான் படிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தினார். அக்காலத்தில் விடுதிக்கு மாதம் இருவது ரூபாய் மட்டுமே அதனையும் அருட்தந்தை ஸி யூ சிங்கராயர் அடிகளாருடாக கட்டுவதற்கு வழி செய்தார். எட்டாம் வகுப்பு படிக்கும் வயதில் நான் ஆறாம் வகுப்பில் சேர்ந்தேன். எனது கட்டையான உருவம் காரணமாக வயது எனக்கு பிரச்சனையாக இருக்கவில்லை. பாடசாலையில் என்னை எல்லோரும் விரும்பினர். அங்கு எனக்கு கற்பித்த தெய்வங்களை இன்னும் என்னால் மறக்க முடியாது.

அவர்களுள்

L R சிங்கராயர்
அன்ரனி ஆண்டகை
ஆயர் தியோகுப்பிள்ளை
ஐயாத்துரை மாஸ்டர்
நவாலி பொன்னிப்பார் வாத்தி
ஈச்சமோட்டை நீக்கிலாப்பிள்ளை மாஸ்டர்
அச்சுவேலி சின்னப்பு வாத்தியார்
பாசையூர் புட்டு மாஸ்டர்
கரையூர் மரியாம்பிள்ளை மாஸ்டர்
முல்லைத்தீவு ஜேம்ஸ் மாஸ்டர்

அரவணைப்பும், ஊக்குவிப்பும் எனது கற்றலை அதிகரித்தது. இதனால் வகுப்பில் சிறந்த மாணவனானேன். இதன் பயனாக S. S. E சோதனையில் நான் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றேன்.

இப் பெறுபேறுகளால் நான் நீர்கொழும்பு மீன்பிடி பயிற்சிக் கல்லூரிக்குத் தெரிவானேன். அங்கு பயிற்சி முடிந்ததும் கொழும்பு கொச்சிக்கடை றங்கல நேவாயிலும், கொழும்பு முகத்துவார கப்பல் துறைமுகத்திலும் மேலதிக பயிற்சிகளைப் பெற்றேன். இதன் பயனாக புலமைப்பரிசிலினூடாக சிங்கப்பூர் சென்று கப்பல் கட்டுமானத்துறையில் உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இத்துறைக்கு இருவர் தெரிவு செய்யப்பட்டோம். மற்றயவர் சாவகச்சேரியைச் சேர்ந்த எதிர்மன்ன சிங்கம் எனினும் எனது பெற்றோரினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினரதும் உடன்பாடில்லாததால் எனது வெளிநாட்டுக் கல்விப் பயணம் தடைப்பட்டது. இது இறைவனின் சித்தம் என எண்ணினேன். எனது கல்வி அறிவு என் சமுகத்திற்கு தேவைப்பட்டது போலும்.

பிற்பகுதி: நான் எனது கிராமத்துப் பாடசாலையிலிருந்து மாற்றலாகிச் சென்றதன் பின்னர் பல நல்ல ஆசிரியர்கள் எமது பாடசாலைக்கு கற்பிக்க வந்தனர். அவர்களுள்

நெடுந்தீவு ஜேம்ஸ் மாஸ்டர்
நெடுந்தீவு இராக்கினி ரீச்சர்
தாழையடி பெனடிற் மாஸ்டர்
அந்தோனிப்பிள்ளை மாஸ்டர்
ஞான சவுந்தரி ரீச்சர்
அமிர்தலிங்கம் சேர்
ஜெயக்குமார் சேர்
கோப்பாய் சீலன் மாஸ்டர் போன்றோரைக் குறிப்பிடலாம். அன்று அவர்களது அர்ப்பணிப்பும் தியாக வாழ்வும் சமூக வாஞ்சையுமே இன்றுவரை இப்பாடசாலை பல துறைகளில் முன்னேறி நூற்றாண்டுகளைக் கடந்து நிற்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சை. ப. சசிகரன் B.Ed
முன்னைநாள் ஆசிரியர்
ஆசிரியர் யா/மல்லாகம் ம.வி

# வலைப்பாடும் நானும்

வன்னிப் பெருநிலப்பரப்பில் பூநகரிப் பிரதேசத்தில் புகழ் பூத்த பழம்பெரும் கிராமங்களில் ஒன்றான வலைப்பாடு கிராமத்தில் கல்வியை வாரி வழங்கும் கிளி/வலைப்பாடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையானது நூற்றாண்டு விழாவைக் காணும் சந்தர்ப்பத்தில் அத்தாயை வாழ்த்துவதில் அப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் என்பதில் நானும் பெருமையடைகின்றேன்.

2010 – 2018 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலையில் கத்தோலிக்க பாட ஆசிரியராக பணியாற்றியிருக்கின்றேன். பல இன்னல்களுக்கு மத்தியில் மீள் குடியேற்றம் நடந்த போது நானும் ஆசிரியராக கடமையேற்றேன். கிறிஸ்தவ பாரம்பரிய கிராமமான வலைப்பாடு மக்கள் மிகவும் அன்பானவர்களாகவும் வந்தாரை வரவேற்று உபசரிக்கும் பண்புள்ளவர்களாகவும் இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுடன் பழகிய பயணித்த நாட்கள் இன்றும் பசுமரத்து ஆணியாக என் நெஞ்சில் பதிந்துள்ளது.

அன்னை மரியாவின் தாயான அன்னாளை தம் பாதுகாவலியாக கொண்ட இம்மக்களது வாழ்வில் இவர்களது ஆலயம் இரண்டறக்கலந்த ஒன்று. திருவிழா நாட்களிலும் ஏனைய நாட்களிலும் அன்னாளைப் பாடித்துதிக்கும் முகமாக என்னால் எழுத்துருக் கொடுக்கப்பட்ட பாடல்கள் மூன்று இம் மலரில் இடம் பெறுவது ஆனந்தமாக உள்ளது. இப் பாடல்களுக்கு மெட்டு அமைத்துத்தந்த அருட்பணி றெக்ஸ் சவுந்தரா அடிகளாருக்கும் இப் பாடல் உருவாக்கத்தில் எனக்கு உதவிய இப் பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும், எனது நண்பியும் சகோதரியுமான அருட்சகோதரி றோஸ்மேரி முடியப்பு அவர்களுக்கும் நன்றி கூறி நிறைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2017

பாடு புகழ் பாடு
அன்னாவைப் பாட
பாடு வலைப்பாடு – எம்
தாயவளைப் பாடு

பசியென்று கடல் போனோம்
வலை வீசி மீன் பிடித்தோம்  2
அலை வந்து மோதும் போதும்
கரையேற வழி நின்றாய்
புகழ் பாடுவாய் அவள் பெயர் சொல்லுவாய் - 2
அவள் தானே உனைக்காக்கும்
அன்பான தாபரி என்று – பாடு புகழ் ...

பிணிநோய்கள் வரும் போது
மருந்தான அவள் மடியில்  2
கார்வைகள் தினம் செய்து
குணமாகினோம்
பாவம் போக்கவே பரன் இயேசுவை - 2
தரணிக்கு அளித்திட்ட
மரியாவை பெற்றவள் என்று – பாடு புகழ் ...

இடம் பெயர்ந்து அலைந்தோமே
இழப்போடு வந்தோமே  2
மீளமர்ந்த போது நீயும்
வாழ்வேற வழி செய்தாய்
வேலை தந்தாய் எம் வேதனை தீர்த்தாய் - 2
வலை நகர் எம் ஊரை
வாழ்விற்கும் காவலியென்று – பாடு புகழ் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2018

அலைகடல் தவழும் வலை நகர் தனிலே ] 2
இறையருளை பெருமழையாய் தினம் பொழிபவளே — உம்மை
அண்டி வந்தோம் கூடிப் பாடவந்தோம் - உந்தன்
பிள்ளைகள் நாம் எம்மைப்பாருமம்மா

போதை கொண்டு வாளெடுத்து
உறவுகளை அறுத்து விற்று ] 2
தனித்தீவாய் ஆகிவிட்டோம் அம்மா — உந்தன்
பிள்ளைகள் நாம் என மறந்தோம் அம்மா
வாஞ்சையோடு வருகின்றோம் ] 2
கெஞ்சி உம்மைக் கேட்கின்றோம்
ஒரு குடையில் வாழ வைப்பாய் அம்மா
இந்த வலை நகரில் வாழவைப்பாய் அம்மா

தொழில் வளங்கள் ஓங்கியே
கல்விகலை சிறக்கவே
செழிப்பாக வாழவே அம்மா — உம் } 2
ஆதாரம் தேடி வந்தோம் அம்மா
நன்றியோடு வருகின்றோம் ] 2
நாளும் உம்மைக் கேட்கின்றோம்
நலத்தோடு வாழவைப்பாய் அம்மா
ஒற்றுமையாய் வாழவைப்பாய் அம்மா

சம்புவெளி கடந்து வந்தோம்
சளைக்காமல் கூடி வந்தோம்
சந்தானாள் நாயகியே அம்மா — எம் } 2
சங்கடங்கள் நீக்கிடுவாய் அம்மா
எங்கள் குலத்தாயவள் நீ ] 2
மங்காப் புகழ் கொண்டவள் நீ
மாரிமழைக் கோலமாக வந்தாய் - உம்
திருமகளைப் பாருலகில் தந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019

அன்னையே அன்னாளே தாயே
அண்டி வந்தேன் உம் பிள்ளை நானே
தனிமையில் வெறுமையில் தவித்திடும் போது
தாயாக என்னை வந்து தேற்றிடும் தாய் நீயே

வீட்டிலும் நாட்டிலும் அமைதி இல்லை
குடிசையில் ஒருதுளி உறக்கமில்லை ] 2

கரங்களை நீட்டி வருகின்றோம் எம்மை
கனிவுடன் அணைத்திட வாருமம்மா ] 2

வறுமையில் வாடும் எமைப் பாரும்
பசித்திடும் குழந்தைக்கு சோறூட்டும் ] 2

இருள் சூழ்ந்த எம் நிலைபாரும் - ஒளி
ஏற்றிட இறைவனை மன்றாடும் ] 2

பூட்டிய மனதுடன் வாழ்கின்றோம் - அன்பு
காட்டிடும் மனதினை வழங்கிடுவாய் ] 2

ஏட்டினில் எம்மவர் உயர்ந்திடவே
வலைப்பாட்டினில் வழிகாட்டிடுவாயே ] 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. மேரிறொக்ஸி றொபேட் B.Ed
ஆசிரியர்
கிளி/கிராஞ்சி அ.த.க. பாடசாலை.

# கற்றலைத் தேடி ...

இன்றைய இலத்திரனியல் பிரபஞ்சத்தின் நவீனயுகத்திலே சமூகத் தொழினுட்ப துரித வளர்ச்சியும் உலக மயமாக்கலும் எமது சமூகத்தின் ஒழுக்கத்திலும் சமூக வளர்ச்சியிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. வெறுப்பூட்டத்தக்க நுகர்வுக்கலாச்சாரமும் பாவனைப் பொருட்களின் தேவைக்கு மிஞ்சிய ஆசைகளும் வளர்ந்து வரும் மாணவர்களிடையே கற்றலின் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளமை கண்கூடு. எனவே இவற்றிலிருந்து மாணவர்களை விடுவித்து ஒவ்வொரு பிள்ளையிடமும் பொதிந்திருக்கும் உள்ளார்ந்த அறிவுத் திறன்களை வளர்த்தெடுத்து கற்றலைத் தேடி பொறுப்புடனான சுதந்திரம்,எல்லையற்ற ஆக்கத்திறன் போன்றவற்றை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு கல்விச் சமூகத்திடமே ஒப்படைக்கப்பட்டுள்ளமை நோக்கற்பாலது.

அறிவாளிகளும் கற்றோரும் சடுதியாக உருவாகுவதில்லை. அவர்கள் இளமைப் பருவத்திலிருந்தே ஒழுங்கான கற்றலில் நன்னடத்தையில் தம்மை ஈடுபடுத்தியவர்கள் ஆவர்.இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி மறைந்த "கலாநிதி அப்துல் கலாம்" அவர்கள் அடிக்கடி கூறுவது வருங்காலச்சமூகத்தை இயக்குபவர்கள் பாடசாலைச் சமூகமும் இளம் உள்ளங்களுமே இவ்வாறு கல்வியறிவின் விளைவினால் சமூகத்தில் விருத்தியும் செழிப்பும் ஏற்படுகின்றமை உணரப்படுகின்றது.

எப்படி மேதாவியாக வந்தீர்? இவ்வாறு திறமையுள்ள ஒருவரிடம் இன்னொருவர் வினவினார் . அவருடைய பதில் 99% வியர்வையும் 1% நுண்ணறிவும் படைத்தவரே மேதாவி ஆவார் (Genius 99% perspiration and 1% inspiration) ஆகவே மாணவர் களுக்கான கற்றலுக்கான தேடலும் முயற்சியும் மிக மிக அதிகம் என்பது புலனாகின்றது. கற்றலை மேம்படுத்தும் முயற்சியில் மிகச் சிறந்த வழிப்படுத்தல்களை மேற்கொள்ளுமிடத்து உச்ச அளவிலான பெறுபேற்றினைப் பெற முடியும்.

இந்த வகையில் மாணவர்களிடம் சிறந்த முறையில் கற்கும் வழக்கத்தை விருத்தி செய்வதற்கான தேவைகளை நோக்கும் போது.

**1. கற்க வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்த்தல் .**

இலக்கு உள்ள ஒருவர் வாழ்க்கையில் அறிவைப் பெற்று தனது இலக்கை எப்படியும் அடைய வழி வகுத்துக் கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. அந்தந்த வேளைகளில் நடைபெறும் விடயங்களில் கவனஞ்செலுத்தல்.**

எமது எண்ணங்கள் ஓய்வற்றவை . அவை எப்பொழுதும் நடந்தவற்றையோ அல்லது வரப்போகின்றவற்றையோ சிந்திப்பவை. அவ்வப்போது நடைபெறும் விடயங்களுக்கு எமது எண்ணங்களில் கவனத்தைச் செலுத்துவது முக்கியம். இதற்கான சுவாசப்பயிற்சி,யோகாப் பயிற்சியில் மாணவர்களை முறையாக ஈடுபடுத்துவதால் அமைதியாகவும் வளர முடியும்.

**3. அவதானத்துடன் வாசித்தலும் கேட்டலும்.**

இன்றைய நவீன உலகம் எம்மை அநேகமான விடயங்களுக்குத் திசை திருப்பி எமது கவனத்தைச் சிதறடிக்கின்றது.பிறர் பேசும் விடயங்களுக்குச் செவிமடுப்பது இலகுவான காரியமல்ல. வகுப்பறையிலும் செவிமடுப்பது இலகுவானதல்ல. சில மாணவர்களுக்கு,கற்றல் வேளையில் இசையும் இரைச்சலும் தேவை கவனத்தோடு கற்றவை நினைவில் இருக்கும்.

**4.மகிழ்ச்சியுடன் கற்றல்.**

அன்புடன் கற்கும் போது பசுமரத்தாணி போன்று கற்பவை நிலைத்திருக்கும். இதனை ஆசிரியர்கள் புரிந்து கொள்வது மிகவும் அவசியம். கற்றலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டால் வாழ்க்கையும் மகிழ்ச்சியானதாக மாறும்.

**5. வாசிக்கும் விருப்பத்தை வளர்த்தல்.**

ஊடகங்களின் அழுத்தினால் அதிகமான மாணவர்கள் பாடசாலைக் கற்றலில் பயனடைவதில்லை. தொலைக்காட்சி உடனடித்திருப்தியையே அளிக்கின்றது.கணினி உடனடிப்பதிலைக் கொடுக்கின்றது. ஆனால் கல்வியியலாளர்களின் நூல்களை வாசிப்பதன் மூலம் சிறந்த முறையில் அறிவைப் பெற்றுக் கொள்ள மூடியும்.

**சிறந்த வாசிப்பின் பயன்கள்**

1. சொல்வளத்தை அதிகரிக்கின்றது.
2. அறிவை வளர்க்கின்றது.
3. மனதை அமைதி பெறச் செய்கிறது.
4. எம்மை உற்சாகமாகவும் விழிப்புணர்வுடனும் வைத்திருக்கின்றது.
5. நூல் நிலையங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்த உற்சாகம் அளிக்கின்றது.

கதைப் புத்தகங்கள், சஞ்சிகைகள், வேடிக்கை நாவல்கள், போன்றனற்றைப் பொழுதுபோக்காக வாசிக்கின்றோம். இதனாலும் அறிவைப் பெருக்குவதற்கு முடியும். சிறந்த அறிவைப்பெற மனதை ஒருநிலைப்படுத்தி வாசிப்பில் ஈடுபட வேண்டும்.

வாசிப்பறிவிருந்தும் வாசிக்காதவர்கள்
வாசிக்க முடியாதவரை விடச் சிறந்தவர் அல்ல.

ஒரு நிமிடத்தில் 200 சொற்களுக்கும் குறைவாக வாசிக்க முடியுமாயின் வாசிப்பின் வேகம் மிகக் குறைவு என்பது ஆய்வின் முடிவாகும். ஆகவே மாணவர்களின் கற்றலில் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிடத்தில் இருக்கும்வாசிப்பிலே மிகக் கூடியளவு அக்கறை எடுப்பதன் மூலம் சிறந்த கற்கும் வழக்கத்தை விருத்தி செய்து கொள்ள முடியும்.

உற்காகமும் முயற்சியும் தயார் நிலையில் உள்ள மனதை உருவாக்கும்.

அவதானமாகக் கேட்பதன் மூலம் சிறந்த முறையில் கற்றுக் கொள்ள முடியும்.

உற்சாகத்துடன் ஈடுபடுவது கற்றலை அதிகரிக்கும்.

இலக்குத் தெளிவானதாக இருக்கும் போது தோல்விகளைத் தோற்கடிக்க முடியும். தோல்விகள் நிலையானவையல்ல. தோல்விக்கு சமம் தோல்வியல்ல. இதனை மாணவர்கள் புரிந்து கொண்டு கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுதல் வேண்டும்.

1952இல் எட்மன் ஹில்லரி (Edmund Hilary) எவரெஸ்ற் மலையில் ஏற முயற்சித்துத் தவறினார் . அதன்பின் வீட்டுக்குச் சென்று எவரெஸ்ற் மலையை வரைந்து உரத்த சத்தத்தில் இவ்வாறு கூறினார்.

"எவரெஸ்ற் மலையே! முதன் முறையாக நீ என்னைத் தோற்கடிக்கச் செய்தாய். ஆனால் அடுத்த தடவை நான் உன்னைத் தோற்கடிப்பேன். ஏனெனில் நீ வளர்ந்து விட்டாய். ஆனால் நான் இன்னும் வளர்ந்து கொண்டிருக்கின்றேன்." 1953 மே 29இல் ஹல்லறி முதன் முறையாக வெரெஸ்ற் மலையை ஏறி முடித்தார். அதன்பின் "உங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள். அவை நனவாக மாறும். ஏனெனில் நான் வளர்ந்து கொண்டிருக்கின்றேன்" என்று கூறினார்.

பாடசாலையும் வீடும் பிள்ளையின் கற்றலில் மிக அண்மித்த நிறுவனங்களாகும். பிள்ளையின் அக மற்றும் புற இயற்கைச் சூழலைச் சாதகமாக்கி உயர் நிலையை அடையப் புத்தூக்கம் வழங்குதல் இன்றியமையாதது ஆகும்.

எனவே தனித்துவமான நடத்தைப் பாங்குடைய ஒவ்வொரு மாணவரும் சுயநம்பிக்கையுடன் தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றித் திறமைகளைச் சாதனைகளாக்கி அறிவுத் தேடலில் புது உலகைப் படைத்து விழுமியங்களைப் பாதுகாத்து நற்பிரசைகளாக வாழ முன்வரவேண்டும்.

நூற்றாண்டு காணும்
ஓங்கு புகழ்
கிளி/வலைப்பாடு றோமன் கத்தோலிக்கத்
தமிழ் கலவன் பாடசாலை
நலம் நிறைந்து
சிறப்புடன்
செழிப்புற்றோங்கட்டும்.

– நன்றி –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர் வகுப்பாசிரியருடன்
தரம் 1 மாணவர்கள்



அதிபர் வகுப்பாசிரியருடன்
தரம் 2 மாணவர்கள்

அதிபர் வகுப்பாசிரியருடன்
தரம் 3 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுமிகு வலை நகரே

**தோ. மரிய கன்னி**
பழைய மாணவி
கிளி/ வலைப்பாடு றோ.க. பாடசாலை

பாடல்:

அழகுமிகு வலை நகரே
அலை கடலின் கலைச் சுடரே
அன்னை அன்னாள் திருப்பதியே
அன்புடனே வாழ்த்துகின்றோம்.

துள்ளும் பருவமதில் கூடி இருந்தோம்
பள்ளிக் கதை பேசி பாடி மகிழ்ந்தோம்
மண்ணில் விரல் கீற கல்வி அறிந்தோம்– எங்கள்
மண்ணின் பெருமைகளை சொல்லி மகிழ்ந்தோம்.
(அழகுமிகு....)

தென்னோலைக் குடிசையிலே கூடிப் படித்தோம்
எண்ணும் எழுத்தெல்லாம் அங்கே அறிந்தோம்
அன்னாளின் புகழ்பாடி என்றும் இருந்தோம்– அதை
எண்ணி எண்ணித் தினம் எம்மை மறந்தோம்.
(அழகுமிகு....)

ஆரம்பக் கல்வியுடன் கலையும் கற்றோம்
பேரன்பு கற்பனைகள் தலைமேல் ஏற்றோம்.
ஈரைந்து கட்டளைகள் உயிராய்க் கொண்டோம்– அந்த
சீர் தந்த தாயவளை போற்றிப் புகழ்வோம்.
(அழகுமிகு....)

அன்புடனே நம்பிக்கை ஊட்டித் தந்து
ஆன்றோரை ஊருக்கு ஆக்கித் தந்து
நூற்றாண்டு விழாக் காணும் கல்வித்தாயை– தினம்
ஒற்றுமையாய் போற்றுவமே போற்றிப் புகழ்வோம்.
(அழகுமிகு...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ. ரஜீவன் BSc(Hons), PGDE
ஆசிரியர்.

# மகிழ்ச்சிகரமான பாடசாலை

பாடசாலை என்பது ஏனைய நிறுவனங்களைப் போலல்லாது ஒரு சிக்கல் நிறைந்த நிறுவனம் ஆகும். ஆறு வயது தொடங்கி பதினெட்டு வயது வரையான மாணவர்களும் ஆசிரியர், அதிபர், நிர்வாகிகள் என பல்வேறு ஆளணியினரும் பாடசாலையில் இருப்பதே இதற்குக் காரணமாகும். இத்தகையோரின் விருப்பு, கவார்ச்சி, தேவை, நடத்தை என்பனவெல்லாம் வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன. பாடசாலை தொடர்பாக எதிரான வாதங்கள் தத்துவவியலாளர்களால் அவ்வப்போது முன்வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மகாத்மா காந்தி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"நல்லதொரு குடும்பத்திற்கு சமமான பாடசாலைகளும் இல்லை.
அறம் சார்ந்த பெற்றோர்களிற்கு சமமான ஆசிரியர்களும் இல்லை"

எனினும் சமூகத்தின் கட்டாய தேவையாக பாடசாலைகள் கருதப்படுகின்றன. பாடசாலைக்கு மாணவர்கள் புத்தக சுமையுடனும் பல்வேறு பட்ட உளரீதியான மனச்சுமையுடனும் வருகின்றனர். அவர்களது மனச்சுமையை இல்லாமல் செய்து அல்லது குறைத்து மனமகிழ்ச்சியை அவர்களுக்கு அளிக்கவேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். இதன் காரணமாகத்தான் 2010ஆம் ஆண்டில் அமைய வேண்டிய கல்விக் கொள்கையில் மகிழ்ச்சிகரமான பாடசாலை எனும் கருப்பொருள் முக்கியத்துவம் பெற வேண்டும் என UNESCO முன்மொழிந்துள்ளது.

ஒரு மகிழ்ச்சிகரமான பாடசாலையில் பின்வரும் அம்சங்கள் காணப்பட வேண்டும் என கல்வித்தத்துவவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

- மாணவர் மைய கற்றல் – கற்பித்தல்
- கற்பவருக்கான சுதந்திரம் மாணவர் – ஆசிரியரிடையேயான தொடர்பு
- செய்முறை, ஈடுபாடு சார்ந்த அனுபவ ரீதியான கற்றல்
- பொருத்தமான கலைத்திட்டம்
- அன்புக்கான உத்தரவாதம்
- பெற்றாரின் ஈடுபாட்டைக்கொண்ட கற்றல்

எந்தவொரு நிறுவனமும் மக்கள் (People), இடம் (Place), செயற்பாடு (Process) ஆகிய 3P எனக் குறிப்பிடப்படும் 3 அம்சங்களையும் கொண்டவையாகவே அமைந்து இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கு இம் மூன்றுக்குமான இடைத்தொடர்பு உயர்மட்டத்தில் அமைந்து இருப்பது அவசியமாகும்.

நிறுவனத்தில் கடமையாற்றும் "மக்களின்" ஆற்றல், திறன், ஆளுமை, அர்ப்பணிப்பு போன்றவை காரணமாக உயர்ந்த "செயற்பாடு" நடைபெற்று அந்த நிறுவனம் "(இடம்)" மகிழ்ச்சிகரமானதாக மாறிவிடும். பாடசாலை என்ற நிறுவனத்திற்கும் இது மிகப் பொருத்தமானதாகும்.

**மக்கள்** (People)

பாடசாலை என்ற நிறுவனத்தில் மாணவர், ஆசிரியர், அதிபர், கல்வி சாரா ஊழியர், பழைய மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள், கல்வி நிர்வாகிகள் என மக்கள் கட்டம் காணப்படுகின்றது. இவர்கள் ஒவ்வொருவரினதும் செயற்பாடுகள் பாடசாலையின் வெற்றியிலும் மகிழ்ச்சிகரமான பாடசாலையை உருவாக்குவதிலும் செல்வாக்குச் செலுத்தும். வகுப்பறையின் திறவுகோல் எனக் கருதப்படும் ஆசிரியர்களின் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளிற்கு மேலதிகமாக அவர்களின் நடத்தைகளும் மாணவரின் மகிழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்தக் கூடியவை. மகிழ்ச்சிகரமான பாடசாலையை உருவாக்குவதில் ஆசிரியர்கள் பின்வரும் அம்சங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும் என UNESCO குறிப்பிடுகின்றது.

- பாடசாலை சமுகத்துடன் நட்பும் உறவும் பேணல்.
- ஆசிரியரின் உடன்பாடான மனப்பாங்கு.
- மாணவர் பல்வகைமையை மதித்தல்.
- உடன்பாட்டுடன் ஒத்து வேலை செய்தல்.
- ஆசிரியரின் திறனும் தேர்ச்சியும்.
- ஆசிரியரின் வேலை நிலைமையும், மகிழ்ச்சியாக இருத்தலும்.

**செயற்பாடு** (Process)

நிறுவனம் சார் மக்களின் செயற்பாடு நிறுவனத்தின் வெற்றிக்கு அவசியமானதாகும். பொதுவாக பாடசாலைகளில் உச்ச செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியவர்கள் அதிபர், ஆசியர்களாவர். மகிழ்ச்சிகரமான பாடசாலையை உருவாக்குவதில் அதிபர் ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய ஒன்பது செயற்பாடுகளை UNESCO முன்மொழிந்து உள்ளது.

- பொருத்தமானதும் திருப்தியானதுமான பணிச்சுமை.
- குழுவேலையும் கூட்டு உணர்வும்.
- மகிழ்ச்சிகரமானதும் ஈடுபாட்டுடன் கூடியதுமான கற்றல்-கற்பித்தல் அணுகுமுறை.
- கற்பவரின் சுதந்திரமும் புத்தாக்கமும்.
- அடைவு, சாதனை தொடர்பான உணர்வு.
- இணைப்பாடவிதான செயற்பாடுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர்-மாணவர் இடையேயான குழுக்கற்றல்.

- பொருத்தமான கற்றல் உள்ளடக்கம்.

- மனநலமும் மன அழுத்த முகாமைத்துவமும்.

**இடம்** (Place)

இங்கு இடம் என்பது குறித்த நிறுவனத்தைக் குறிக்கின்றது. பாடசாலை என்ற நிறுவனமானது மகிழ்ச்சிகரமானதாக இருப்பதற்கு UNESCO ஏழு அம்சங்களை முன்வைத்துள்ளது.

- பசுமையானதும் நட்பு ரீதியானதுமான கற்றல் சூழல்
- பாதுகாப்பான சூழல்
- திறந்ததும் விளையாடக்கூடியதுமான இடமும்
- பாடசாலை தூரநோக்கும் தலைமைத்துவமும்
- உடன்பாடான ஒழுக்கம்
- நல்ல சுகாதாரமும் துப்பரவும் போசாக்கும்
- ஜனநாயகமான பாடசாலை முகாமைத்துவம்

தற்கால பாடசாலைகளும் மகிழ்ச்சிகரமான பாடசாலைகள் தான் என்பதில் சந்தேகமில்லை. எனினும் பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் உயர்ந்தமட்டத்தில் காணப்படுவதும் தேசிய மட்ட சாதனைகள் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப அமையாமல் இருப்பதும் பாடசாலைகள் மீதான கேள்வியாக அமைந்துள்ளன. இவ் ஆக்கத்தில் விபரிக்கப்பட்ட மூன்று தலைப்புக்களைக் கொண்ட 22 அம்சங்களையும் பாடசாலைகள் முழுமையாக உள்வாங்கும்போது விசேடமாக அதிபர், ஆசிரியர்கள் தமது செயற்பாடுகளில் அவற்றை படிப்படியாக உள்ளடக்கும்போது மகிழ்ச்சிகரமான பாடசாலையை உருவாக்கிக் கொள்ள முடியும்.

**உசாத்துணை-**

Happy Schools (2016) UNESCO, Place de Fontenoy, 75352, Paries. 075p, France.
www.unescobkk.org/education/quality-of-education/happy schools/.

பேராசிரியர். மா. சின்னத்தம்பி, பாடசாலைக்கல்வி
ஆற்றலும் சமூக நீதியும். 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர் வகுப்பாசிரியருடன் தரம் 4 மாணவர்கள்



அதிபர் வகுப்பாசிரியருடன் தரம்5 மாணவர்கள்



அதிபர் வகுப்பாசிரியருடன் தரம் 6 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமதி. நி. செபஸ்ரீனா B.Ed

(ஆசிரியை)

கிள/ வேரவில் இ.ம.வி.


## எது சரி? எது தவறு?

முறைசார் கற்றலை ஆறு வயதில் ஆரம்பிக்கும் பள்ளிச் சிறுவர்களை குழந்தைகள் என்று அழைப்பதே மிகவும் பொருத்தமானது. இக் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்தல் என்பது மிகவும் சவாலானஒரு விடயம். இவர்கள் ஒரு விசேட பிரிவினராதலால் இயந்திர கதியில் கற்பித்தலை முன்னெடுக்க முடியாது. இக் குழந்தைகளின் திறமைகள், தேவைகள், மகிழ்ச்சி, விருப்பு வெறுப்புக்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு கற்பிக்க வேண்டியது முக்கியமானது. ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களது ஆக்க பூர்வமான கற்பித்தல் முறைகளுடன், குழந்தைகள் மீதான அன்பும், உறுதியான செயல் முனைப்பான கடமையாலுமே குழந்தைகளுக்கான கற்பித்தல் சாத்தியமாகும்.

இவ்வாறு நன்கு திட்டமிடப்பட்ட கற்பித்தலில் குழந்தையின் கற்றலை எவ்வாறு மதிப்பிடுவது என்பது தற்காலத்தில் பிரச்சினையான ஒரு விடயமாக மாறி வருகின்றது. இன்று பல பாடசாலைகள் அறிந்தும் அறியாமலும் இப் பருவத்தினருக்கு எழுத்துப் பரீட்சைகளை நடாத்தி "மதிப்பெண்கள்" மூலம் மதிப்பிடும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதனால் எழும் பல வினாக்களுக்கு விடை காண வேண்டியதும் அவசியமானதொன்று. அந்த வகையில் மதிப்பெண்கள் என்றால் என்ன? யாருக்கு இம் மதிப்பெண்கள் அவசியமானவை? இவை எதனை மதிப்பிடுகின்றன? என்பது தொடர்பாக சற்று ஆராய வேண்டியுள்ளது.

### மதிப்பெண்கள்....?

இவை காலுடைந்த கற்பித்தல் முறையின் ஊன்று கோல். ஆசிரியரின் அதிகாரத்தை நிலை நாட்டும் தடி. திட்டமிடப்படாத கற்பித்தல் முறையில் ஈடுபடுவதும், தடியைக் கையில் வைத்துக் கொண்டு கற்பிப்பதும் எவ்வாறு ஒழுங்கற்ற, முறையற்ற கற்பித்தலாக அமைகின்றனவோ. அதனை ஒத்தது தான் இக் குழந்தைகளை மதிப்பெண்களால் மதிப்பீடு செய்வதும். எனவே இம்மதிப்பெண்கள் யாருக்கு அவசியம்? எனும் அடுத்த வினாவுக்கான விடையைத் தேடுவோம்.

### குழந்தைகளுக்கு அவசியமா?

ஆசிரியர்களும், பெற்றோர்களுமாகிய நாம் தான் மதிப்பெண்கள் பற்றி எதுவுமே தெரியாத குழந்தைகளிடம் மதிப்பெண்களுக்காகப் படியுங்கள் கூடிய மதிப்பெண்களைப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றால் மிகமிகப் பெறுமதியான பரிசில்களை வாங்கித் தருவதாக வாக்குப் பண்ணுகின்றோம். குறைந்த மதிப் பெண்களை அவர்கள் பெறும் பட்சத்தில் அறியாப் பருவத்திலேயே அவர்களிடம் கசப்பையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தும் விதைகளை விதைத்து அவர்களது சிறுவயது மகிழ்ச்சியைக் காணாமல் செய்து விடுகின்றோம். நம்மைச் சார்ந்து வாழும் குழந்தைகள், நம்மைத் திருப்திப்படுத்தவும், நமது மகிழ்ச்சிக்காகவும் அவர்கள் மதிப்பெண்களை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். எனவே இம்மதிப்பெண்கள் அவர்களின் அறிவுத் தாகத்திற்கு இடையூறை ஏற்படுத்தி, கற்றலில் தொடர்ந்து முன்னேற தடையாக இருப்பதுடன் மகிழ்ச்சியாகக் குழுவாகச் செயற்பட முட்டுக்கட்டையாகவும் அமைந்து விடுவதே உண்மை. இவை குழந்தைகளுக்கு அவசியமே இல்லை.

## ஆசிரியர்களுக்கு.....?

ஆசிரியர்களே தீர்மானிக்கட்டும். அன்றாடம் வகுப்பறைக்குள் நுழையும் ஆசிரியர்களிடம் ஓடோடிவந்து,சேலைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு உங்கள் வருகையை மகிழ்ச்சியானதாக்கும் குழந்தைகளின் மழலை மொழிகளைக் கேட்டு, தன்னை மறக்கும் தாயைப் போன்ற ஆசிரியர்கள் மதிப்பெண்களுடன் குழந்தைகள் ஒவ்வொன்றையும் மதிப்பீடு செய்வாராகில் அவரது ஆசிரியரியலும், கற்பித்தல் முறையியலும் தவறாகப் போய்விடும்.

மதிப்பெண்கள் ஒவ்வொரு குழந்தையும், மற்றைய குழந்தைகளை விட எவ்வளவு முன்னால் உள்ளான் என்றும், எவ்வளவு பின்னால் உள்ளான் என்றும் அறிந்து, அவர்களை " புத்திசாலி முட்டாள்" "படிக்கத் தெரியாதவன் படிப்புவராதவன்" " முட்டாள்" "மக்கு" என வகைப்படுத்தி அவனைப் பின்னடையச் செய்வதற்கு வழியாக அமையுமே தவிர, குழந்தைகளது தனியாள் வேறுபாடுகளை அறிந்து கற்பிப்பதற்கு வழி வகுக்காது. ஆக, இவற்றால் ஆசிரியர்களுக்கும் அவசியமில்லாத போது வேறு யாருக்குத்தான் அவசியம்? பெற்றோர்களுக்கு அவசியமா?

குழந்தைகளின் எதிர்காலம் பிஞ்சு வயதிலேயே கேள்விக் குறியாவதை எந்தப் பெற்றோர் அனுமதிப்பார்கள். தம் குழந்தைகள் குறைவான மதிப்பெண்களைப் பெறும் போது அவர்களின் பொழுதுபோக்கு இன்பங்கள் சிறு வயதிலேயே தடைசெய்யப்படுவதையும், ஏனைய குழந்தைகளோடு ஒப்பிட்டு, அவர்களது தன்னம்பிக்கை தளர்ந்து போவதையும் நல்ல பெற்றோர் அனுமதிக்கவே மாட்டார்கள். எனவே இம்மதிப் பெண்கள் பெற்றோருக்குமே அவசியமில்லாதபோது இப்பருவக் குழந்தைகளுக்கு மதிப்பெண்கள் இடுவதால் பயன் ஏதுமில்லை என்பது முடிவாகி விட்டது. குழந்தை வளர்ப்பு முறைக்கும் முரணான இவை தேவையற்றதே.

எனவே பெற்றோர்களால் பெரிதும் விரும்பப்படுவதும், ஆசிரியர்களால் ஆமோதிக்கப் படுவதுமான இம்மதிப்பெண்கள் அவசியமற்றதென்றால் இந்தக் குழந்தைகளின் கற்றலை மதிப்பிட வேறு ஏதாவது வழிகள் உண்டா? என்பது பற்றிய வினாக்களுக்கு என்ன பதில்களைக் கூறுவது எனவும் சிந்திக்க வேண்டியதும் அவசியம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாக குழந்தைகளின் மீதான அன்புடன், அவர்களது மனவியலுக்கு ஏற்றவாறு தனது கற்பித்தல் முறையியலை முன்னெடுக்கும் ஒரு ஆசிரியர் தனது வகுப்பறையில் தன் குழந்தைகளை மதிப்பிட என்னவெல்லாம் செய்திருக்கிறார் என்பதை வந்து பாருங்கள்.

ஒவ்வொரு பாடவேளையின் போதும் அவர்கள் எழுதியதை, வரைந்ததை, வெட்டியதை, ஒட்டியதை, ஆக்கியதை வகுப்பறையில் காட்சிப்படுத்தியிருப்பார். உங்கள் குழந்தைகளின் எல்லையற்ற திறமைகளை சேகரித்து செயலடைவுக் கோவையாக வைத்திருப்பார். இவற்றைப் பெற்றோர்கள் பார்வையிடும் போது தம் குழந்தைகள் என்ன கற்றுக் கொள்கின்றனர். எதனை அறிந்து வைத்துள்ளனர்? எவற்றை விரும்புகின்றனர்? என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். தமது குழந்தைகள் தமக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தந்துள்ளான். எப்படி எல்லாம் எழுதுகின்றான்? எவ்வாறு வரைகின்றான்? தனது திறமைகளை கற்றலில் எவ்வாறு பயன்படுத்துகின்றான் என்பதை அறிய வாய்ப்பாக அமையும்.

தம் குழந்தைகள் தாம் அன்றாடம் கற்றதை தாம் பெற்றதை மதிப்பிட இவை போதாதா? மதிப்பெண்கள் இவர்களுக்குத் தேவையா? எனவே ஆறுவயதுக் குழந்தைகளுக்குக் கற்பிப்பதையும், மதிப்பிடுவதையும் எளிதாக்க வேண்டுமாயின் குழந்தையின் மனவியல், ஆசிரியரியல், கற்பித்தல் முறையியல் போன்ற விஞ்ஞான முறைகளை அறிந்து அணுகி, குழந்தையின் உளவியலை தார்மீக, சமூக, மூளை வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு செயற்படுத்துவதே கற்பித்தற் பணியின் அடிப்படையான அம்சமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கி. மதுரநாயகம் BA, PGDE
ஆசிரியர் – புவியியல்

# எல் நினோ, லாநினா

எல் நினோ லாநினா என்பவை கிழக்கு பசுபிக் பெருங்கடல் மேற்பரப்பில் ஏற்படும் முக்கியமான வெப்பநிலை ஏற்றத்தாழ்வுகள் ஆகும். எல் நினோ என்பது ஸ்பானிய மொழிச் சொல்லாகும். இது சிறு பையன் எனும் பொருளாகும். 19ம் நூற்றாண்டில் தென் அமெரிக்காவில் ஆன்கோவி தீவின் சாதாரண மீனவச் சிறுவன் ஒருவன் கடலில் வித்தியாசமான வெப்பமான நீரோட்டம் இருப்பதை அறிந்தான். இதன் விளைவாக 1923ல் சேர் கிர்பாட் தோமஸ் வார்க்கர் என்பவர் இத்தன்மையை ஆராய்ந்து அதை எல் நினோ என விளக்கினார்.

எல் நினோ உலகின் தெற்குப் பகுதிகளில் ஏற்படும் காலநிலை மாற்றங்களுடன் தொடர்புடையது. ஈக்குவடோர், பேரு ஆகிய நாடுகளில் கரையோகமாக தோன்றும் ஒரு வெப்ப நீரோட்டத்தைக் குறித்தது. பூகோள ரீதியாக சமுத்திர வெப்பநிலை அதிகரிப்பில் இதன் பங்களிப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகவும் குறைந்தளவிலான கால இடைவெளிக்குள் அடிக்கடி ஏற்பட்டு சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலையில் செல்வாக்கு செலுத்தி வருகின்ற ஒன்றாகவும் காணப்படுகிறது. எல் நினோ சடுதியாக வேறுபட்ட கால இடைவெளிகளில் குறிப்பிட்ட சமுத்திரப் பிரதேசத்திற்கான குறிப்பிட்ட காலத்திற்கான சார்பளவில் சற்று அசாதாரண ஓரளவு வெப்பநிலையுடன் கூடிய நிலைமையாகவே சமுத்திரப் பரப்புகளில் நிலவுகின்றது. உதாரணமாக ஒவ்வொரு வருடமும் பிரதேச ரீதியாக கால ரீதியாக உலகில் நிகழும் வசந்த காலம், கோடைகாலம்,இலையுதிர்காலம், மாரிகாலம் என்பதைப் போன்றே பல வருட இடைவெளியில் எல் நினோவும் நிலவுகிறது.

1960களில் ஸ்கண்டினேவிய விஞ்ஞான ஜேக்கப் ஜெர்க்னஸ் என்பவர் எல் நினோ பசுபிக் மற்றும் இந்து சமுத்திரத்தில் ஏற்படும் மாற்றத்தைக் கண்டுபிடித்தனர். பொதுவாக எல்நினோ 2 தொடக்கம் 7 வருட இடைவெளிகளில் ஏற்படக் கூடியதாக இருந்து சாதாரண காலநிலையில் பல மாற்றங்களைத் தோற்றுவிப்பதாக அமையும். பொதுவாக குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில், குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் சாதாரண சமுத்திரத்தின் வெப்பநிலை அப் பிரதேச காலநிலையின் சாதாரண போக்கிற்கு மாறாக அதிக கடல் நீர் மேற்பரப்பு வெப்பநிலையின் அதிகரிப்பைக் கொண்டு சுமார் 2, 3 வருடங்கள வரை அவ் அதிகரித்த வெப்பநிலை நிலைபெற்றால் நாம் அதனை எல்நினோ நிலமை எனக் கண்டறியலாம். இதன் தாக்கம் ஈக்குவடோர், பேரு, சிலி நாடுகள் சார்ந்த பசுபிக் சமுத்திர பகுதியில் இருந்த மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டுப் பக்கம் சார்ந்து மேற்கு நோக்கி வீசும் வியாபாரக் காற்றானத சமுத்திர மேற்பரப்பில் சாதாரணமாக நிலவும் சாதாரண வெப்ப நீரினை பசுபிக்கின் மேற்கு கரை நாடுகளான அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளின் கரையோரப் பகுதிகளுக்கு நகர்த்தி விடும் இதனால் சாதாரண காலநிலை நிலவும் காலப்பகுதிகளில் பசுபிக்கின் கிழக்குக் கரை நாடுகளான பேரு, சிலி போன்ற நாடுகளின் கரையோரங்களில் அதன் தாக்கம் காரணமாக உள்நாட்டிலும் குளிர்ச்சியான நிலமை காணப்படும். இதே காலப்பகுதியில் மேற்குப் பசுபிக் கரையோர நாடுகளில் ஒப்பீட்டளவில் சமுத்திர நீர்ப்பரப்பு வெப்பமானதாகக் காணப்படும் இவ்வாறான நிலையையேஎல்நினோ காலநிலை என்கிறோம்.

லா நினா என்பது குளிர்ந்த நீரோட்டம் ஏற்படுவதைக் குறிக்கும். சில ஆண்டுகளில் தென் அமெரிக்காவில் இருந்து அவுஸ்திரேலியாவை நோக்கி வீசும் காற்று மிகப் பலமாக இருக்கலாம். இதனால் பசுபிக்கின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் வழமையை விட நீர் அதிக குளிராக காணப்படும் இந் நிலைமையை லா நினா என்பர் .

இவ்வாறு எல் நினோ, லா நினா எனும் காலநிலை தோற்றப்பாடுகள் தோன்றுவதற்கு ஏதுவான காரணங்கள் ஆராய்ந்தால் மனித நடவடிக்கைகளே காரணங்களாக அமைகின்றன. பூமி தோன்றிய காலம் முதல் பூமிக்கான வளிமண்டல வாயுக்கள், அதன் கட்டமைப்பு என்பன மாற்றங்களுக்கு உட்பட்டு வந்துள்ளன ஆனால் இன்றைய காலத்தில் அடிக்கடி ஏற்பட்டு இருக்கும் காலநிலை மாற்றம் வரலாற்று ரீதியான காலநிலை மாற்றங்களில் இருந்து மாறுபட்டு மனித செயற்பாடுகளினால் வந்தது ஆகும். கைத்தொழில் புரட்சி, இரண்டாம் உலக மகா யுத்தம் பச்சை வீட்டு வாயுக்களை வெளிவிடும் விவசாய நடவடிக்கைகள், வடகடலில் எண்ணெய் அகழ்வு, குளிரூட்டியின் பயன்பாடு, உயிர்ச்சுவட்டு எரிபொருள் தகனம், காடழிப்பு, அணு பரிசோதனை, திண்மக் கழிவு வெளியேற்றம் போன்ற மனித செயற்பாடுகள் காரணங்களாக ஆகின்றன.

இவ்வாறாகவுள்ள அசாதாரண காலநிலை மாற்றச் செயற்பாடுகளால் சாதாரண மழை வீழ்ச்சி, சாதாரண வெப்பநிலை என்பவற்றிற்குப் பதிலாக தொடர்ச்சியான கனத்த மழை, சூறாவளிகள், டொனாடோஸ், அதிகரித்த இடிமின்னல் என்பவற்றால் பெருவெள்ளம், பாரிய நிலச்சரிவு, அகோர வெப்பம், மணற்புயல், காட்டுத் தீ, பனிப் படலங்கள் கரைதல், சமுத்திர வெப்பம் அடைதல், கடல்மட்டம் உயர்தல் போன்ற பாதிப்புக்களுடன் தாவரப் பல்வகைமை, உயிர்ப் பல்வகைமை அழிவடைதல் ஏற்பட்டு மனித குலம் சுத்தமான காற்றைப் பெறல், போதுமான உணவுகளைப் பெறல், சுத்தமான குடிநீரைப் பெறல், விளைச்சலை அதிகரித்தல என்ற செயற்பாடுகளில் தோல்வியை நோக்கிப் பயணிக்கிறது.

எனவே ஒட்டுமொத்தமாக மனித சமூகம் காலநிலை மாற்றங்களை இழிவளவாக்கக் கூடிய செயற்பாடுகளான

- பச்சை வீட்டு வாயுக்களை வெளிவிடுகின்ற வலு மூலகங்களை குறைவாகப் பயன்படுத்தல்.
- புதுப்பிக்கக் கூடிய வலு மூலகங்களின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விவசாயத்தில் இரசாயனப் பசளைக்கு பதிலாக சேதனப் பசளைப் பயன்பாட்டை ஊக்குவித்தல்.
- திண்மக் கழிவுகள் முகாமைத்துவம் செய்தல்.
- மீள் காடாக்கம்.
- பொதுப் போக்குவரத்து வசதிகளை விருத்தி செய்தல்.
- அணுப் பரிசோதனைகள், யுத்த நடவடிக்கைகளை தவிர்த்தல்
- இயற்கையோடு ஒன்றி வாழ்தல்

போன்ற செயற்பாடுகளை கைக்கொள்ளும் போது காலநிலை மாற்றங்களை ஏற்படும் பாதகத் தன்மைகளில் இருந்து நாம் விடுபட்டு உலக மக்கள் அனைவரும் இயல்பு வாழ்வு வாழலாம்.

**உசாத்துணை நூல்கள்**

சுற்றாடற் புவியியல் - க. பொ. (உ/த)
காலநிலையியல்
விரை (இதழ் 4)
புவியியல் தரம் 7, 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.மேரி ஷாலினி
ஆசிரியர்
(ஆரம்ப கல்வி)

# தாயுமானவள்

நல்லாரைக் காண்பது
நன்றே எனக் கண்டேன்
தொடக்கப் பள்ளியில்
என் கண்ணானவளை
ஒன்று தொடங்கி ஐந்து
வகுப்புக்கள் வரை
அன்பையும் அறிவையும்
தனியொருத்தியாய் தந்து
தாயுமானவள்.

அன்றொரு நாள் கண்டேன்
என் அம்மா போல்
அந்நாளோ ஆயிரத்துத்
தொள்ளாயிரத்து எண்பத்து ஐந்து ஆகஸ்ட்
திகதியோ ஞாபகமில்லை

புறப்பட்டோம் புலமைப் பரிசில்
பரீட்சைக்காய் உழவு இயந்திரத்தில்
ஆசானுடன் ஐந்து மாணவர்களும்
எங்களின் இருக்கையோ
உழவு இயந்திர சேறு தாங்கி ( mud guard )
அடைந்தோம் பல்லவராயன் கட்டு
மீண்டும் ஏதோ வொரு வாகனத்தில்
சென்றோம் பூநகரி நோக்கி

அந்த நாள் குறுந்தகவல்
வருகிறது வலைப்பாட்டு வானில்
பரீட்சை பூநகரி அல்ல முழங்காவில்
செய்தி அறிந்த இடமோ நாலாம் கட்டை
திரும்பினோம் தகவல் வந்த
வானில் பன்னிரண்டாம் கட்டை வரை
இறங்கினோம் இருட்டில் இரு காடுகளிற்
கிடையில்
எம் ஆசானுடன்
மீண்டும் நடந்தோம் அச்சத்துடன்
பல்லவராயன் கட்டு நோக்கி
நேரமோ தெரியவில்லை வந்து
சேர்ந்தோம் பல்லவராயன் கட்டு
தபால் நிலையத்திற்கு
இரவைக் கழித்தோம் ஆசானுடன்

புலர்ந்தது புலமைப்பரிசில்
பரீட்சைக்காய் புதிய நாள்
காலைக் கடன்கள் முடித்து
மீண்டுமாக நடந்தோம்
பிஞ்சுக்கால்களால் முழங்காவில்
பாடசாலை நோக்கி
எம்மோடு தானும் நடந்தாள் ஒருத்தியாய்
என் தாயுமான ஆசான்
அவள் வேறு யாருமில்லை
என் அன்புக்கினிய ஆசான்
இராக்கினியம்மா

உன்னன்புக்கு அடைக்குந்தாழ்
எதுவும் இல்லையம்மா
உன்னன்புக்கு நிகர் என் தாய் தவிர
வேறெதுவுமில்லை அம்மா
என் அம்மா போல் நினைக்கிறேன்
என் பள்ளியின் நூற்றாண்டு விழாவில்
இப்போது என் தாயுமில்லை -
நீயுமில்லை

ஏழேழு ஜென்மத்திற்கும்
என் தாய் போல்
உம்மை அறியச் செய்வேன்
நீர் ஆற்றிய பணிகளை
இதற்கோர் அடையாளமாய்
நூற்றாண்டு மலரில்
என் தாயுமானவளுக்கு
சில வரிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோ. கிரிசாந்தி
ஆசிரியை

# பாதை மாற்றும் போதை

சிறுகச் சிறுகச் சேர்த்த சந்தோசம்
பெருக முதலே பிணமாகணுமா
உருக உருக அன்பு செய்தவர் முன்னே
உருக்குலைந்துயிர் போக வேண்டுமா
பழகும் மாந்தர் பலரை இழக்க வேண்டுமா
உலகம் உன்னை முழுதாய் வெறுக்க
வேண்டுமா...
போதையை நாடு பொழுதொன்றில்
வந்துவிடும் இத்தனை கேடும்

புகையிலை என்றும் பக்கெற்
பாக்கென்றும்...
வகையிலே பற்பல சாராயம் தின்றும்
தொகையிலே பெரிதொன்றை
விழுங்கியே வளருது
உன் எதிர்காலம் அழிக்க நீ
உருவாக்கும் உன் சாவின்
குழந்தை...

இரு விரல் நடுவில் இன்னொரு
விரல்...
அது அழகில்லை அசிங்கம்
பெருவிரல் மட்டும் தரைதொட
நடத்தல்

பெருமையல்ல அது சமநிலை
தளம்பல்
பாக்கு போட்ட சாக்கில் பாதை
தவறுதல்
அது ஆண்மையல்ல
கையாலாகாத்தனம்...
நஞ்சாய் போகும் என்றறிந்தும்
கஞ்சா இழுத்தல்
அது பேராற்றல் அல்ல
பேதைத்தனம்

இயற்கையோடிணைந்த
இயல்பு வாழ்வு
இவைகளின்று இனிதே
தொடர வேண்டின்
செயற்கைத்தனமாய் இயங்கும்
இவைகளை விட்டொழித்து
இவை கொண்டு
இயங்குபவர்களையும்
தள்ளிவைத்து தனித்து விட்டு
உன்னை நம்பு, உலகை நம்பு
அறிவைக் கொண்டு அகிலம் ஆண்டு
புது அத்தியாயம் ஒன்று
உருவாக்கு இன்றே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர் வகுப்பாசிரியருடன் தரம் 7 மாணவர்கள்



அதிபர் வகுப்பாசிரியருடன் தரம் 8 மாணவர்கள்



அதிபர் வகுப்பாசிரியருடன் தரம் 9 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீ. யஸ்மின்
ஆசிரியர்

# தமிழ்க் காலை

புள்ளினங்களின் ஓசையில் பள்ளி எழுந்து சாளரத்தின் வழியே என் விழிகள் மேய, பொழுது வணங்கியும், முளரியும் மிகுந்த மகிழ்ச்சி தரவே, யான் ஓடிச் சென்று தேடி எடுத்த, என் ஒளிப்படமியில் அவற்றைப் பதிவு செய்தேன்.

காலைக் கடனை முடிக்க அவசரமாக குளியலறைக்குள் புகுந்தேன். பனிக் கூழின் குளிர்மையில் நீரை அள்ளி வார்த்தேன். வழலையின் மணம் கொஞ்ச நீராடி வெளியே வந்தேன். என் கடைக்குட்டி கதவருகில் நின்று அழுவதைக் கண்டு என்னவென்று வினவ அது "இன்னட்டு வேண்டும். இப்பவே வேண்டும்" எனப் பல் துலக்க முன் தொடங்கிவிட்டது. அவளை அமைதிப்படுத்தி திரும்பமுன் பள்ளிக்குச் செல்ல ஆயத்தமான மஞ்சுக் குட்டி "என் கரிக்கோலை அண்ணா எடுத்துவிட்டான். அவன் தூவலை நான் கொடுக்க மாட்டேன்" எனச் சத்தம் போட்டாள். அடுத்த பிரச்சினையைச் சமாளிப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட நேரமும் ஓடிவிட்டது

"இனிச் சமைக்க நேரமில்லை" என குளிரூட்டியில் இருந்த அணிச்சலை எடுத்து அத்துடன் இரண்டு குமளிகளும், செந்தாரைத் துண்டுகளையும் எடுத்து உணவுப் பெட்டிக்குள் வைத்து அவசர அவசரமாகப் பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்பி வைத்தேன்.

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| புள் | – பறவை |
| சாளரம் | – யன்னல் |
| பொழுது வணங்கி | – சூரியகாந்தி |
| முளரி | – ரோஜா |
| ஒளிப்படம் | – கமரா |
| பனிக்கூழ் | – ஐஸ்கிறீம் |
| வழலை | – சோப் |
| இன்னட்டு | – சொக்லேட் |
| கரிக்கோல் | – பென்சில் |
| தூவல் | – பேனா |
| அணிச்சல் | – கேக் |
| குமளி | – அப்பிள் |
| செந்தாழை | – அன்னாசி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதிமுகன் நிரோஜன்,
ஆசிரியர்,
கிளி/வலைப்பாடு றோ. க. த. த பாடசாலை

# திறன் விருத்தி வகுப்பறையும் சாதக பாதகங்களும்

மாற்றங்களால் மாறிக்கொண்டிருக்கும் 21ம் நூற்றாண்டில் நவீன உலகத்தோடு கல்விச் செயல்முறைகளை இற்றைப்படுத்தும் சவாலுக்கு முகங் கொடுப்பதற்காக பாடசாலை மாணவ சமூகத்தைப் பொருத்தம் உள்ளதாக ஆக்குவதற்காக இன்று இலங்கையில் பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் "திறன் விருத்தி வகுப்பறை" எனும் நவீன கற்பித்தல் சாதனம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் முதலாவது திறன் விருத்தி வகுப்பறை ஸ்ரீ ஜயவர்த்தன புர மகா வித்தியாலயத்தில் அரசாங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்துப் பாடசாலைகளும் தமது பாடசாலைகளில் அதனைஅறிமுகப்படுத்தும் செயற்பாட்டில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. நகரப்பாடசாலைகளில் அதனைப் பெற்றுக் கொள்வது சுலபமாக காணப்பட்டாலும் கிராமப் பாடசாலை இன்னும் எவ்வளவு காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஏக்கம் நிர்வாகங்களை பொறுத்தவரை ஊசலாடிக் கொண்டு தான் இருக்கின்றன.

இவ்வாறு இன்று அதிகம் பேசு பொருளாக காணப்படும் திறன் விருத்தி வகுப்பறை ( Smart Class) என்ன என்பதை நோக்குகையில் அது முற்று முழுதாக தொழில்நுட்ப சாதனங்களைக் கொண்ட ஒரு வகுப்பறை எனப் பொருள்படுகின்றது. ஆசிரியர், மாணவர், தொழில் நுட்ப சாதனங்கள் ( கணினி அத்தோடு அதனுடன் தொடர்புடைய பிற சாதனங்கள்) என்பவற்றை இணைத்துக் காணப்படும் வகுப்பறையாக காணப்படுகின்றது. ஆரம்பத்தில் ஆசிரியரின் கற்பித்தலை மாணவர் செவிமடுப்பதாக ஆசிரியர் மையக் கல்வியும் பின்னர் மாணவனை மையப்படுத்திமாணவர் மையக் கல்வியும் காணப்படுகையில் இன்று இருவருக்கும் இடையில் ஸ்மாட் திரை (Smart Screen) நுழைந்திருக்கின்றது . வகுப்பறை தொடர்பாக இன்று பல சாதகங்கள் காணப்பட்டாலும்சில பாதகமான விளைவுகளும் முன்வைக்கத்தான் படுகின்றது.

பல பாடசாலைகளில் ஆரம்ப பிரிவு தொடக்கம் அதனைப் பயன்படுத்த தொடங்கினாலும் சில பாடசாலைகள் இடை நிலைப் பிரிவுகளில்தான் அதனை பயன்படுத்த முனைகிறார்கள். அதாவது இத்திறன் விருத்தி வகுப்பறையில்மாணவர்களின் செயற்பாடு மிகக் குறைவாக காணப்படுகின்றது. என்ற அடிப்படையில் ஒருசில பாடசாலைகளில் இடைநிலைப் பிரிவுகளிலே ஆரம்பிக்கின்றனர். ஆசிரியர் தான் கணினியின் உதவியுடன் தனது கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனங்களை தயார் செய்து காலையில் வகுப்பறை நுழைந்ததும் அதனை தொடுதிரை யோடு இணைத்து தனது கற்பித்தலை மேற்கொள்கின்றனர்.

இதன் சாதகங்களை நோக்கும் போது முதலாம் வகுப்பில் இருந்தே இதன் மூலம் கற்பித்தலை மேற்கொள்ள முடிகின்றது. படங்களைக் காட்டி அதன் பெயர்களைக் கூறச் செய்தல், மனப்பாடப் பகுதிகளை ராகத்துடன் பாடும் இறுவெட்டுக்களை பார்க்கச் செய்தல் எனப் பல்வேறு வகைகளில் திறன் விருத்தி வகுப்பறையின் செயற்பாடுகள் ஆரம்பமா கின்றன. வழக்கமான கற்பித்தல் முறையில் ஆசிரியர் பாடம் நடத்தும் போதுவகுப்பறை யிலுள்ள அனைத்து மாணவர்களையும் ஈர்க்க முடியாமல் போய்விடக் கூடும் . ஆனால் திரை வழியே கற்பிக்கும் போது அது சாத்தியமாகும்.

ஒரு வகுப்பறையில் 40ற்கும் மேற்பட்ட மாணவர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு கற்பிக்க திறன் விருத்தி வகுப்பறை எளிமையானதாக இருக்கும். ஆசிரியர்கள் பற்றாக்குறை நிறைந்த பாடசாலைகளுக்கு மிகவும் பொருத்தமானதாகும். ஓர் எழுத்தை எழுத எங்கிருந்து ஆரம்பித்து எங்கு முடிக்க வேண்டும் என்பதை திரை வழியே சுலபமாக கற்றுக் கொடுக் கலாம். கரும்பலகையை சரியாகக் கையாளத் தெரியாத ஆசிரியர் எனின் எழுதிக் கொண்டிருக்கும் போது அவரின் உருவம் வகுப்பின் சில மாணவர்களுக்குக் கரும் பலகையை மறைத்துக் கொண்டிருப்பதை உணர மாட்டார். இது போன்ற சிக்கல்களுக்குத் திரை வழியே கற்பிப்பது மாற்றாக அமையும்.

நேடியாக சென்று பார்க்க முடியாத சந்தர்ப்பங்களில் இதன் பயன்பாடு மிக உச்சமாகக் காணப்படுகின்றது. கண்காட்சி பற்றிய பாடத்திற்கு ஆசிரியர் ஒருவர் அந்தக் கண்காட்சியில் காணொலியை திரையிட்டு காண்பிக்க முடிகின்றது. வார்த்தைகளால் விளக்குவதை விட மேலான புரிதலை இது நிச்சயம் அளிக்கிறது. வெறும் பிரம்மிப்புக்காக இந்த முறையை பிரயோகிக்காமல் மாணவர்களால் காணவே முடியாத எரிமலை,சுனாமி,அறிவியல் கண்டுபிடிப்புக்கள் போன்றவற்றை விளக்குவதற்காக பயன்படுத்தும் நல்ல பலனைத் தரும்.

ஆசிரியர்கள் விரிவுரை முறைக் கற்பித்தலை மேற் கொள்வதற்கு இது அதிக பலனைத் தருகிறது . ஆர்வமூட்ட, பாடப் பொருளை விளக்க,கற்பிக்கும் போது சலிப்பைக் குறைக்க இதன் முறைகள் பயன்படும். கதைகள் சொல்லவும்,பாடல்களை மாணவர்கள் கேட்கச் செய்யவும்,தாவரஇயலின் செல்களைக் காட்டவும் உதவியாக இருக்கும். மாணவர்களை குறிப்பாக குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தும் அவர்களுக்குப் பாடத்தின் பால் ஈடுபாட்டை ஏற்படுத்தும்.

திறன் வகுப்பறை சாதகமான பல அம்சங்களை எழுதிக் கொள்கின்ற அதே வேளையில் பல பாதகமான விளைவுகள் பலவும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

கல்வியில் அரிச்சுவடி படித்தவர்கள் தொடக்கம் கல்வி அறிஞர்கள் வரை பலரும் இன்று உச்சரிப்பது மாணவரை மையப்படுத்திய செயற்பாட்டு முறை கற்பித்தல் ஆகும். எமது இந்த மிடுக்கான வகுப்பறையில் மாணவர் மையப்படுத்தப்படுகின்றாரா என்பது இன்று எல்லோர் மனதில் எழும் பிரதான கேள்வியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஜாஜேயின் காலத்தில் இருந்தே மாணவரை மையப்படுத்தும் கல்வி முறை வலியுறுத்தப்பட்டு வருகிறது. பிஜாஜேயின் இந்தக் கோட்பாடு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆசிரியரை மையப்படுவதில் ஆசிரியர் பாடத்தை முன்மொழிவார். பேசி, காட்டிப் (tell and show) பாடம் நடத்துவார் இதில் மாணவர் பேசாமல் கேட்டுக் கொண்டு இருப்பார். சில வேளைகளில் மட்டும் ஆசிரியருடைய கேள்விக்கு விடை தருவார்.

ஆனால் மாணவரை மையப்படுத்தும் கல்வியில் மாணவர் ஆவார். வாசிப்பார், எழுதுவார், சிக்கல்களை கண்டுபிடித்து தீர்வு காண்பார். சோதனைகள் செய்வார். தானே முயன்று தனது கற்கும் வேகத்தில் கற்பார்.

வியாபார உலகில் இன்று போட்டி போட்டுக் கொண்டு பாரீதியான இறுவெட்டுக்கள் ஆக்கி விற்கிறார்கள். இவை வினைத் திறன் அற்ற ஆசிரியர்களின் கைகளுக்கு செல்கின்றன. ஆசிரியர்கள் தமது வகுப்பறையில் காணப்படும் தொடு திரையின் ஊடாக காண்பிக் கிறார்கள். திரைப்படம் பார்ப்பது போல மாணவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் எவ்வளவு, யார், யாருக்குப் போய்ச் சேர்ந்தது என்று தெரியாது. மாணவர்கள் பங்களிப்பே இல்லை இங்கு உரையாடல் கிடையாது.

திறன் விருத்தி வகுப்பறையில் தொடு திரையில் படங்கள் காட்டப்படுவதற்கு இருட்டான சூழல் வேண்டும் என்பதால் மூடப்பட்ட வகுப்பறைகளாக மாறும் நிலை உருவாகும். நாள் முழுவதும் அப்படி இருந்தால் ஆரோக்கியமானதல்ல அதனால் நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் திறன் விருத்தி தொடுதிரையை பயன்படுத்தினால் போதுமானது. இங்கு கற்பித்தல் நடைபெறும் அதே வேளை மாணவர்களின் உடல் நலப் பிரச்சினைகளை கவனத்தில் கொள்ளுதல் பிரதானமாகின்றது.

இங்கு மொத்தத்தில் வலியுறுத்தப்படுவது மாணவர்கள் திறன் விருத்தி வகுப்பறையில் அவதானிக்கிறார்கள். செவிமடுக்கிறார்கள். ஆனால் துலங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைப்ப தில்லையே என்பதாகும். ஆரம்பக் கல்வி மாணவர்களின் கற்றல் விருத்திக்கு உண்மைப் பொருள்களைக் கொண்டு கற்பித்தலே பிரதானமாக வலியுறுத்தப்படுகின்றது. ஆசிரியர்கள் அனைத்தையும் பதிவிறக்கம் செய்து தொடுதிரையின் ஊடாக காண்பித்து தமது வினைத்திறனற்ற கற்பித்தலை மேற்கொண்டு விடுகிறார்கள். இதனால் ஆரம்ப பருவத்தில் கிடைக்கின்ற நேரடி அனுபவம் கிடைக்காமல் போகின்றது என குற்றச்சாட்டுகள் அதிகம் முன்வைக்கப்படுகின்றன.

எனவே இவ் திறன் விருத்தி வகுப்பறைக்குச் செலவழிக்கும் பணத்தில் பாடசாலையின் நூலகத்தை மேம்படுத்தலாம். எனற கருத்து முன்வைக்கப்படுகிறது. மேலை நாடுகளில் வகுப்பறையிலேயே நல்ல நூலகம் இருக்கிறது. இதன் மூலமான தேடல் கல்வி வினைத்திறன் மிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்கின்றது. எனவே மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய நூலகங்களை உருவாக்குங்கள். பின் திறன் விருத்தி வகுப்பறைகளை பார்க்கலாம் என்ற கோசம் வலியுறுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ச. ஜெசிந்தன் BA
ஆசிரியர்

# வாசிப்பும் மனிதனும்

உலகிலே தோன்றிய உயிர்களிலே
அறிவால் உயர்ந்தவன் மனிதன்
சிந்திக்கும் ஆற்றலால் சிறகடித்து
உல்லாசமாக வாழ விரும்புபவன்
மனிதனின் அறிவுப் பசியைப் போக்கி
சிந்தனையைத் தூண்டி
ஆற்றலை விருத்தியாக்குவது
வாசிப்பு...
மனிதன் பல்வேறு நூல்களை வாசித்து
ஆய்வுகளை மேற்கொண்டு
ஆக்கங்களை உருவாக்கி
ஆய்வாளன், படைப்பாளி எனும்
பல புனை பெயர் கொண்டு
பாரினில் சிறந்து விளங்கி
பார் போற்ற வாழ உதவுவது
வாசிப்பு...
இன்றைய மனிதனோ
நவீனத்துவத்தை விரும்பி
நாகரிக மோகத்தில் விழுந்து
ஓய்வு நேரத்தை கழிக்க
நூலகத்தையும் நூலையும் மறந்து
ஏடு ஏந்திய கைகளிலே
கைத்தொலைபேசியை ஏந்தி
முகப்புப் புத்தகம் பார்ப்பதில்
காலத்தை வீணாகக் கழித்து
வாசிப்பைத் தொலைத்து
ஆக்கத்திறன் குறைந்து
ஆற்றல் அற்ற மனிதர் எனும்
பட்டத்தைச் சுமந்து
பாழான பாதையிலே
பயணத்தை தொடர்கிறான்
மனிதன்...
ஒரு கணம் சிந்தியுங்கள்
நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்
காலம் பொன்னானது – எனும்
ஆன்றோர் மொழி அருமை மொழிதான்
காலத்தை வீணடிக்காது
நல்ல நூல்களை வாசித்து
அறிவையும் ஆற்றலையும் – எம்
ஆயுளுள்ள வரை வளர்த்து
அறிவில் சிறந்தவராக
அவனியில் வாழ்வோமா?
மனிதரே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. கொ. கிருபானந்தன் B.Ed
ஆசிரியை

# கல்வியும் தொலைக்காட்சியும்

கல்வியானது அறிவு, திறன், மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி சமூகத்திற்கு பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகளை உருவாக்குவதாகும். கல்வியின் மூலம் இடம் பெறும் தொழிற்பாடுகளில் ஒன்றாக அமைவது, பண்பாட்டுக் கொடுப்பனவுகளை தலைமுறை தலைமுறையாக பரவச் செய்வதாகும். அதாவது நிலைத்திருக்கும் அறிவுக்குவியலை தற்கால சந்ததியினருக்கும் வழங்குவதும்; அதன்மூலம் புதிய அறிவை உருவாக்குவதும் இன்றியமையாத செயற்பாடாகும். எனவே களமிறங்கும் புது உலகிற்கும் பொருத்தமான தாய் உருவாக்குவதற்குமான பணிப் பொறுப்பு கல்வியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்வியின் பணிப் பொறுப்புக்கள் பரந்து விரிந்தவை "மாகரட் மீட்" அவர்கள் நேற்று வரைக்கும் ஏதுமறியாத, இதுவரையிலும் ஏதுமறியாத எனினும் நாளையாகும் போது சிலரால் தெரிவிக்க வேண்டிய விடயங்களை எம்மால் கற்க வேண்டியுள்ளது எனக் கூறுகின்றார் .

மேற்படி கூற்றுக்கு அமைவாக கல்வியைப் பெறுவதற்கு கற்பித்தல் சாதனங்கள் அவசியமான விடயமாகக் காணப்படுகின்றது. இதனடிப்படையில் அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் என்றும், கட்புல சாதனங்கள், செவிப்புல சாதனங்கள், கட்புல செவிப்புல சாதனங்கள் எனவும் வகைப்படுத்த முடியும். அந்த வகையில் நவீன உலகில் துரிதமாக வளர்ச்சியடையும் கல்விச் சூழலில் கட்புல செவிப்புல சாதனங்களில் ஒன்றான தொலைக்காட்சியின் பயன்பாடுகளை ஆராய்வது அவசியமாகும்.

இன்று பெறப்படும் அறிவுத் தொகுதியையும், நாளை பெறப்படும் அறிவுத் தொகுதியை யும் பகிர்ந்தளிக்கும் செயற்பாடு கல்வியின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. பாடசாலை மாணவரிடையேயும், இளைஞர், யுவதிகள் மற்றும் வளர்ந்தோரிடையேயும் அறிவை வளர்க்க தொலைக்காட்சி ஊடகத்தை சிறந்த முறையில் உபகரணமாக்கிக் கொள்ள முடியும். தற்காலத்தில் பொதுசன ஊடகங்களில் ஒன்றாக தொலைக்காட்சியும் முக்கிய இடம் பிடித்துள்ளது.

பொதுசன ஊடகங்களின்பிரதான குறிக்கோள்கள் நான்கு காணப்படுவதாக பொதுசன ஊடக வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். அவற்றை நோக்குவோமாயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சூழலைப்பற்றி விழிப்புணர்வுடன் கூடிய விசாரனை மக்கள் கூட்டத்தினரைப் பாதுகாத்தல்.

2. விழிப்புணர்வின் மூலம் பெறப்பட்ட தெளிவான தகவல்களால் ஒழுங்கமைத்தல்.

3.ஆளுரிமையை தலைமுறை தலைமுறையாகக் கொண்டு செல்லல்.

4.பொழுதுபோக்கு நிர்மாணம்.

என்பனவாகும் இக் குறிக்கோள்களை நிறைவேற்றும் போது அறிவானது மக்களைச் சென்றடையும். இன்று கல்வி என்னும் எண்ணக்கரு முறைசார் ஊட்டிகளுக்கு மாத்திரம் அல்லது வயதெல்லையின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்நாள் கல்வியாகத் தொடர்கிறது. மனிதன் வாழும் இடமெல்லாம் கல்வி பெறுபவனாக வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்துள்ள ஒன்றாக உள்ளது. இச் செயல் முறையில் மனிதனின் அறிவுத்தொகுதியைப் போசணையூட்டி அவனவன் சிந்தனைத்திறன் கூர்மையாவதற்கு ஆக்கத் திறனை உருவாக்குவதற்கு ஓய்வு நேரத்தை கருத்து மிக்கதாய் செலவிடுவதற்கு தொலைக்காட்சியை உபயோகிக்க முடியும்.

முறைசார் கல்வித் தொகுதியில் தொலைக்காட்சியை மிகவும் கருத்தாழம் மிக்கதாய் உபயோகப்படுத்த முடியும். கல்வியை வழங்கும் போது கட்புல-செவிப்புல துணைச்சாதனங் களின் மூலம் பிரபலமான செல்வாக்குச் செலுத்துகிறது. உள்ளார்ந்த நிலைநிறுத்தலில் கேட்டல் மூலம் 25%உம் பார்த்தல் மூலம்75%உம் என H.R மில்லி (1974) இல் சுட்டிக்காட்டியுள்ளார் இதனால் பாடம், பிள்ளை மனதில் தேர்ச்சியடைவதற்கு தொலைக்காட்சி மற்றும் வீடியோ காண்பியங்களை பயன்படுத்த வேண்டும். பல சிக்கலான எண்ணக்கருக் களை மிகவும் எளிமையாக மனதில் பதியும் விதமாய் கற்பிப்பதற்கு இத்துணைச் சாதனத்தை உபயோகிக்கலாம்.

பிள்ளை தனது வாழ்க்கை அனுபவங்களுக்கு அப்பாற்பட்டவற்றை அண்மித்த அனுபவங்களாகக் காட்டும் முறைகள் பற்றி கருத்து வெளியிடும் “எட்கார்டேல்” தனது “Audio Visual Methods in Teaching” என்னும் நூலில் அனுபவக் கூடமொன்றை உருவாக்கியுள்ளார். அதில் கல்வியில் தொலைக்காட்சி பயன்படுத்துவதற்கு முக்கிய இடம் கிடைக்கிறது. நேரடி அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க முடியாத வேளைகளில் பெற்றுக் கொடுக்க முடியுமான துணை அனுபவக் கல்வியை தொலைக்காட்சி மூலம் வழங்க முடியும்.

பாடசாலைப் பாடத்திட்டத்தில் அனைத்துப் பாடங்களையும் மிகவும் வினைத்திறனுடைய தாக கற்பிப்பதற்கு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அமைக்க முடியும். நவீனமயப்படுத் தப்பட்ட புத்தகம் புதிய கல்வியூட்டியாகவும், வகுப்பறையில் கற்கும் விடயங்களை வேறொரு ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பாகவும் இது அமையும்.


முற்காலத்தில் தொலைக்காட்சியும் பல்லூடகங்களையும் வெறுமனே முறைசாரா கல்வி ஊடகமாகக் கணிக்கப்பட்டது.தற்காலத்தில் அவை முறைசார் கல்வி ஊடகங்களாக கணிக்கப்படுகின்றது. தற்கால தொழினுட்ப உலகில் பிறக்கும் குழந்தை மிக விரைவாக உலகை அறிந்து கொள்வது தொலைக்காட்சி மூலமாகும். சிறு பிள்ளைகளுக்கு அதன்மூலம் கிடைக்கும் வினோதமும், ஊக்கலும் காரணமாக நாளின் பெரும் பகுதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியைப் பார்த்து இரசிப்பதற்கு பழகியுள்ளனர். இதன் காரணமாக ஒரு பிள்ளையின் உருவாக்கத்தில் தொலைக்காட்சியின் பங்கை சில நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்த வரையில் தொலைக்காட்சியானது மாணவர்களின் கல்விக்கு இடையூறாக உள்ளது. என்பது பலரது மனதிலும் பதிந்த கருத்தாகும். ஆனால் அவை வீடுகளில் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. பிள்ளைகளுக்குரிய நிகழ்வுகளைப் பார்க்க பெற்றோரே அவர்களை வழிப்படுத்த வேண்டும். நல்ல விடயங்களை உள்வாங்கி தேவையற்ற விடயங்களைத் தவிர்த்து கல்வி சார்ந்த விடயங்களை மட்டும் பிள்ளைகள் பார்க்க வழிகாட்டும் போது கல்வியில் தொலைக்காட்சியின் பங்களிப்பு முக்கிய இடம் பெறுகிறது. இதனைச் சமூகமும் பெற்றோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். அத்துடன் எமது நாட்டில் தொலைக்காட்சியில் கல்வி தொடர்பான நிகழ்வுகளை அதிகரிக்க அத்துறையில் உள்ளவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ. ரஜீவன் BSc(Hons), PGDE
ஆசிரியர்.

# பள்ளிப்பருவத்தை முறையாக திட்டமிடுங்கள்

“வாழ்க்கையைச் செப்பனிடுவதற்கான ஆயத்தப்
பருவமே பள்ளிப்பருவம்”

“பள்ளி வாழ்வில் வெற்றி பெறுவோர்
மிகுதி வாழ்வில் வாகை சூடுவர்”

“அறிவும் பண்பும் நட்பும் நம்பிக்கையும்
ஒழுங்கும் ஒழுக்கமும் தருமிடமே பள்ளி”

இவ்வாறு பள்ளிப்பருவம் பற்றிய நம்பிக்கை தரும் வாசகங்கள் உள்ளன. பள்ளிப்பருவம் ஒரு மாணவனுக்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மேற்படி வாசகங்கள் உணர்த்தி நிற்கின்றன.

பள்ளிப்பருவம் என்பது எல்லா மாணவர்களிற்கும் முழுமையாக கிடைத்துவிடுவதில்லை. பள்ளிகள் தொலைவில் இருத்தல், வீட்டு பொருளாதார நிலைமைகள், வீட்டுக்காக வேலை செய்ய வேண்டி இருத்தல், படிப்பில் நாட்டமின்மை, மருத்துவ காரணங்கள் போன்றவற்றால் சிலமாணவர்கள் பள்ளிப்பருவத்தை பாதியிலேயே நிறைவு செய்து கொள்கின்றனர்.

இந்த பருவத்தில் மாணவர்கள் கிடைக்கும் ஒவ்வொரு மணித்துளிகளையும் தங்களை மேன்மையானவர்களாக செதுக்கிக் கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பள்ளிப்பருவத்திலேயே வாழ்வு பற்றிய இலக்கினை வகுத்துக் கொள்ளவேண்டும். அந்த இலக்கினை அடைவதற்கான தெளிவான சிந்தனைகளும் தெளிவான திட்டங்களையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். கிடைக்கும் எல்லா வசதிகளையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

தரம் 1 இலிருந்து தரம் 13 வரை கற்கும் போது உடல் ரீதியாக, அறிவு ரீதியாக உணர்வு ரீதியாக, மனவெழுச்சி ரீதியாக, பண்பு ரீதியாக, ஆளுமை ரீதியாக, மாணவர்கள் வளர்ச்சியடைகின்றார்கள்.

பள்ளிப்பருவத்திற்கு அப்பால் தனி மனித வாழ்வு, குடும்ப வாழ்வு, தொழில் வாழ்வு, சமூக வாழ்வு என்பவற்றுக்குத் தேவையான தகுதிகளையும் திறமைகளையும் பள்ளிப்பருவத் திலேயே வளர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். பள்ளிப்பருவத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் அறிவும், தகுதியும், திறனும், நம்பிக்கையும், ஆற்றலும், ஆளுமையும், ஒழுங்கும், ஒழுக்கமும், தூய்மையும், உன்னதமும் கொண்ட நல்ல தனிமனிதனாக உருவாக முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிப்பருவத்தில் சக பாடிகளுடன் இடைத் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் குடும்ப வாழ்வில் குடும்ப உறுப்பினர்களுடன் ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் கூடி வாழக்கூடிய எல்லா மனப்பாங்கும் திறன்களும் ஏற்படும். சமூகமான தொடர்பாடல், பகிர்ந்து கொள்ளுதல், மதித்தல், வெற்றிக்காக பரஸ்பரம் உதவுதல் போன்ற திறன் மனப்பாங்குகளை பள்ளிப்பருவத்திலேயே விருத்தி செய்து கொள்ளல் வேண்டும்.

பாதுகாப்பான, அந்தஸ்தைப் பெற்றுத்தருகின்ற, நிறைவான ஊதியத்தை வழங்குகின்ற தொழில் ஒன்றைத் தேடிக் கொள்வதற்கான திறன்களை பள்ளிப்பருவத்தில் உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

பரந்து விரிந்த சமூகத்தில் ஒரு சிறந்த அங்கத்தவனாக வாழ்வதற்கு தேவையான சமூக விதிகள், சமூக பழக்கவழக்கங்கள், சமூக நியமங்கள் என்பவற்றை அனுசரித்துச் செல்லும் மனப்பாங்கினையும் திறனையும் பள்ளிப்பருவத்தில் விருத்தி செய்து கொள்ளல் வேண்டும்.

பள்ளிப்பருவ மாணவர்களின் பிரதான பணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- அக்கறையும் ஊக்கமும் கொண்ட கற்றல்.
- விளையாட்டும் ஓய்வும்.
- நட்பை மேம்படுத்தல்.
- தொழிலுக்கான கல்வியும் பயிற்சியும்.
- ஆளுமை விருத்திக்கான பயிற்சி.
- சமூக நியதிகளை மதித்தல்.

இவற்றை நிதானத்துடன் கடைப்பிடிப்பதன் மூலம் பள்ளிப்பருவத்தை பயனுறுதி மிக்கதாக மாற்றிக் கொள்ள முடியும்.

நேரத்தை வீணடிக்கும் நபர்களையும், பழக்கங்களையும், செயல்களையும் படிப்படியாகக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். நல்ல வழிகாட்டிகளைத் தெரிவு செய்து அவர்களைப் பின்பற்றுதல் சிறப்பானது. திரும்பக் கிடைக்காத நேரத்தை மீட்கமுடியாத தீய பழக்கங்களிற் குள் தொலைத்து விடுவது தோல்வியையே கொடுக்கும். நிறைந்த அன்பு தரும் உங்கள் அம்மா, உங்களுக்கு வசதியும் பாதுகாப்பையும் தரும் அப்பா, அறிவை ஊட்டும் நல் ஆசான்,சுயநலமில்லாத தூய பழக்கமுள்ள நண்பன் ஆகியோரை நம்புவதுடன் அவர் களின் அறிவுரைகள்ஆலோசனைகளைப் பின்பற்றுதல் வேண்டும். நட்புக்காகத் தீமைகளை உள்வாங்குவது ஆபத்தானது என்பதை புரிந்து கொண்டு எச்சரிக்கை யுணர்வுடன் நட்பைப் பரிசீலித்துக் கொள்ளுதல் வேண்டும்.

பள்ளிப்பருவத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் சிறந்த தனிமனிதனாக, சிறந்த குடும்ப உறுப்பினராக, சிறந்த தொழிலாளராக, சிறந்த சமூக உறுப்பினராக எதிர்காலத்தில் மிளிர முடியும் என்பதை புரிந்து கொண்டு பள்ளிப்பருவத்தினை பயனுறுதி மிக்கதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

**உசாத்துணை -**

இராசேந்திரம் ஸ்ரலின், ஆளுமைக் கொள்கைகள், 2015

பேராசிரியர் மா. சின்னத்தம்பி, பாடசாலைக்கல்வி ஆற்றலும் சமூக நீதியும் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர் வகுப்பாசிரியருடன்
தரம் 10 மாணவர்கள்



அதிபர் வகுப்பாசிரியருடன்
தரம் 11 மாணவர்கள்



மாணவத்தலைவர்கள் அதிபர், உப அதிபர், பொறுப்பாசிரியருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ப. வினோஜினி
ஆசிரியை

# அனைவருக்கும் கல்வி

அனைவருக்கும் கல்வி என்ற கோஷம் இன்று உலக நாடு எங்கும் ஓங்கி ஒலிக்கின்றது. அரசுகளின் இன்றயமையாத கடமைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. ஒவ்வொரு நாடும் தனது வருமானத்திற் பெரும் பகுதியை கல்விக்காக செலவிடுகிறது. ஆனால் இதன் பயன்பாடு பூரணத்துவமுள்ளதாக அமைகிறதா? என்பது சிந்தனைக்குரியதாகவே உள்ளது.

மனித சமுதாயம் பலவகையான மக்கட் கூட்டத்தைக் கொண்டுள்ளது படித்தவர், பாமரர், செல்வர்கள், ஏழைகள், நல்லவர்கள், தீயவர்கள் என பல்வேறு பாகுபாடுகள் நிலவுகிறது. சமுதாயத்தில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் இருக்க வேண்டுமா? இவை அவசியம் தானா? என்றால் அனைவரும் இல்லையென்றே கூறுவர் . எனவே இது பற்றி நாம் நன்கு சிந்திக்க வேண்டும். மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவதே பகுத்தறிவு என்ற ஒன்றால்தான். இப்பகுத்தறிவே இன்றுவரை மனிதனை உன்னத நிலைக்கு உயர்த்தி வைத்துள்ளது. இதன் மூலமே மனிதன் மொழிகளை உருவாக்கவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் பலவற்றை நிகழ்த்தவும், கருத்துக்களை தர்க்கிக்கவும் மேலும் பல செயல்களைச் செய்யவும் முடியுமாயிருக்கிறது.

காலந்தோறும் நாம் கண்டுபிடித்த உண்மைகளை தத்தம் மொழியில் பதித்து வைத்தும் பயன்படுத்தியும் முன்னேற்றம் கண்டுள்ளனர். தாம் அடைந்த முன்னேற்றத்தை நிலைநாட்டவும் தமக்கேற்ற வழியில் பயன்படுத்தவும் கல்வியே மனித சமுதாயத்திற்கு உகந்த ஒரு சாதனமாகத் திகழ்கிறது. கல்வியின் மூலமே ஒரு சமுதாயத்தின் பண்பாடும், விழுமியங்களும் அழிந்தொழியாது பாதுகாக்கப்பட முடியும். இந்த நிலையில் மனித சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி எல்லோரும் ஓர் இனம் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் சமத்துவமாகச் சகலரும் வாழக் கூடிய வழியினைக் காட்ட வல்லது கல்வி ஒன்றே ஆகும். எல்லோரும் சமத்துவமாக எல்லாம் பெற்று வாழ வேண்டுமாயின் அனை வருக்கும் உகந்த கல்வி அளிக்கப்படுதல் அவசியமாகும்.

கல்வி என்பது ஒரு சமுதாயத்தின் உயிர் மூச்சாய் அமைந்துள்ளது. சமுதாய உறுப்புக்கள் யாவிலும் கல்வி தனது ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. அதற்கு பங்கம் விளைந்தால் சமுதாயமே பெரிதும் பாதிப்புறும். கல்வி என்பது எமது கண் போன்றது. கல்விக் கண் இன்றேல் நாம் கண்ணிருந்தும் குருடராகவே கருதப்படுவோம். இதனையே வள்ளுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுடையோர் என்போர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதார்

எனக் கூறி உள்ளார் . எனவே அனைவரும் கல்வி பெறுவதன் மூலமே ஒளி படைத்த சமுதாயத்தை உருவாக்க முடியும்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனையவர் என்பது பொய்யாமொழிப்புலவர் கூற்று .

மனிதன் விலங்காக வாழக்கூடாது . அவன் மனிதனாக, மனிதப்பண்புள்ளவனாக வாழ வேண்டும். அதற்கு கல்வியே அச்சாணி ஒரு சமுதாயத்தில் ஒரு பகுதியினர் கல்வி பெற்றவர் களாகவும் மற்றைய பகுதியினர் கல்வியைப் பெறததவர்களாகவும் காணப்பட்டால் அச்சமுதாயம் சீர் பெற முடியாது. முழுச் சமுதாயத்திற்குமே அது பெரும் இழுக்காகும். இவ்வுண்மையை நன்கு உணர்ந்தமையால்தான் ஒவ்வோர் நாட்டரசும்தனது குடி மக்களுக்கு கல்வியளிப்பதைப் பெரும் கடனாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. ஒரு குறிப் பிட்ட வயது வரை கட்டாயக் கல்வி புகட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் அரசு அளிக்கும் வாய்ப்பினை பயன்படுத்தாது சிலர் வறுமை, அறி யாமை, அலட்சியம் காரணமாகத் தங்கள் பிள்ளைகளின் கல்வியிற் கவனம் செலுத்தாது விடுகின்றனர். இதனால் வருங்காலப் பிரஜைகளான மாணவர்கள் பலர் கல்வி பெறும் வாய்ப்பினை இழந்து விடுகின்றனர்.

வீட்டு வேலைகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும், கூலித் தொழில்களுக்கும் செல்லும் மாணவர்கள் கல்வியின் அருமையை அறியாது பின் நாளில் இரங்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். பெற்றோர்களின் தவறு குறித்து வருந்துகின்றனர். படிக்கும் காலம் பொற்காலம் என்பர் .அக்காலத்தை இழந்து விடும் மாணவர்கள் கல்விக் கண்ணை இழந்து விடுகின்றனர் . இது பெரும் கொடுமை இக் கொடுமை ஒழிய வேண்டுமாயின் சகலருக்கும் கல்வி புகட்ட வேண்டும்.

"ஏழ்மையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்"

என்றார் பாவேந்தர் பாரதி தாசன். இதற்கமைய எல்லோரும் கல்வி புகட்ட ஏற்றன யாவும் செய்யப்பட வேண்டும்.

அனைவருக்கும் கல்வி" என்றால் குடிமக்கள் அனைவருக்கும் எழுத வாசிக்க தெரிந்தாற் போதுமென நாம் கருதிவிடக் கூடாது. ஒருவன் தான் பெற்றுக் கொண்ட கல்வியால் தனக்கும் தான் வாழும் சமுதாயத்திற்கும் பயன்படும் அளவிற்கு அவனது கல்வி அமைதல் வேண்டும். நமது நாட்டைப் பொறுத்த வரையில் எழுத்தறிவு வீதம், பாடசாலைக் கல்வி வீதம் அதிகரித்துள்ள போதும் பண்பு சார் விருத்தி எதிர்பார்த்த அளவு ஏற்படவில்லை என கல்வியமைச்சின் ஆய்வு ஒன்று வெளிப்படுத்துகின்றது. அதற்கான காரணத்தை நோக்குகின்ற போது நமது நாட்டுக் கல்விமுறையானது பரீட்சையை மையமாகக் கொண்டு பரீட்சையில் தேர்ச்சியைக் கருத்தில் கொள்ளாது அறிவை அளப்பதினால்திறமைசாலிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது மாத்திரம் கவனம் செலுத்தும் போதுஅநேகர் புறம் தள்ளப்படுகின்றனர்.இதனால் போட்டித் தன்மைகளும், ஏற்றத்தாழ்வுகளும் ஒழுக்கச் சீர்கேடுகளும் உருவாக்கம் பெறுகிறது. கற்பவர்கள் எல்லாரும் பொறியியலாளராகவோ, பேராசிரியர்களாகவோ, மருத்துவர்களா கவோ ஆகிவிட வேண்டும் என எதிர்பார்ப்பது தவறு. அவரவர் தம் ஆற்றலுக்கேற்ப தொழிற்துறைக் கல்வியையோ, தொழில்நுட்பக் கல்வியையோ, நுண்கலைக் கல்வியையோ பெறும் வாய்ப்பினை நல்கிவிட வேண்டும். இத்தகைய வசதியும் வாய்ப்பும் கிட்டும் போது தான் "அனைவருக்கும் கல்வி" என்ற சொற்றொடர் அர்த்தமுள்ளதாகும்.

இன்று இத்தகைய பொருளுடையதான கல்வியைப் பெறுவதற்கு பல முட்டுக் கட்டைகள் போடப்படுகின்றன. இன, மத, சாதி வேறுபாடுகள் குறுக்கிடுகின்றன. கிராமப்புற மாணவர்களுக்கும் நகர்புற மாணவர்களுக்குமிடையே கல்வி வசதிகளை அளிப்பதில் பாகுபாடுகள் காணப்படுகின்றன. பணம் படைத்தோரின் பிள்ளைகள் அனுபவிக்கும் வாய்ப்பு வசதிகள் ஏழை மாணவர்களுக்கு எட்டுவதாயில்லை.

இந்நிலை மாற வேண்டும் எல்லா மாணவர்களுக்கும் எல்லா வசதிகளும் கிட்ட வேண்டும்– அத்தகைய ஒரு சூழ்நிலையில் தான் "அனைவருக்கும் கல்வி" என்ற சொற்றொடர் அர்த்தமுள்ளதாக அமையும் என்பது உறுதி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி . அமலகௌரி அருள்நந்தன்
ஆசிரியர் - புவியியல்

# கல்வியும் அதன் முக்கியத்துவமும்

கல்வியானது நுண்மதியாற்றலையும் திறன்களையும் வளர்க்கின்றது. அத்துடன் வாழ்விற்கு வேண்டிய நற்பண்புகளையும் வளர்க்க வேண்டும் . நற்பண்புகளை வளர்ப்பதன் மூலமே வாழ்க்கையின் குறிக்கோள்களை கல்வியால் பெற்றுக்கொள்ள முடியும். வாழ்க்கைக்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. வாழ்க்கைக் குறிக் கோள்களை அடையும் வழி கல்வி ஆகும். கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வி இதனையே ஆங்கிலக் கல்வியறிவாளர் வில்லியம் வேட்ஸ்வர் மனிதத் தன்மையினை மனிதன் பெறத் துணையாக விளங்குவது கல்வி என்று கல்விக்கு வரையறை தந்தார் . கல்வி என்பது விண்ணில் நின்றும் தோன்றியதன்று ஏனைய மனித செயல்களிலும் சமுதாய அமைப்புக்களில் இருந்து வேறுபட்டு கல்வி வளர்ச்சியடைந்ததுமன்று. அது இயற்கையும் இணைந்து நிகழ்ந்த மனித இனத்தின் நுண்ணறிவு செயற்பாடுகளினூடாக தோற்றம் அளித்த ஓர் அமைப்பு .

மனித விழுமியங்கள் மேம்பாடடையும் விதத்தில் கல்வி அமைய வேண்டும் என்பது ஶ்ரீசத்தியசாயி அவர்கள் கூறுகின்றார்கள். கல்வி என்பது ஒருவரது நுண்மதி ஆற்றல் களையும் திறன்களையும் விருத்தி செய்வதோடு மட்டும் நின்று விடாது அவனது உலக நோக்கை விரிவடையச் செய்ய வேண்டும். சமூகத்திற்கும் பரந்த உலகத்திற்கும் அவரது பணிகள் பயன்படும் வண்ணம் கல்வி நடவடிக்கைகள் அமைதல் வேண்டும் . அறக் கல்வியும் தெய்வீகக் கல்வியும் ஒழுக்கமுள்ள வாழ்க்கையை நோக்கி ஒருவர் செல்வதற்குரிய பயிற்சிகளைத்தரும் கல்விக்கு விளக்கம் அளிக்கையில்

கல்வியானது ஆதிகாலம் தொட்டு இன்று வரை எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றது. கல் என்பதன் வினையடியாகப் பிறந்தது கல்வி என்பர் கல்வி எடு அல்லது தோண்டு என்ற பொருளைக் கொண்டு "கல்" எனும் சொல் ஒருவனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலை தோண்டி வெளிக் கொணர்வதே கல்வியின் இலக்காக அமைதல் வேண்டும். கல்வி மனிதனிடம் மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொணர்ந்து அவனது வாழ்க் கையை ஒளியேறச் செய்கின்றது.

கல்வியானது எல்லா வகையிலும் எமக்கு முக்கியத்துவமுடையதே இன்றும் சில வற்றினை நோக்கினால் இதனை இதனால் இதன் முடிக்கும் என்று ஆய்ந்து "அதனை அவன் கண்டுவிடல்" என்ற திருவள்ளுவன் குறட்பா கல்வியினால் பெற்ற அறிவு ஆய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாது விட்டால் அதனை அவன் கண்டு விட முடியாது அதற்கு கல்வியே உதவுகின்றது. கல்வி அந்த வகையில் முக்கியம் பெறுகின்றது. கல்வி ஆற்றலை வளர்ப்பது அறிவை வளர்ப்பது உணர்ச்சிகளை பயன்படுத்துவது மக்களை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது மனிதனின் சக நடத்தையை மாற்றியமைப்பது போன்றவற்றை வெளிக் கொணர்கின்றது.

எனவே கல்வியும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி நன்றாகவே தெரிந்து பயன்படுத்த வேண்டும் அப்போது தான் எமக்கு சிறப்பு எனவே சிறப்புற கல்வி கற்று சிறந்து ஓங்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி .தே. சகாதேவன்
ஆசிரியர்

# வாசிப்பு என்னும் சுவாசிப்பு

அந்த காலத்தில் குழந்தை அழுதால் தாலாட்டுப்பாடி குழந்தையின் அழுகையை நிறுத்துவார்கள். இந்த காலத்தில் ரிமோட்டை கையில் கொடுத்து விட்டால் குழந்தையின் அழுகை சுவிட்ச் போட்டாற் போல் நின்று விடுகின்றது. வாசிப்புத் தன்மை அருகி வருவதற்கு இது தான் ஆரம்ப காரணம். ஐந்து மாதக் குழந்தையை கையில் வைத்துக் கொண்டு நாம் தொலைக்காட்சி முன் அமர்ந்தால் அந்த பிஞ்சுக் குழந்தை கண்ணிமைக்காமல் தொலைக்காட்சியைப் பார்க்க ஆரம்பிக்கின்றது. குழந்தையின் வாசிப்புத்திறன் குறைவதற்கு அடிக்கல் நாட்டு விழா இங்கே தான் ஆரம்பம்.

வாசிப்புத்திறன் இருக்கும் குழந்தைக்கு பேச்சில் தெளிவும் ஞாபக சக்தியும் கருத்தாழமும் சொல்வதைக் கற்பூரமாக பற்றிக் கொள்ளும் திறமையும் பொது அறிவு நிரம்பப் பெற்றவர்களாக அமைகின்றனர். என்பது ஆய்வாளர்களின் கூற்று. பிற்காலத்தில் அறிவு செறிந்த மாணாக்களாக தெளிவான கருத்துடையவளாக வாழ்க்கை மேம்பட துணை நிற்கும்.

வாசிப்புத் தன்மை பெற்ற மாணவனுடைய செயல்களும் சிந்தனையும் ஞாபக சக்தியும் வாசிப்புத் திறன் இல்லாத மாணவனில் இருந்த வித்தியாசப்படும். வாசிப்புத்திறன் இல்லாத மாணவன் பாடசாலையில் மட்டுமன்றி சமூகத்திலும் சிறப்பு நிலை அடைவதென்பது மிகவும் கடினமே .வாசிப்பின் மூலமே மனிதன் சிறப்படைகின்றான்.இந்த வாசிக்கும் ஆர்வத்தை வளர்ப்பது ஒவ்வொரு பெற்றோர்களின் கைகளிலுமே தங்கியுள்ளது.ஐந்து மாதக் குழந்தை தொலைக்காட்சியை நோக்க ஆரம்பித்தால் அதனை நிறுத்தி விட்டு வர்ணப்படங்கள்,பூக்கள் நிறைந்த புத்தகத்தை விரித்துக்காட்டுங்கள் குழந்தை வளர வளர புத்தகங்களின் பக்கங்களைக் புரட்ட கற்றுக் கொடுங்கள் குழந்தை பேச ஆரம்பிக்கும் போது புத்தகங்களை காட்டி கற்றுக் கொடுத்தலை ஆரம்பியுங்கள். வாசிப்பின் ஆர்வம் தானாகவே ஆரம்பித்து விடும்.

குழந்தையின் பிறந்த நாளா? வீட்டில் விஷேசமா? பொம்மை வீடியோ கோக் செற் விளையாட்டு சாதனங்கள் என்று வாங்கி பரிசளிப்பதில் காட்டும் ஆர்வம் புத்தகம் வாங்கி பரிசளிப்பதில் இல்லை என்பது கவலை தரும் விடயமாகும்.

ஒரு புத்தகத்தை முழுமையாக படிக்கும் நேரத்தில் கணினியில் பதிவிறக்கம் செய்து முழுமையான ஒரு திரைப்படத்தினை பார்த்து விடுவது தான் இன்றைய காலத்தின் கோலமாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. ஒரு மாணவனை பரிபூரண மாணவனாக சிறப்பான மாணவனாக அறிவான மாணவனாக உருவாக்க அம் மாணவனின் வாசிப்புத் தன்னையினை அதிகரிக்க இணையத்தளங்கள் வழிகாட்ட வேண்டும்.

குடும்பத்தில் விஷேசமா உடனே ரெஸ்ரோரண்டுக்கு குடும்பத்துடன் சென்று கற்றை கற்றையாக பணத்தை கொடுத்து உண்டு மகிழ்கின்றோம். ஒரு முறை சற்று வித்தியாசமாக ஒரு புத்தகக் கடைக்கு அழைத்துச் செல்லுங்கள். வயிறு நிரம்புவதை விட மூளை நிரம்புவது நன்றல்லவா? டென்னிஸ் கிளப்பில் அங்கத்தவராக கிரிக்கெட் கிளப்பில் அங்கத்தவராக குழந்தைகள் சேர்ந்து விடும் ஆர்வம் ஏன் நூலகங்களில் சேர்ந்து விடுவதில் இல்லை? சிந்தியுங்கள்.

குழந்தைகள் இந்நாள் விதைகள் .பின்னாள் விருட்சங்கள் மரச்சட்டங்களாகவும் அடுப்பெரிக்க உதவும் விறகுக் கட்டைகளாகவும் ஆகாமல் நல் விருட்சங்களாக நிழல் தந்து உதவும் விருட்சமாகவும் காற்றினை சுத்தப்படும் ஊக்கிகளாக சமூகத்திற்கு நல்ல பயன் தரக் கூடிய விருட்சமாகவும் ஆற்றல் பெற வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து வாசிப்புத் திறனை சிறப்புடன் வளர்ந்து வாழ்க்கை எனும் இனிய பயணத்தை பயன் உள்ள வகையில் கழிப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. அ. மேரி ஷாலினி
ஆசிரியர்

# மரம் வளர்ப்போம்
# வரட்சியை விரட்டுவோம்

வானத்திலிருந்து பூமியில் விழும்ஒவ்வொரு மழைத்துளியும் பெறுமதியானதாக வேண்டுமென்று முன்னோர்கள் பல குளங்களைக் கட்டியுள்ளார்கள். புராதன கால மன்னர்களும் இதற்கு சிறந்ததோர் முன்னுதாரணமாய் இருந்தனர் என்பதை வரலாற்றில் காணமுடிகிறது. எனினும் உலகளாவிய ரீதியில் வரட்சியின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் ஆட்சியாளர்கள் தொடக்கம் சாதாரண மக்கள் வரை இது குறித்து அக்கறையுடன் செயற்படுகிறார்கள் என்பது பெரும் பெரும் உறுத்தலாகவே இருந்து வருகிறது.

பூமியின் பெரும்பகுதி கடலால் சூழப்பட்டிருந்தாலும் இன்று மனிதன் முகங்கொடுக்கும் பாரிய பிரச்சனையாக வரட்சி காணப்படுகின்றது. வரட்சி என்பது இன்று உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்ற சூழலியற் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.நீண்ட காலத்துக்கு மழைவீழ்ச்சி கிடைக்காமையினால் ஏற்படும் நிலைமையே வரட்சி எனக் கூறமுடியும். எனினும் வரட்சி பற்றிய திட்டமான வரையறை காலத்துக்கு காலம், நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடுகின்றது. உதாரணமாக அமெரிக்காவில் இரு தினங்களுக்குள் 2.5மில்லி மீற்றருக்கு குறைவான மழைவீழ்ச்சி கிடைத்தால் அதை வரட்சி என்பார்கள். எனினும் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் பருவகால மழைவீழ்ச்சி கிடைக்கவில்லை அல்லது குறைவடைந்தால் வரட்சி என்போம். என்னும் இலங்கையில் பருவகால மழை வீழ்ச்சியே கேள்விக்குறியாக உள்ளது. குறிப்பாக மேற்காவுகை மழை அல்லது இடி முழக்க மழை என அழைக்கப்படும் சித்திரைக் குழப்ப மழையைக் காண்பது அரிதாக உள்ளது.

குறைவான மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறும் போது வானிலை சார் வரட்சி ஏற்படு கின்றது. மண்ணில் உள்ள மண்ணீரானது குறைவடைகின்ற போது விவசாயப் பாதிப்பு ஏற்படும். இதனை விவசாய வரட்சி என அழைப்பார்கள். ஆறுகள்,குளங்கள் ஆகியன வற்றுவதை நீரியல் வரட்சி என்பதுடன், வானிலை வரட்சி, விவசாய வரட்சி, நீரியல் வரட்சி இவை மூன்றும் சேர்ந்தது தான் சமூகப்பொருளாதார வரட்சியாகப் பிரதிபலிக்கின்றது. குறைவான மழைவீழ்ச்சி, காடழிப்பு, பூகோள வெப்பநிலை அதிகரிப்பு, முறையற்ற நிலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பாடு, அதிகரித்த கட்டட நிர்மானம், நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு குறைவடைதல் உள்ளிட்ட பல காரணங்களால் வரட்சி ஏற்படுகின்றது. விவசாயப் பாதிப்பால் பசி, பட்டினி, காட்டுத்தீ, இடப்பெயர்வு, கால்நடைகள் அழிவடைதல், தூசிப்புயல் உருவாகுதல், மின்சார உற்பத்தி தடைப்படுதல், கைத்தொழில் பாதிப்பு, நன்னீர் மீன்பிடிப் பாதிப்பு என வரட்சியின் தாக்கங்களை பட்டியற்படுத்திக் கொண்டே போகலாம்.

இவ்வாறான நிலைமையில் வரட்சி முக்கியத்துவம் பற்றி பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும் அவதானம் செலுத்த வேண்டும். அப்போது தான் எதிர் காலத்தில் இப்பூமியினை உயிரினங்களின் நிலைத்திருப்பிற்கு ஏற்றதாக விட்டுச் செல்லும் பாரிய பொறுப்பினை நிறைவேற்ற முடியும். இதற்கான முன் அனர்த்த முகாமைத்துவமாக நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், காடுகளை அழியாது பாதுகாத்தல், நீர் நிலைகளை மாசடையாது பாதுகாத்தல், மழை நீரைச் சேமித்தல், காடுகள் மீள் உருவாக்கம், வரட்சியைத் தாங்கிக் கொள்ளக் கூடிய பயிர்களை நடுதல் உள்ளிட்ட விடயங்களில் அவதானம் செலுத்த வேண்டும்.

இவை எல்லாவற்றையும் தாண்டி எல்லோராலும் இலகுவில் செய்யக் கூடிய விடயமாக இருப்பது மரம் நடுதல் ஆகும். மரம் நடுதல் போதாது நட்ட மரங்களைப் பேணி வளர்ப்போம். வரட்சியினை விரட்டுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி அ. அரிச்சந்திரன் B.Ed
ஆரம்பக்கல்வி

# வாசிப்பும் இன்றைய மாணவர் சமூகம்

"வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்" என்பது மூத்தோர்களின் வாக்காகும். இன்றைய நவீன யுகத்தில் மாணவர் சமூகத்தில் வாசிக்கும் திறன் மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

கல்விக் கரைதனில் கற்பவர் நாட் சில மெல்ல நினைவிற் பிணி பல என்கின்றது நாலடியார். சில வாழ்நாள் பல பிணிச் சிற்றறிவுடைய மாந்தர் கரைதுறையற்ற கல்வியை முற்றறக் கற்றல் முடியாதென்பது இதன் பொருள் ஆகும். எனினும் பரந்துபட்ட அக்கல்வியில் சிறிதளவையேனும் பிழையறக் கற்று சிந்தையில் இருத்தி அறிவுச் செல்வத்தைச் சிரத்தையுடன் தேடும் போதே மனித வாழ்வானது சிறப்படைகின்றது. மனிதன் மனிதனா கின்றான். இவ்வாண்மையைத்தான் பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர் மிக அருமையாக தமது திருக்குறளிலே

"விலங்கொடு மக்கள் அனையர் – இலங்குநூல்
கற்றாரோடு ஏனையர்"

என சிறந்த உவமை மூலம் உணர்த்துகின்றார். முழுமையான கல்வி அறிவுடையவரே மனிதர் என்றும் அவ்வறிவு அற்றோர் விலங்குகளுக்கு ஒப்பானவர்கள் என்றும் குறிப்பிடு கின்றார். மனிதனை மனிதனாக மாற்றும் சிறப்புடைய கல்வியைப் பெறுவதற்கு காட்சி, அனுபவம், கேள்வி முதலிய பல வழிகள் உள்ளபோதும் அவற்றுள் தலை சிறந்து விளங்கு வது நூல்களே எனக் கூறுவது மிகையாகாது. அந்த நூல்களையும் பொருளுணர்ந்து வாசிக்கும் பழக்கத்தாலேயே அது பயனுள்ளதாக கொள்ளப்படுகின்றது. எனவே வாசிக்கும் பழக்கமே கல்வியின் ஆணிவேராக அடித்தளமாக அமைகிறது. நாம் அறிந்து கொள்ளாத பல விடயங்களை நூல்களை வாசிப்பதன் மூலமே அறிகின்றோம் அதுவே எமக்கு அடித்தள மாக அமைகின்றது. ஓர் கற்றறிந்த சபையிலே கல்வியை ஆய்ந்து கற்ற ஒருவனாலேயே இருந்து கொள்ள முடியும். எந்த விடயத்தையும் விளங்கிக் கொள்ளவும் முடியும் எனவே கல்வியின் முக்கியத்துவத்தை வாசிப்பின் மூலமே ஒவ்வொரு மனிதனும் அடைந்து கொள்ள முடியும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது உளவியல் சார்ந்த ஒரு முதுமொழி யென்றே கூறலாம். மன விகாரங்களும், மனவிகாரங்களுமற்ற இளமைப் பருவத்தில் கற்கும் கல்வியானது சிந்தாது. சிதறாதது. சிதையாது. மனதிலே நன்றாகப் பதியும். இதனால்தான் கல்வியலாளர்கள் புதிய கல்விச் சீர்திருத்தத்திலே ஆரம்பக் கல்வியிலே முதன்மை நிலைகளை மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியனானவர் மட்டுமே கற்பிக்கும்படி குறிப்பிட்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச் சிறுவயதிலே எழுத்தையும் வாசிப்பு பழக்கத்தையும் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த சாதனையாளர்களாக மாறுவார்கள் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை. கல்விக்கு அடித்தளமாக அமையும் வாசிப்புப் பழக்கம் இளமையிலே அரும்பி வளர்ந்து முதிர்ச்சி பெறுதல் வேண்டும் அதனாலேயே புதிய கல்விக் கொள்கையில் வாசித்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் மொழியாற்றல் முன்னேற்றம் காண்பதற்கு முதன்மை நிலையாகவும் வாசிப்பு அமைகிறது. நூல்களை பிழையற வாசித்தல், கருத்தை விளங்கிக் கொள்ளல் விளங்கிய கருத்தை வெளிப்படுத்தல் ஆகிய திறன்கள் மொழித்தேர்ச்சியில் அடங்குகின்றது. மாணவர்களிலே சிலர் பிழையற வாசிப்பர் ஆனால் கருத்தை விளங்கிக் கொள்ளமாட்டார். அவர்கள் "சுவை அறியாநாக்கினை உடையவர்கள்" போன்றவர்கள். சிலர் வாசித்து விளங்கிக் கொள்வர். விளங்கிக் கொண்டதை வெளிப்படுத்த அறியார் அவர்கள் "கனவு கண்ட ஊமையைப் போன்றவர்கள்" எனவே வாசித்து விளங்கி வெளிப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றல் ஆகும். முறையான மொழியாற்றல் கைவரப் பெற்ற மாணவர் களின் பேச்சிலே தெளிவும் கருத்தாழமும் காணப்படும். உள்ளங்கை நெல்லிக் கனி போல எந்தக் கருத்தையும் தெளிவாக பிறர் விளங்கிக் கொள்ளுமாறு கூறமுடியும். இவ்வாறான வரது எழுத்து நடை எளிமையும், இனிமையும், தெளிவும், கருத்தாழமும் வழுவின்மையும் கொண்டதாக அமையும். வாசிப்புப் பழக்கம் உள்ள மாணவரின் கட்டுரையையும் வாசிப்புப் பழக்கம் அற்ற ஒருவரின் கட்டுரையையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் வாசிப்பின் முக்கியத்து வத்தை புரிந்து கொள்ள முடியும் எனவே இன்றைய மாணவ சமூகமும் வாசிப்பின் முக்கியத் துவத்தை உணர்ந்து கற்க வேண்டியது அவசியமானது ஆகும்.

அன்றியும் செம்மையான வாசிப்புத்திறன் அற்ற மாணவன் பயிலும் பாடசாலைகளிலும் சிறப்பு நிலையை அடைய முடியாது திண்டாடுகின்றான். கணிதம், விஞ்ஞானம் மொழி முதலிய பாடங்களைக் கற்கும் மாணவன் ஒருவன் விவேகியாக இருந்தாலும் அவனிடம் சீரிய வாசிப்புத்திறன் இல்லையேல் அவன் அப்பாட நூல்களையோ அவை சம்பந்தமான வினாக்களையோ விரைந்து வாசித்து விளங்கும் ஆற்றல் அற்றவனாக தனது பூரண ஆற்றலை வெளிப்படுத்த முடியாதவனாகின்றான். அவன் தனது விவேகத்தால் முழுப் பயன் பெற முடியவில்லை. "காட்டில் எறித்த நிலாவைப் போல" விவேகம் வீணாகிறது. வாசிப்புத் திறன் உள்ள மாணவன் விவேகம் குறைந்தவனாயினும் வினாக்களை விரைவாக வாசித்து விளங்கித் தெளிவுறவிடை எழுதி சிறப்புத் தேர்ச்சி பெறுகின்றான். எனவே பள்ளியில் பயிலும் பாடங்களிலே மாணவன் திறமை காட்டுவதற்கு வாசிப்பு என்பது மிகவும் இன்றியமை யாதாகும்.

பாடசாலையில் பயிலும் பாடங்களோடு மாத்திரம் மாணவரின் கல்வி முற்றுப் பெற்று விடுவதில்லை வரையறை அற்ற கல்வி. கல்விக்கு எல்லையே கிடையாது கல்வி கடலைப் போன்றது அக் கடலில் நிற்கும் சிறு படகைப் போன்றதுதான் பாடசாலைக் கல்வி ஆகும். இக் கல்வியில் ஒரு மாணவன் அறிவுளம் பெருகிவிடும் என்று எண்ணுவது தவறாகும் . பாடசாலை கல்வியின் பின் பற்பல நல்ல நூல்களை வாசித்துக் கொள்ள வேண்டும். "கண்டது கற்றவன் பண்டிதன் ஆவான்" என்பது ஒரு பழமொழி நல்லவை, தீயவை என்று ஒதுக்காது கற்க வேண்டும். அதில் அன்னப்பறவை பாலையும் நீரையும் கலந்து வைத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலை மட்டும் குடிப்பது போல நல்ல விடயங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். தமது வாழ்நாளில் அவற்றை பயன்படுத்தி நல்வாழ்வு வாழ வேண்டும்.

வாசிப்புத்திறனில் தேர்ச்சி பெற்ற மாணவனின் உள்ளம் தணியாத பசி கொண்டதாய் இருக்கும் எத்தனை எத்தனை நூல்களை வாசித்தாலும் அவனது பசி அடங்காது மணிமேகலை எனும் காப்பியத்தில் "யானைத் தீப்பசி" என்னும் நோய் கொண்ட காய சண்டிகை வருகிறாள். அவளுக்கு எந்த நேரத்திலும் எவ்வளவு உணவு கொடுத்தாலும் உண்பாள். ஆனால் அவளின் பசி அடங்குவது கிடையாது. அதேபோல ஒவ்வொரு மாணவனுக்கும் காயசண்டிகை போல வாசிப்பில் யானைத் தீப்பசி தோன்ற வேண்டும். அது தோன்றி விட்டாலே அவனுயர்வுக்கு வித்திடவும் வேண்டுமா? கிணற்றுத் தவளை நிலை போய் உலகெங்கும் ஓய்வின்றி உலாவி வரும் தெருப்பறவையாகி விடுவான். ஆழ்ந்த கற்றல் அறிவுடைய மாணவன் அறிவு மாத்திரமன்றி உள்ளத்தாலும் உயர்ந்தவனாவான் வாழ்வினையும் வாழ்வின் விழுமியங்களையும் புலப்படுத்தும் இலக்கியங்கள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றை வாசிப்பதால் வாழ்வில் தான் கண்டறியாத புதிய புதிய கதை மாந்தரோடு பழகுகின்றான். அவர்களின் குணாதிசயங்களை உணருகின்றான். வாழ்வில் பல கோணங்களையும் காணுகின்றான். பல பல அனுபவகளைப் பெறுகின்றான். நல்லன, தீயன என்பவற்றை வேறுபடுத்தி அறிகின்றான். இதனால் அவனத உள்ளமானது விரிவடைகிறது. பண்படைகிறது எதிர்கால வாழ்வுக்குத் தன்னை ஆயத்தஞ் செய்து கொள்ளும் உன்னத நிலை உண்டாகிறது.

இவ்வாறான உன்னத வாசிப்பு திறனானது இன்றைய மாணவர் சமூகத்தில் தளர்வ டைந்து வருவதைக் கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது. தொலைபேசிப் பாவனை தொலைக்காட்சிகளில் தொடர் நாடகங்களில் மூழ்கி இருப்பதாலும் தேவையானவற்றை கணினி மூலம் பதிவிறக்கம் செய்தல் போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் புத்தகங் களை வாசிப்பது பத்திரிகைகளை வாசிப்பது போன்ற செயற்பாடுகள் குறைவடைந்தே வருகின்றது. இன்று மாணவர் சமூகத்திலும் சரி ஏனையவர்களிடத்திலும் சரி நேரத்தை ஒதுக்கி வாசிப்பில் ஈடுபடுவது என்பது மிகவும் அருகிவிட்டது. இந்நிலை தொடர்ந்தால் எமது வரலாற்றையே அறிய முடியாத மாணவ சமூகமாக எமது இளம் சமூகம் மாறிவிடும். எனவே இவற்றில் இருந்து எமது மாணவர் சமூகத்தை விடுவித்து வாசிப்பில் வல்லவர்களாக ஆக்குவதோடு வாசிப்பில் நாட்டம் கொண்டவர்களாக ஆக்குவது கற்பிக்கும் ஆசிரியர் சமூகத்தின் கடமையாகும்ஆரம்பக்கல்வி தொடக்கம் அவர்கள் ஆர்வம் கொண்டவர்களாக உருவாக்க வேண்டியது ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும். எனவே பாடசாலையே மாணவர் சமூகத்தை வாசிப்பில் விருப்பங் கொண்ட மாணவர்களை உருவாக்க வேண்டும்

எனவே மாணவர்களே சமுதாயத்தின் முன்னோடிகள் புத்தாக்க வாதிகள் எதிர்கால சிந்தனையாளர்கள் நாட்டின் எதிர்கால தலைவர்களும் அவர்களே. இவ்வாறான இச் சமூகத்தினை வாசிப்புத் திறனை விருத்தி செய்ய வேண்டியது பொறுப்புள்ள ஆசிரியர்கள் பெற்றோர்களின் கடமை என்பதில் ஐயமில்லை

**உசாத்துணை**

திருக்குறள் – கீர்த்தி எம். ஏ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. குயின்ரஸ்
ஆசிரியர்

# வாழ்வில் ஒரு வசந்த காலம்

பெரிய பிள்ளையாதல், பருவமடைதல், பூப்படைதல், வயதுக்கு வருதல் போன்ற பதங்கள் யாவும் பெண் பிள்ளைகளுக்கு முதற் தடவையாக மாதவிடாய் ஏற்படுவதையே குறிக்கிறது.

பூப்பு நிகழும் பருவம் வாழ்க்கையின் வந்த காலம் ஆகும். பெண் பிள்ளைகள் இப்பருவத்தில் துரிதமாக வளர்ச்சியடைவார்கள். உயரமும், உடற்பருமனும் அதிகரிக்கும், தோல் பிரகாசமடையும், பெரும்பாலானோரின் முகத்தில் பருக்கள் ஏற்படலாம். பாலுறுப்புப் பிரதேசத்தில், கமக்கட்டிலும் உரோமங்கள் வளரும். மார்பகங்கள் பெருக்கும், இடுப்புப் பகுதி விரிவடையும் இவை பெண்களில் ஏற்படும் உடலியல் மாற்றங்கள் ஆகும்.

மனது விருத்தியடைதல், நடத்தைகளில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்படல், தமது உடல் அமைப்பு பற்றி திருப்தி கொள்ளுதல், திருப்தி கொள்ளாது விடல், தடங்கல்களுக்கு முகம் கொடுக்கும் மனத்திடம், குழுவாகச் சேர்தல், மற்றவர்களை நல்வழிப்படுத்தும் ஆற்றல், சுதந்திரத்தை எதிர்பார்த்தல் பல்வேறு திறமைகள், ஆற்றல்களை வெளிப்படுத்தும் திறன் போன்றவை உள ரீதியான மாற்றங்கள் ஆகும்.

எல்லாப் பிள்ளைகளும் ஒரே வயதில் பூப்படைவதில்லை. எமது நாட்டில் 13 – 14 வயதுப் பருவத்தில் பூப்படைகின்றனர் எனினும் சில பெண்கள் முன்போ, பின்போ பூப்படையலாம். போசணை நிலை, பரம்பரை மற்றும் வாழும் சூழல் காரணங்களாக இருக்கலாம். எவ்வாறாயினும் ஒரு பெண் 17 வயதிற்குள் பூப்படைதல் சிறந்தது ஆகும். இன்றேல் தகுதியான வைத்தியரின் உதவியினை நாடுதல் பொருத்தமானது ஆகும்.

இன்றைய உணவுப் பழக்கவழக்கங்கள் பயன்படுத்தப்படும் மருந்து வகைகள் அவற்றில் கலந்து இருக்கும் இரசாயனத் தன்மைகள், நாளாந்த நடவடிக்கைகள் காரணமாக மாதவிடாய் தொடர்பான சில பிரச்சினைகளுக்கு உள்ளாகிறார்கள். சில மூடநம்பிக்கைகளையும் பின்பற்றுகிறார்கள்.

மாதவிடாய் தொடர்பான பிரச்சினைகள் எனும் போது மாதவிடாய் சக்கரத்திற்கு புறம்பாக சில வேளைகளில் 4 – 5 நாட்கள் தாமதித்தோ அல்லது முன்கூட்டியே ஏற்படுகிறது. சில மாதங்களில் இரண்டு தடவை ஏற்படுகிறது. இவை பெண் பிள்ளைகளின் சாதாரண முறைப்பாடுகள் சில ஆகும். எனவே மாதவிடாய் ஏற்படும் முதல் நாளை குறித்து வைத்துக் கொண்டு மாதவிடாய் வட்டத்தினை, செலவாகும் நாட்களின் எண்ணிக்கையினை தெளிவாக அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• பூப்படைந்து முதல் 2, 3 வருடங்களுக்கு மாதவிடாய் சீராக நிகழ்வதில்லை.

• சில வேளைகளில் பூப்படைந்து சிலமாதம் கழியும் வரை மாதவிடாய் ஏற்படாது.

• மாதவிடாய் சீராக இடம் பெறத் தொடங்கிய பின் ஓரிரு நாட்கள் முன்போ, பின்னோ நிகழலாம்.

• அதிக மனவேதனை, காலநிலை மாற்றங்கள், மன அழுத்தம், பதற்றம் போன்றவற்றாலும் மாதவிடாய் வட்டத்தில் மாற்றங்கள் ஏற்படக் கூடும்.

எனவே இவ்வாறான நடைமுறைப் பிரச்சினைகளை உணர்ந்து உரிய வகையில் பின்பற்றலாம்.

அடுத்து மாதவிடாய் தொடர்பான மூடநம்பிக்கைகளையும் நாம் பின்பற்றுகிறோம்.

• மாதவிடாய் காலத்தில் குளித்தல்
• உடற்பயிற்சிகளில் ஈடுபடுதல்
• ஆலயங்களுக்கு செல்லுதல்
• நல்ல காரியங்களில் ஈடுபடுதல்
• சில உணவுப் பொருட்களை தவிர்த்தல்
• அதிக நீர் அருந்துவதை தவிர்த்தல்
• இரவுப் பயணங்கள் செய்தால் தீய சக்திகளின் தொற்றுதல்

இவ்வாறான மூடநம்பிக்கைகள் பிழையானவை. எனவே உடலுக்கு அதிக புரதம், இரும்புச் சத்து ஆகிய சக்தி தரும் உணவுகளை உண்ண வேண்டும். சுய சுத்தமாக இருத்தல் வேண்டும். மனம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். தேவையான உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். எனவேதான் உடல், உளம் ஆரோக்கியமாக இருக்கும்.

எனவே மாதவிடாய் என்பது உடலில் நிகழும் ஒரு பொதுவான நிகழ்வாகும் என்பதை உணர்ந்து அன்றாட கருமங்களிலும், விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு மாதவிடாய் காரணமாக ஏற்படும் அசௌகரியங்களை மறக்கலாம் நலமாக வாழலாம்.

கட்டிளமை பருவத்தில் பெண்கள் தங்கள் எதிர்பார்ப்புக்களையும் சமூகத்தின் பாற்பட்ட பொறுப்புக்களையும் எண்ணிப் பார்க்க வேண்டும். கட்டுப்பாடின்றி கடந்து கொள்வதன் ஊடாக ஏற்படக்கூடிய விளைவுகளையும், பின்னடைவுகளையும் சிந்திக்க வேண்டும். உணர்வுகளுக்குஅடிமையாகாது. புத்திசாலித்தனமான செயற்படுவதால் பெண்கள் ஒவ்வொருவரும் தம் வாழ்வை வசந்த காலமாக மாற்றலாம்.

**உசாத்துணை:**

கட்டிளம் பருவம் வெளியீடு

9, 10, 11 சுகாதாரமன; உடற்கல்விப் புத்தகம், 10, 11 மனைவியல் புத்தகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செ. பவானந்த ஙூபன்.
பாடசாலைப் பணியாளர்.

## முக நூலில் இருந்து சுட்ட அழகான பதிவு

மறைந்த அமெரிக்க குத்துச் சண்டை வீரர் முகமது அலி மகள் தன் தந்தையைப் பார்ப்பதற்கு வீட்டிற்கு சென்றபோது மகளின் ஆடை சிறிது கவர்ச்சியாக இருந்துள்ளது. அதற்காக தன் மகளுக்கு அறிவுரை கூறியுள்ளார் என்பதை அவரின் மகள் வெளியிட்டுள்ளார்.

நானும் என் தங்கை லைலாவும் தந்தையின் அறைக்குச் சென்றோம் வழக்கம் போல் எங்களை பயமுறுத்துவது போல் நின்றார். நாங்கள் உள்ளே சென்றவுடன் எங்களை ஆரத்தழுவி முத்தமிட்ட பின் அவர் எங்களை உற்றுப்பார்த்து கானா இந்த உலகில் மதிப்பு மிக்கதாக இறைவன் படைத்த அனைத்தும் மறைக்கப்பட்டவையாகவும் இன்னும் பெறுவதற்கு மிகவும் கடினமாகவும் தான் உள்ளது. வைரங்களை எங்கு எடுப்பார் பூமியில் ஆழமான பகுதியில் மறைக்கப்பட்டதாகவும் தான் வைரங்கள் உள்ளன. முத்துக்கள் எங்கு எடுப்பாய்? கடலில் ஆழமான பகுதியில் அழகான சிற்பியில் மறைக்கப்பட்டதாகவும் பாதுகாக்கப்பட்டதாகவும் தான் முத்துக்கள் உள்ளன, தங்கத்தை எங்கு எடுப்பாய்? சுரங்கத்தின் உள்ளே அடுக்கடுக்கான பாதைக்குள் மறைக்கப்பட்ட நிலையில், அதை எடுப்பதற்கு நீ மிகக் கடினமாக உழைக்க வேண்டும். என்னை உற்று நோக்கியவராக உன்னுடைய உடல் புனிதமானது வைரங்கள், முத்துக்கள், தங்கத்தை விட நீ புனிதமானவள் உன் உடலை முறையாக மறைத்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையும் என் நினைவுகளும்...

Anthonithas maria Jansana
தரம் 10
மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

நான் இப்ப 10ம் ஆண்டில் மன்னார் St. Xever girls college ல கல்வி கற்கிறன். நான் இந்த வருடம் தான் இங்கு வந்து சேர்ந்தன். நான் ஒன்பதாம் ஆண்டு வரை கல்வி கற்ற பாடசாலை கிளி / வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை. நான் இந்தப் பாடசாலையில் படிக்கும் போது பல மறக்க முடியாத நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றன. நான் முதலாம் ஆண்டில் இங்கு வந்து சேர்ந்தேன். அந்த நேரம் எங்கட வகுப்பு ஆசிரியர் Ms. Jasho. அவவ எனக்கு றொம்ப பிடிக்கும். ஒரு நல்ல Teacher என்னோட மூன்றாம் தரம் வரைக்கும் எங்கட பாடசாலை அதிபர் Sir. பிரபாகரன். எனக்கு இவரைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஏன்னா நான் இவரோட கதைத்ததில்லை. இவரை பார்த்தாலே எனக்கு சரியான பயம். நான் 3ம் ஆண்டு வரைக்கும் படிக்க மாட்டன். படிப்பே என்ர மண்டையில ஏறாது. நான் 3ம் ஆண்டு 3ம் தவணை படிக்கிறப்ப எங்களுக்கு அதிபராக மரியராசா சேர் வந்தார். இவரையும் பரார்த்தால் பயமாகத்தான் இருக்கும். இவர் காலை ஒன்று கூடல்ல வந்து நிறைய அறிவுரை சொல்லுவார். அதில "தலை குனிந்து படித்தால் தலை நிமிர்ந்து வாழலாம்" என்று சொல்லுவார். அப்ப எனக்கு தோன்றியது நானும் நல்லாப் படிக்கனும். 3ம் ஆண்டு 3ம் தவணையில் படிக்க ஆரம்பித்ததன். 3ம் தவணை நான் மூன்றாம் பிள்ளையாக வந்தேன். அதுவரைக்கும் நான் 5ம் பிள்ளை கூட வந்ததில்லை. அந்த நேரம் மேலே ஏறி றிப்போர்ட் வாங்கேக்க சரியான சந்தோசமாக இருந்தது. நான் தரம்4 படிக்கும் போது தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை கம்சி அக்காட வகுப்பு பிள்ளைகளுக்கு நடந்தது. அதில றொபட்சனா அக்கா பாஸ் பண்ணினவா. அவவா எல்லாரும் பாராட்டினாங்க. அப்ப எனக்கும் புலமைப்பரிசில் பாஸ் பண்ணனும் ஆசை வந்தது. நான் 4ம் தரத்தில் நல்லாப்படிப்பன். எனக்கு நல்லா படிக்கனும் ஆர்வத்தை தூண்டி விட்டது எங்க School அதிபர்தான். 4ம் ஆண்டுல 3 தவணையும் நான் முதலாம் பிள்ளையாக வந்தேன். 4ம் ஆண்டில எங்களுடைய வகுப்பாசிரிரியர் மாலா டீச்சர். அவங்க எங்கள அன்போடும் மிகவும் கண்டிப்புடனும் படிச்சுத்தந்தாங்க. 5ம் ஆண்டு வந்தப்ப எனக்கு சரியான பயம் வர ஆரம்பிச்சிட்டு. பயத்தோடுதான் Schoolக்கு போனன். எங்கட வகுப்ப 2 வகுப்பாக பிரிச்சாங்க. அதில நான் மாலா ரீச்சர்ற வகுப்பு. அவங்கன்டா எனக்கு சரியான பயம். ஆனாலும் அவங்க நல்லா படிப்பிப்பாங்க. 5ம் ஆண்டு எனக்கு சரியாகப் பிடிக்கும். ஏன்னா புலமைப்பரிசில் நெருங்கினதால 24 மணித்தியாலமும் வகுப்பு என்று சொல்லலாம். காலையில 6.00 க்கு அதிபர் English Class எடுப்பேர். பிந்தி வந்தா திரும்ப வீட்ட அனுப்பி விட்டு விடுவார். அதால பயம் நேரத்துக்கே சாப்பிடாம கொள்ளாம போயிடுவன். அம்மா சாப்பாடு கொண்டு வந்து தருவா. அப்பதான் நினைச்சன் அம்மா படுற கஷ்ரத்துக்கு நான் நல்லாப்படிச்சு பாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணனும். வீட்ட அம்மா காலையில 4.00 மணிக்கு எழும்பி விடுவா நல்லா படிப்பன். புலமைப் பரீட்சைக்கு 3 மாதமாகும் போது எங்களுக்கு ஒரே நிறோயன் சேர், மாலா டீச்சர், றொக்சி டீச்சர், அதிபர் என எல்லாரும் ஒரே Class எடுப்பாங்க. எனக்கு நித்திரை தான் வரும். றொக்சி ரீச்சர் நல்லாப் படிச்சுத் தந்தா. புலமைப் பரிசில் நாளைக்கெண்டா முதல்நாள் எனக்கு காய்ச்சல் ஆனா நான் யாருக்கிட்டையுமே சொல்லல. சரியான பயமா வேற இருந்தது. எனக்கு புனித அந்தோனியார சரியாப் பிடிக்கும். பக்தி கூட அவர்ல எனக்கு. இரவு அம்மா நேரத்துக்கே படுக்க சொன்னா. காலையில ஆசிர்வதிச்சாப் பேந்து Exam எழுதப் போனோம். ஒரு மாதிரி எழுதிப்போட்டு வந்திட்டன். புலமைப்பரிசில் பெறுபேறுகள் வெளிவந்தன. நான் 158 புள்ளிகளோட பாஸாயிட்டன். எனக்கு சந்தோசம். எங்க Schoolல பாராட்டு விழா வச்சாங்க. நான் 6ம் ஆண்டு படிக்கிறப்ப Schoolக்கு றஜீவன் சேர் வந்தார். அவர் Science சேர். 6ம் ஆண்டில தான் friendship என்டாலே என்னன்டு தெரியும். Schoolல படிக்கிறப்ப நிறைய friends கிடைச்சாங்க. அவங்க எல்லாரையும் இப்ப நான் உண்மையிலேயே Miss பன்றன். 7ம் ஆண்டில எனக்கு அங்க தமிழ் பாடம் படிக்க விருப்பமில்ல. காரணம் நல்ல சேர் இல்ல. ஆனா நான் 8ம் ஆண்டு படிக்கிறப்ப ஜெசிந்தன் சேர் வந்தார். அவர "தமிழ் வித்துவான்" என்று சொல்லலாம் போல. அவர் நல்லா தமிழ் படிப்பிப்பார். எனக்கு Geography பாடம் 98% சரியாப் புடிக்கும். எனக்கு ஜொய்சி ரீச்சரெண்டா சரியான பயம். என்ன டவுட் வந்தாலும் அவகிட்ட கேக்கமாட்டன். இருந்தாலும் அவ நல்ல விளக்கமாக எல்லாத்தையும் சொல்லித்தருவா. அவதான். ஒழுக்கத்திற்கு மெய்ன் (main)ஆள். அவகிட்ட இருந்துதான் நல்ல ஒழுக்கத்தை கற்றுக் கொண்டேன். நான் தரம் 8ம் ஆண்டு படிக்கிறப்ப பட்டிமன்றம் வச்சது. அதில தரம் 9 மாணவர்மூவரும், நானும், றெக்சினாவும், பிரகாசும் பங்குபற்றினோம். அந்த பட்டிமன்றம் "ஆசிரியர்கள் மாணவர்களை தண்டிப்பது சரியா? தவறா? "எனும் தலைப்பில் நான் தவறு எனும் தரப்பில் வாதாடினேன். அதில நாங்கதான் வெற்றி பெற்றோம். குயின்ரஸ் சேரிட்ட நான் சும்மா சொன்னன் எங்கட உழைப்பாலதான் வெற்றி பெற்றோம் என்று. ஆனா அது உண்மையில்ல சேர் நீங்க இத வாசிப்பீங்களோ. தெரியல சேர். நாங்க வெற்றி பெற்றதுக்கான பாராட்டெல்லாம் உங்களத்தான் வந்து சேர்ந்திருக்கணும். ஏன்னா அந்த வெற்றிக்கே காரணம் நீங்கதான் நான் அன்றைக்கு அப்பிடி சொன்னத மன்னிச்சிருங்க சேர் I am very sorry sir. நான் நிறைய குழப்படி செய்வன். அங்க நான் தரம் 9 படிச்சப்ப எங்க Schoolல மொத்தம் 26 Teachers இருந்தாங்க. எனக்கு அவங்க நல்லபடியா கல்வியை ஊட்டினதாலதான் என்னால இப்பவும் நல்லா படிக்க முடியிது. நான் இப்பிடி நல்லாப் படிக்கிறத்துக்கு நீங்கதான் காரணம். நான் இன்றைக்கு இவ்வளவு பெரிய Schoolல 5ம் பிள்ளை வருவதற்கு முழுமுழுக் காரணமே எனக்கு கற்பித்த ஆசிரியர்கள் தான். எனக்கு, றஜீவன் சேர் மேல கூட மரியாதை வச்சிருக்கன். இப்பவும் அவர எனக்கு றொம்ப புடிக்கும். எனக்கு நிறைய அறிவுரை சொல்லுவார். மொத்தத்தில் என்னை இப்பிடி ஒரு மனிதனாக வாழ பழக்கித் தந்ததே என்னோட Schoolதான். எனக்கு என் Schoolல விட்டு இங்க வாறதில அவளவு இஸ்ரம் இல்ல. ஆனாலும் வந்திட்டன். நான் என் School, Teachers, friend எல்லாரையுமே றொம்பவும் றொம்பவும் miss பண்றன். நான் என் Schoolல உண்மையிலே இப்பவும் நேசிக்கிறேன். நான் படிச்ச என்னோட நூற்றாண்டு விழாவை என்னால காண முடியாட்டிலும் என் மனசால அதைக் கண்டு கழிப்பேன். எப்பொழுதும் இறைவனின் ஆசி எனது பாடசாலை மேலும், ஆசிரியர்கள் மேலும் நண்பர்கள், ஏனைய மாணவர்கள் மீதும் இருக்க நான் தினமும் பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் விழுப்பம் தரும்

பே. கலிஸ்ரஸ் நிருசன்
சிரேஷ்ட மாணவ தலைவர் - 2019

"ஒழுக்கம் விழுப்பம் தருதலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனது வாழ்வின் உயர்வை அவனது வாழ்வின் வெற்றி தோல்வியை ஒழுக்கமே நிர்ணயம் செய்கிறது. சீரிய வாழ்வுக்குசிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமே ஆகும். என்றால் அது மிகையல்ல. இதனாலேயே ஓங்காப் புகழ்மிகு தொல்காப்பியரும் "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்றார்.

ஒருவரிடம் எத்தனை செல்வங்கள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போகிறது. பல்வேறு திறமைகளைக் காட்டிலும் பல்வேறு பதவிகளைக் காட்டிலும் ஒருவனுக்கு ஒழுக்கம் சிறந்ததாக வேண்டப்படுகிறது.

ஒழுக்கமுடையோர் நிச்சயம் உயர்வடைவர். "நீ எதை மதிக்கிறாயோ அது உன்னை மதிக்கும்" என்பது முதுமொழி. ஒழுக்கத்தை உயிராக உயர்வாக மதிப்போருக்கு ஒழுக்கம் உயர்வு தரும் என்பது திண்ணம்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
தீ ஒழுக்கம் என்றும் இடும்பை தரும்" என்பது வள்ளுவர் வாக்கு.

தீயொழுக்கம் என்றும் துன்பத்தையே தரும் என்பதை மறந்துவிடலாகாது. சமூக அந்தஸ்தைப் பெற மனிதனுக்கு ஒழுக்கம் உயிர் போன்றது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

புத்தர், இயேசு, காந்தி போன்றோரின் வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமானால் அவர்கள் ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்பதைக் காணலாம். நீங்கள் கீதைச் சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் மட்டும் நான் மகிழ்ந்துவிட மாட்டேன். வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும் பயிலாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால் முக்கியமாக ஒழுக்கம் பயிலவேண்டும் என மாணவர்களிற்கு உபதேசித்தார் காந்தியடிகள். அவர் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக மதித்துப் பேணிக் காப்பாற்றியதன் மூலமே உலகத்தோரால் "மகாத்மா" எனப் போற்றப்படுகிறார்.

சுருங்கக்கூறின் ஒழுக்கத்தைப் பேணுவோர் உயர்வர். அல்லாதோர் பழியெய்தி வாழ்வில் பாழ்பட்டழிவர். இந்த உண்மையை எந்நாளும் நினைவிற் கொண்டு வாழ்வோமாயின் நமது வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## நிகழ்வுகளின் நிழல்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















# நிகழ்வுகளின் நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பள்ளியின் நட்பும் பிரிவும்

ஆன் வீர்ஜினி வின்சன்றிப்போல்
2018-O/L

இயற்கையில் அழகை தேடினேன் - அதை
இரசித்து பார் என்றது என் பள்ளி மனம்
கற்பதற்கு இடம் தேடினேன்
பள்ளியில் கற்றுக் கொள் என்றது - என் பள்ளி மனம்

ஓடம் போல் இருந்த எனக்கு - பள்ளியை
ஓட்டியாக எனக்குக் கற்றுக் கொடுத்தாய்
ஒன்று என தொடங்கி ஒன்பது வரை இருந்த என் பள்ளிக் கல்வியை
பதினொன்று வரை உயர்த்தி விட்டாயே என் நட்பின் பள்ளியே.

வாழ்வு எனும் படகில் படகு ஓட்டுவதற்கு
கற்றுக் கொடுத்ததும் என் பள்ளியே.
கடலில் அலை மோதும் போது - அதை
எதிர்த்து போ என்று கற்றுக் கொடுத்ததும் என் நட்பின் பள்ளியே.

பள்ளி வாழ்வில் கற்றவையில்
தாயை விட்டு இருந்து பார் தாயின் அருமை தெரியும் - அதே
போல் படித்துப்பார் பள்ளியின் நட்பு
என்னவென்று புரியும்.

அறிவை ஊட்டுவதற்கு ஆசான்களை அழைத்தாய் - அந்த
அறிவை கேட்பதற்கு எங்களை அழைத்தாய்
பிரிந்து செல்வதற்கு யாரையும் அழைக்கவில்லையே - ஏன்
பள்ளியின்றி என் வாழ்வில் கல்வி கிடையாது என் நட்பின் பள்ளியே

பள்ளியின் நட்பு என்னவென்று எனக்கு தெரியும்
அதனால்த்தான் பள்ளியின் உயர்வால் நான் கற்கின்றேன்
பள்ளியில் தான் வாழ்வின் முதற்படிகள் உள்ளன - என்
நட்பின் பள்ளியே நீ நீடூழி வளர்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியில் சுருங்கும் பசுமைப் போர்வை

**வி. டொறக்சன்**
சிரேஷ்ட மாணவ தலைவர்
2018

புவி நிலக்காட்சியின் அதி பிரதான உறுப்பாக இயற்கைத் தாவரம் விளங்குகின்றது. காடுகளும், புல்வெளிகளும் புவியின் பசுமைப் போர்வையாக விளங்கி வருகின்றன. ஆரம்பத்தில் புவியின் மேற்பரப்பில் மூன்றிலிரு பங்கில் காடுகள் பரந்திருந்தன. 1950 அளவில் 30% காடுகளாக இருந்தது. ஆனால் இன்று அதிலும் குறைந்து விட்டன. அந்தவகையில் காடுகளின் பயன்கள், காடுகள் அழிக்கப்படுவதற்கான காரணங்கள், அதனால் ஏற்படும் பிரச்சினைகள், அவற்றை பாதுகாப்பதற்கான வழிமுறைகள் பற்றி நோக்குவோம்.

காடுகள் சுற்றுச் சூழல் பாடுதுகாப்பு பணியில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. வெப்பம், மழை, காற்று என்பன காடுகளினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. உயிரினங்கள் சுவாசிப் பதற்கு தேவையான ஒட்சிசனை ஒளித்தொகுப்பின்போது வளிமண்டலத்தில் சேர்க்கின்றன. காடுகள், மழை வளத்தை பெருக்குகின்றன. மண்ணரிப்பை தடுக்கின்றன. நிலத்தில் சேரும் இலைகள் மண்ணில் உக்கி வளம் சேர்க்கின்றன.தரைக்கீழ் நீர் வளத்திற்கும் உதவுகின்றன. மேலும் காடுகள் பலவகை உயிரினங்களின் உறைவிடமாகவும், பலவகை தாவரங்களின் வளர் இடமாகவும், பல்லுயிரின மேம்பாட்டிற்கும் உதவுகின்றன. விறகு, மரத்தேவை என்ப வற்றினையும் பூர்த்தி செய்கின்றன. இவ்வாறாக எண்ணிலடங்கா நன்மைகளை காடுகள் எமக்கு பெற்றுத் தருகின்றன.

காடுகள் அழிக்கப்படுவதற்கான காரணங்களை நோக்குகையில், மக்கள் தொகைப் பெருக்கம் முக்கிய காரணியாகும். அதிகரித்து வரும் மக்களின் உணவு, உறைவிடத் தேவை களுக்காக காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இன்னும் விவசாய உற்பத்திப் பெருக்கம் காரணமாக காடுகள் அழிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. பாரிய அபிவிருத்தி திட்டங் களுக்காகவும்அணைகள் கட்டுமானத்திற்காகவும் உலகின் பல நாடுகளில் காடுகள் அதிகளவில் அழிக்கப்பட்டும் நீர்த்தேக்கங்களுள் அமிழ்த்தப்பட்டும் உள்ளன. மனிதரின் மரத்தேவைகள், விறகுத் தேவைகள் என்பனவும் காடழிவிற்கு காரணமாகின்றது. இயற்கை யாக தோன்றும் காட்டுத் தீயும் மனிதர்களால் தோற்றுவிக்கப்படும் காட்டுத்தீயும் வேகமாக பரவி காடுகளை அழிப்பதோடு வனவிலங்குகளையும் அழித்து வருவது இன்றும் நிகழ்கிற சம்பவமாகும். கால்நடைகளின் மேய்ச்சலும் காடழிவுக்கு ஒரு காரணமாகின்றது. தொழிற் சாலைகளின் வளர்ச்சி, முக்கியமாக காகித தொழிற்சாலைகளின் வளர்ச்சி காட்டுமர அழிவுக்கு காரணமாகின்றது. இவை காடுகள் அழிக்கப்படுவதற்கான காரணங்களாக அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளை அழிப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி கூறும்போது, அவை அதிகம் பாதகமான விளைவையே தருகின்றன. அவையாவன, காட்டு உயிரினங்கள் அழிவடைதல், வனவிலங்குகளின் உறைவிடம் பாதிக்கப்படும்போது மானிடச்சமூகம் பாதிப்புறும். உதார ணமாக இலங்கையில் யானையின் காடுகள் அருகி வருவதனால் அவை குடிமனைகளை நாடி வந்து பயிர்களையும் அழித்து உயிர்ச்சேதம் விளைவிக்கின்றன. மழைவளம் குறைவடைகின்றது. இதனால் பயிர்ச்செய்கை பாதிப்புறல், குடிநீர்த் தட்டுப்பாடு என தொடர்கின்றன. நிலச்சரிவு மண்ணரிப்பு என்பன காடுகளின் அழிவால் ஏற்படுகின்றன. தரிசு நிலங்களின் அதிகரிப்பு, ஓசோன் படலம் பாதிப்புற்று புவியின் வெப்பநிலை உயர்வடை கின்றது. மேலும் இன்று உலகெங்கும் அதிகரித்து வரும் மக்களின் தேவையினால் காடுகள் கட்டுப்படுத்தமுடியாத அளவிற்கு சீரழிந்துள்ளன.

இவ்வாறு சீரழிந்து செல்கின்ற காடுகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி நோக்குவோம். மழைக் காடுகளை பேணிப் பாதுகாப்பதற்கான கொள்கைகள், சட்டங்கள் முதலான நடைமுறைச் சட்டங்கள் சரியான முறையில் முன்வைக்க வேண்டும். காட்டு வளங்களை அழிப்போர் மீது சட்டப்படியான நடவடிக்கைகளை கடைப்பிடித்தல் வேண்டும். அதில் ஈடுபடுவோரை வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும்படி ஊக்குவிக்க வேண்டும். காடுகள் அழிக்கப்படுவதால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றிய பாரிய அளவில் பிரசாரம் செய்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மீள்வனமாக்கல் துரிதப்படுத்தப்பட வேண்டும். தீவிர மேய்ச்சலை தடைசெய்தல் முக்கியமாக மலைச்சாய்வுகளில் தீவிர மேய்ச்சலை மட்டுப்படுத்த வேண்டும். காட்டுத்தீ பரவுவதை கண்காணித்து கட்டுப்படுத்த வேண்டும். குடிசன அதிகரிப் பினால் நிலத்திற்கு ஏற்படும் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு திட்டமிட்ட ஒழுங்கான நடைமுறை களையும் கையாள வேண்டும்.

இவ் வழிமுறைகளை நாம் நடைமுறைக்கு கொண்டுவரும்போது காடுகள் அழிவடைவது குறைவடையும், சூழல் சமனிலைபாதுகாக்கப்படும். புவியை காப்பதற்கு எஞ்சியுள்ள பசுமைப் போர்வையை அழியாது காப்பாற்றுவதுடன் மீள் வனமாக்கலுக்கான சகல நடவடிக்கைகளையும் கைக்கொள்ள வேண்டும். இதன்மூலம் காடழிவைக் குறைத்து பசுமைப் போர்வை பாதுகாப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் தந்த வாழ்க்கை வசதிகள்

இ. கமலிவுசினா
2018. O/L.

ஆத்ம ஞானம், விஞ்ஞானம், இலக்கியம் என்னும் முத்துறைகளின் கூட்டுறவால் மனித வாழ்வு முழுமை பெறுகிறது. என்று கூறுகிறார் பெரும் பேரறிஞரான வினோபாவே. இந்த விண்வெளி யுகத்தில் ஒவ்வொரு மனிதனும் சிந்தித்து உணரவேண்டிய உண்மை இது. இம்மூன்றில் ஒன்றை நீக்கி ஒன்றைப் போற்றுவதால் மனித வாழ்வு வளம் பெற முடியாது. இவற்றுள் விஞ்ஞானம் விலங்கு நிலையில் வாழ்ந்த மனிதனை விண்வெளியைக் கடந்து கோள்களுக்குப் பிரயாணம் செய்யும் அளவிற்கு வளர்த்துள்ளது. வாழ்வோடு பிரிக்க முடியாத வகையில் விஞ்ஞானம் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது.

விஞ்ஞானம் கடலைப்போல அகலமும் ஆழமும் உடைய அறிவுத் தொகுதி. மனித குலம் உலகில் முளை விடத் தொடங்கிய நாள் முதல் இன்று வரை இது பல பல துறைகளில் பல பல வசதிகளை மனிதனுக்கு வாரி வழங்கி வருகின்றது. மிக மிக பிற்போக்கான கிராமங்களில் கூட விஞ்ஞானத்தின் ஒளி பரவியிருப்பதைக் காண முடிகின்றது. ஏரும் எருதும் கொண்டு நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி உழைத்துப் பயன் பெற்ற உழவன் இயந்திரத்தால் ஆழ உழுது, இரசாயன உரமிட்டு பெரும் பயன் பெறுகின்றான்.

அன்று பயணம் செல்வதற்கு கால்நடை, கட்டை வண்டி என்று இருந்த நிலை மாறி இன்று மண் மீதும், கடல் மீதும் விண் மீதும் விரைந்து செல்கின்றான். கடல் வயிற்றைக் கிழித்துக் கொண்டு விரைந்து செல்லும் கப்பல்கள், சில மணி நேரத்தில் கண்டங்களைக் கடந்து செல்லும் விமானங்கள் என்பன விஞ்ஞானம் மனித குலத்திற்கு அளித்த விலை மதிக்க முடியாத பொக்கிஷங்கள் ஆகும்.

தொலைத் தொடர்பு சாதனங்களால் பூமி கிராமமாகச் சுருங்கியுள்ளது. வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, தந்தி, இணையம் என தொலைத் தொடர்பு சாதனங்கள் கண்டங்கள் கடந்து கண நேரத்தில் மனிதனை இணைத்து வைக்கின்றன.

சாதாரண காயத்தைக் கூட குணப்படுத்த முடியாமல் இறப்பை சந்தித்த உலகப் போர் காலங்களில் இருந்து தற்போது இதய மாற்று சத்திர சிகிச்சை, வரை விஞ்ஞானம் மருத்துவ உலகிற்கு புதிய புதிய கண்டு பிடிப்புக்களை வாரி வழங்குகின்றது.

நல்லாட்சி நிலவும் நாட்டிலுள்ள விஞ்ஞானிகள் சமுதாயத்திற்கு நலன் பயக்கும் நல் விளைவுகளைத் தரும் வகையில் கண்டுபிடிப்புக்களை மேறகொள்கின்றனர். கொடுங்கோல் நிலவும் நாட்டில் அணுகுண்டு, அணு ஏவுகணை, இரசாயன ஆயுதங்கள் என மனித குலத்திற்கு பேரழிவு தரும் கண்டுபிடிப்புக்களை மேற்கொள்கின்றனர். எனவே ஆட்சியாளர்கள் விஞ்ஞானத்தை அழிவிற்குப் பயன்படுத்தாமல் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கும் வகையில் ஆக்கத் துறைக்குப் பயன்படுத்துதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் உமது கையில்

றெ. றெக்ஷினா
தரம் -10

வெள்ளைச் சிறகடித்து
பள்ளி தனில் பவனி வரும்
பயமறியாப் பச்சிளம் பறவைகளே
துள்ளித் திரிந்திடும் காலமிது.
பள்ளிப் பயின்றிடும் காலமிது
கசடறக் கற்றிடுங்கள் கற்றவை
கற்ற பின் அந்நெறி நின்றிடுங்கள்

ஓடி விளையாடுங்கள் உடலுக்கு
உரம் சேர்த்திடுங்கள்.
கூடித் திரிந்திடுங்கள் கல்வி உலகமதை
அறிந்திடுங்கள்

நற்பண்பை அணைத்திடுங்கள்
தீமையதை அழித்திடுங்கள்
கற்பது நடு வீதியில் நிற்பதற்கல்ல
சபை நடுவே திலகமாய் திழைத்திட

அணிந்திடும் உடையின் வெண்மை – அது
உமது உள்ளத்தின் தூய்மையை உணர்த்தும்
ஏடு தூக்கி விட்டால் ஏக்கமில்லை
கல்வி பயின்றிட்டால் கவலையில்லை.

ஏந்திடும் எழுது கோலும்– நீர்
தாங்கிடும் புத்தக மூடைகளும் – நாளை
உமைத் தாங்கிடும் – நாற்காலியில்
இருக்க சோறு போடும்.

இன்றே உணர்ந்திடுவீர்
பொறுப்பை இனிதே அறிந்திடுவீர்
உலகம் உமது கையில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

அ. மரிய அமினா
தரம் - 06

01. மனித உடலில் குருதி பாயாத பகுதி
- கண்ணின் கருமணி

02. காச நோய்க்குரிய தடுப்பு மருந்து
- DCG

03. பித்தத்தை சுரக்கும் உறுப்பு
- ஈரல்

04. பித்தக்கான் தடைப்பட்டால் உண்டாகும் நோய்
- செங்கன் மாரி

05. மனித உடலில் உள்ள மிகப் பெரிய சுரப்பி
- ஈரல்

06. முதிர்ச்சி அடைந்த மனிதனில் காணப்படும் மொத்த என்பு
- 206

07. மிகப் பெரிய தசை
- இதயத்தசை

08. மிக வலிமையான தசைப் பகுதி
- நாக்கு

09. மூட்டுக்களின் எண்ணிக்கை
- 230

10. நரம்புகளின் மொத்த எண்ணிக்கை
- 7200

11. உடலில் மிகப் பெரிய இணைப்பு
- முழங்கால்

12. மனித மூளையின் சிந்தனையின் நேரம் மணிக்கு
- 270 cm

13. விலா எலும்புகளின் எண்ணிக்கை
- 24

14. எலும்புகளின் மொத்த எண்ணிக்கை
- 207

15. எலும்புகள் அதிகமுள்ள பகுதி
- கை

16. மனித உடலில் மிக சிறிய எலும்பு
- காதிலுள்ள எலும்பு

17. உயிரணுவில் உள்ள நிற மூர்த்தம்
- 23சோடி

18. தசைகளின் மொத்த எண்ணிக்கை
- 63

19. உடலில் தசை உள்ள வீதம்
- 40%

20. முள்ளந் தண்டிலுள்ள எலும்புகள்
- 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கையின் பொன் விதிகள்

றொ. ஆன்சன் குரூஸ்
தரம் - 06

**நீங்கள் ஒன்றை**

திறந்தால் - அதை மூடிவிடும்
திருப்பினால் - நிறுத்திவிடும்
திறந்தால் - அதைப் பூட்டி விடும்
உடைத்தால் - அதை ஒப்புக் கொள்ளும்
பொருத்த முடியாவிட்டால் - செய்யக் கூடிய ஒருவரை அழையும்
கடனாகப் பெற்றால் - அதை மீளக் கொடும்
மிதித்தால் - அதன்மேல் கவனமாக இரும்
குழப்பினால் - அதைச் சரியாக்கும்
நகர்த்தினால் - மீண்டும் அவ்விடத்தில் வைக்கவும்
இன்னொருவருக்குரியதை உபயோகிக்க விரும்பினால் - அனுமதி பெறவும்
நீர் எப்படி அதனை இயக்குவது எனத் தெரியாவிடில் - அப்படியே விட்டுவிடும்
அது உம்முடைய வேலை இல்லாவிடின் - கேள்விகள் கேட்பதைத் தவிர்க்கவும்
அது உடைந்திராவிடில் - பொருத்தத் தேவையில்லை
உமது வார்த்தைகளால் இன்னொருவரின் நாளைப் பிரகாசிக்கச் செய்ய முடியுமானால் - அதனைக் கூறும்
உமது வார்த்தைகள் ஒருவருடைய நற்பெயரை மங்கச் செய்யுமானால் - அதனை வெளிவிடாதிரும்

## பள்ளிக் கூடம்

நி. மேரி கிறிஸ்ரினா
தரம் 09

அறிவை அறிமுகம் செய்யும் கோயில்
பள்ளிக் கூடமே அன்பையும் பண்பையும்
ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் ஏன்
உலகத்தை உணரச் செய்யும் உன்னத
இடம் பள்ளிக்கூடம் நட்பை விதைக்கும்
இடம் ஏடும் எழுத்தும் மட்டும் அறியும் இடம்
இல்லை நாம் யாரெண்டு நமக்கு காட்டி
மனிதனை மனிதனாக்குவது இந்த பள்ளிக்கூடமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெஞ்சும் பிஞ்சு

நி. எல்சி
தரம் - 6

வஞ்சமிலா நெஞ்சமதில் - நீவிர்
நஞ்சு விதைகளை விதைக்காதீர்
பிஞ்சுப் பாலகர் நாம்
கெஞ்சுகின்றோம்

பஞ்ச மாபாதகம் மலிந்திட்ட - இப்பிர
பஞ்சத்திலிருந்து எமைக் காப்பீர்
குஞ்சுகள் நாம்
கெஞ்சுகின்றோம்

வெஞ்சினக் காமுகரின் பிடியினின்று
தஞ்சம் தேடி வந்தோம்
கொஞ்சும் மழலைகள் நாம்
கெஞ்சுகின்றோம்

அஞ்சாது பகையழிக்கும் அன்பை
விஞ்சிட யாரால் முடியும்
பஞ்சமிலா அன்புதனை
கஞ்சத்தனமில்லாது அள்ளித்தாரீர்

கொஞ்சும் மழலைகள் நாம்
கெஞ்சுகின்றோம்
நெஞ்சுருக...

## வாழ்வின் படிகள்

ம. மரிய றொசானி
தரம் - 11 (O/L)

மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிகவும் வேண்டியது - பணிவு
மிகவும் வேண்டாதது - வெறுப்பு
மிகவும் பெரிய நோய் - பேராசை
மிகவும் கீழ்த்தரமானது - பொறாமை
நாம் செய்ய வேண்டியது - உதவி
உயர்வுக்கு வழி - உழைப்பு
நழுவவிடக் கூடாதது - வாய்ப்பு
பிரியக் கூடாதது - நட்பு
மறக்கக் கூடாதது - நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியின் நீர் பற்றிய தகவல்கள்

பி. பீற்றர் ஜெனிசியஸ்
தரம் - 08

- புவியில் மாத்திரமே நீர் மேற்பரப்பில் காணப்படுகிறது. ஏனைய கோள்களில் பனிக்கட்டியாகவும் மேற்பரப்பிற்குக் கீழேயும் காணப்படுகிறது
- நீர் இல்லாது மனிதர்கள் 4 அல்லது 5 நாட்களுக்கு மேல் உயிர்வாழ முடியாது.
- உலகின் புராதன நாகரிகங்கள், ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்கு அண்மையில் தோற்றம் பெற்றன
- நீர் மூலக்கூறு இரண்டு ஐதரசன் அணுக்களையும் ஒரு ஒட்சிசன் அணுவையும் கொண்டுள்ளது. ( H2)
- நீரின் கொதிநிலை வெப்பம் $100^{0}C$
- நீரின் கொதிநிலை வெப்பம் $0^{0}C$
- நீரைவிட பனிக்கட்டி குறைவான அடர்த்தி கொண்டு இருப்பதால் நீரில் பனிக்கட்டி மிதக்கிறது.
- மனிதர்கள் இலகுவில் பெறக்கூடிய நன்னீரின் அளவு மொத்த நீரின் 0.6% ஆகும்.
- நீர் 3 வடிவங்களில் உள்ளது
- திரவம் – நீர்
- திண்மம் – பனிக்கட்டி
- வாயு – நீராவி
- கடல் நீரின் தன்னீர்ப்பு நன்னீரை விட அதிகம் அதனால் தான் கடல் நீரில் நீந்துவது இலகு.
- உலகின் மிக நீளமான நதி நைல் நதி ஆகும். எகிப்து சூடான், எதியோப்பியா, உகண்டா, சயரே, தன்சானியா, கென்யா, ருவான்டா, புரூண்டி, எரித்திரியா ஆகிய ஆபிரிக்க நாடுகளின் ஊடாக ஓடி மத்திய தரைக்கடலை அடைகிறது.
- நிலையத்தினால் சூழப்பட்ட நீர் நிலைகள் ஏரிகள் என அழைக்கப்படும் இலங்கையின் பரப்பளவை விட 5 மடங்கு பெரியது கஸ்பியன் ஏரியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

வி. அருன் நகை
தரம் - 06

## இலங்கையின் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டவை.

01. பொலிஸ் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது - 1866
02. புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது - 1870
03. உபதபால் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது - 1921
04. அஞ்சல் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது - 1832
05. இறப்பர் செய்கை ஆரம்பிக்கப்பட்டது - 1876
06. அஞ்சல் முத்திரை வெளியிடப்பட்டது - 1957
07. தேயிலை செய்கை ஆரம்பிக்கப்பட்டது - 1839
08. கோப்பி செய்கை ஆரம்பிக்கப்பட்டது - 1823
09. கொழும்பு கண்டி வீதி திறந்து வைக்கப்பட்டது - 1802
10. பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது - 1979
11. கிராம சேவகர் முறை அறிமுகமானது - 1963
12. டட்லி சேனநாயக்கா முறை அறிமுகமானது - 1965
13. பண்டா செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது - 1957-07-26
14. இலங்கை ஐநா சபையில் உறுப்புரிமை பெற்றது - 1955
15. தொலைத் தொடர்பு திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது - 1982
16. வரித்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது - 1932
17. எயர்லங்கா ஆரம்பிக்கப்பட்டது - 1979
18. கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது - 1912
19. காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது - 1962
20. தேசிய சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது - 1972



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

வின்சன்ரிபோல் - அருன்னகை
தரம் - 06

01. மனிதன் செய்யாத குடை மழைக்குப் பிடிக்க முடியாத குடை அது என்ன?
- காளான்

02. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது எது?
- பேனை

03. வாசலிலே வண்ணப் பூ தினம் தினம் மாறும் பூ தெளிவாகத் தோன்றும் பூ அது என்ன?
- கோலம்

04. கத்தியின்றி இலைகளை வெட்டும் அது என்ன?
- வெட்டுக்கிளி

05. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து அது என்ன?
- வெண்டிக்காய்

06. ஒளி கொடுக்கும், விளக்கல்ல, சூடு கொடுக்கும் நெருப்பல்ல அது என்ன?
- சூரியன்

07. உடம்பில்லாத மனிதன் இவர் ஊர் முழுக்க சுற்றுவான் அவன் யார்?
- புகை

08. இலைகளே இல்லாத மரம். இங்குமங்கும் அலையுது பூக்களே பூக்காத மரம் புதுமையான மரம் அது என்ன?
- கட்டு மரம்

09. இருட்டு புதரிலே இடிபாடு இடத்திலே யாரு வைத்த ஐஸ்கிறீம் இப்படி நெய் ஒழுகுது அது என்ன?
- தேன்

10. உச்சி குடுமி உண்டு மனிதனல்ல, உடலெங்கும் உரோமம் உண்டு கரடியுமல்ல, உருள் விழிகள் மூன்று உண்டு சிவனுமல்ல அது என்ன?
- தேங்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

யோ. ஆன்டர்சினி
2018.O/L

01. க.பொ.த உயர் தரத்தில் தொழில் நுட்பப்பாடம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
- 2013ம் ஆண்டு

02. தற்போது அமுலில் உள்ள கல்வி சட்டம் எது?
- 1939ம் ஆண்டு 31 ஆம் இலக்கம் கல்விச்சட்டம்

03. மருத்துவத்தின் தந்தை
- ஹிப்போகிரட்டிஸ்

04. உலகின் முதல் பெண் தாதி
- புளோரன்ஸ் நைற்றிங் கேர்ள்

05. உலகில் முதல் பிறந்த பரிசோதனைக் குழாய் குழந்தை
- லூயிபிறவுன் இங்கிலாந்து

06. ஹோமியோபதி மருத்துவத்தின் தந்தை
- சாமுவேல் ஹனிமன்

07. விற்றமின் எனும் பெயரை அறிமுகம் செய்தவர்
- பற்விற்றமின்

08. மனித உடலில் இருதய துடிப்பை அறியும் கருவி
- காடியோ கிராப்

09. உள மருத்துவத்தின் தந்தை
- சிக்மன் புறொய்ட்

10. நோபல் பரிசு வழங்கப்படாத முக்கிய துறை
- கணிதம்

11. நோபல் பரிசு முதலில் பெற்றவர்
- வில் கெம் ரோண்ட்ஜன்

12. நோபல்பரிசுஆசியாவில்முதலில்பெற்றவர்
- ரவீந்திரநாத் தாகூர்

13. நோபல் பரிசு அதிக தடவை பெற்ற நாடு
- ஆபிரிக்கா (உலக சமாதான விருது)

14. நோபல் பரிசின் மதிப்பு
- 30 இலட்சம் பவுண்

15. ஆகக் கூடிய பதிப்புரிமை பெற்ற புத்தகம்
- கின்னஸ்

16. இலங்கையில் தமிழில் வெளியான முதலாவது நாவல்
- அஸன் பெயுடைய சரித்திரம்

17. நீதியே நீ கேள் எனும் தமிழ் நாவலை எழுதியவர்
- இளங்கீரன்

18. இலங்கையின் மல்லிகை என்னும் பெயரில் நீண்டகாலம் வெளிவரும் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர்
- டொமினிக் ஜீவா

19. உலகின் முதலாவது தமிழ் புத்தகம்
- வணக்கம்

20. முதல் சிங்கள அகராதியை தொகுத்தவர்
- சாமுவேல் யோன்சன்

21. திருக் குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்
- G.V.போப்

22. உலகில் கூடுதலான வார்த்தை கொண்ட நூல்
- மகாபாரதம்

23. உலகில் குறைவாக எழுத்துக்களை கொண்ட மொழி
- ஹவாய்

24. உலகில் முதல் பிரபஞ்சப் பேரழகிப் போட்டி நடைபெற்ற நாடு
- கலிபோர்னியா

25. டக்ஸி அதிகமுள்ள நாடு
- மெக்ஸிக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. 10 வருடங்களுக்கு ஒருமுறை பிறந்தநாள் கொண்டாடும் நாட்டினர்
- சீனர்

27. உலகை எளிதில் இணைக்க உதவிய முதல் கண்டுபிடிப்பு
- தொலைபேசி

28. சமாதானத்தின் சின்னமாக வெண் புறாவை அமைத்தவர்
- பாப்லோ பிக்காஸோ

29. உலகின் முதற் பெண் ஜனாதிபதி யார்
- மரியா எஸ்தேவா

30. பெண்களுக்கு கட்டாயம் இராணுவப் பயிற்சி வழங்கும் நாடு
- இஸ்ரேல்

31. கடற்கரை, ரயில் சாலை வசதி அற்ற நாடு
- லாவோஸ்

32. ஈபிள் கோபுரத்திலுள்ள படிக்கட்டுக் களின் எண்ணிக்கை
- 729

33. உலகில் வறுமையான நாடு
- றுவண்டா

34. பைசா கோபுரத்தின் படிக்கட்டுக்களின் எண்ணிக்கை எவ்வளவு
- 294

35. பைசா சாய்ந்த கோபுர உயரம், சாய்ந்த நிலை எவ்வளவு
- உயரம் 178 அடி; சாய்ந்த நிலை 14 அடி

36. பைசா கோபுரத்தின் மாடிகளின் எண்ணிக்கை
- 8

37. அஜந்தா குகையில் உள்ள குகைகளின் எண்ணிக்கை
- 29

38. அண்டார்டிக்காவை அடைந்த முதற் பெண்மணி யார்
- மிஸஸ் கரோலின் மைக்கேஸ்ஸன் (1935)

39. ஆசியாவின் மிகப் பெரிய குடிசைப் பகுதி
- தாராவி

40. கம்போடியாவில் அழிந்து கிடக்கும் புராதன நகர்
- அங்கோர்

41. வருடத்தில் ஒரு முறை சூரிய உதயம் இடம் பெற்ற நாடு
- அண்டார்டிகா (Sep 21)

42. உலகின் பழைமையான நாடாளுமன்றம்
- ஐஸ்லாந்து நாட்டின் "ஆஸ்திங்" நாடாளுமன்றம்

43. காப்கோர் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
- 2001

44. ஐநா சபையின் உத்தியோக பூர்வ மொழி எத்தனை
- 6

45. ரூபா நாணய முறை எந்தெந்த நாடுகளின் பின்பற்றப்படுகிறது
- இலங்கை, இந்தியா

46. இலங்கையில் உள்ள கல்வி வலயங்கள் எத்தனை?
- 98

47. தேசிய மட்ட பரீட்சைகளை நடாத்தும் நிறுவனம்
- இலங்கை பரீட்சை திணைக்களம்

48. இலவச சீருடை இலங்கையில் விநியோகம் செய்யப்பட்ட ஆண்டு
- 1993

49. இலங்கையில் காணப்படும் அரச பல்கலை கலகங்களின் எண்ணிக்கை எத்தனை பேர்
- 15
- கல்விய கல்லூரி - 19

50. இலங்கை வறுமை கூடிய, வறுமை குறைந்த மாகாணம் எது
- வடமாகாணம், மேற்கு மாகாணம்

51. மணி ஓடர் முறை தொடங்கப்பட்டது எப்போது
- 1887



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரத்தின் மதிப்பு

றொ. றொகான்
தரம் - 02

### நேரத்தின் மதிப்பு மதிப்பு என்னவென்று தெரிய எட்டு வழிகள்

1. ஓர் ஆண்டின் மதிப்பு என்னவென்று பரீட்சையில் தோல்வி அடைந்த மாணவனைக் கேளுங்கள்.
2. ஒரு மாதத்தின் மதிப்பு என்னவென்று குறைப்பிரசவத்துக்கு ஆளான ஒரு தாயைக் கேளுங்கள்.
3. ஒரு வாரத்தின் மதிப்பை ஒரு வாரப் பத்திரிகையின் ஆசிரியரைக் கேளுங்கள்.
4. ஓர நாளின் மதிப்பு என்னவென்பதை அன்றைய தினம் வேலை கிடைக்காமல் போன தினக் கூலித் தொழிலாளியிடம் கேளுங்கள்.
5. ஓர் மணி நேரத்தின் மதிப்பை ரயில் நிலையத்தில் சுற்றத்தாருக்காக காத்திருக்கும் ஒரு மனிதனைக் கேளுங்கள்.
6. ஒரு நிமிடத்தின் மதிப்பை தான் செல்ல வேண்டிய புகைவண்டியைத் தவறவிட்ட பயணியிடம் கேளுங்கள்.
7. ஒரு வினாடியின் மதிப்பை ஒரு விபத்தில் உயிர் தப்பிய ஒருவரைக் கேளுங்கள்.
8. ஒரு மில்லி விநாடியின் மதிப்பை ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவரைக் கேளுங்கள்.

## உறவுகள் மேம்பட...

சு. சுரேஷ் குமார்
தரம் - 05

எமது அயல் சமூகத்திலும் சரி குடும்பத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்க, ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க...

- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை ( Ego ) விடுங்கள்
- அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள் ( Loose Talk )
- எந்த விசயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள் விட்டுக் கொடுங்கள் (Compromise )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத் தான் ஆகவேண்டும்என்பதை உணருங்கள் ( Tolerance )
- எல்லோரிடத்திலும் எல்லா விசயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் ( Flexibility )
- மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும் இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள் ( Courtesy )
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரம் இல்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே சமாதானமாக பேச்சைத் தொடக்க முன் வாருங்கள்.

*(சிறுவர்களுக்கான பொது அறிவுக் களஞ்சியம்)*
*நர்மதா பதிப்பகம்*

## பள்ளியும் ஆசான்களும்

வின்சன்ரிப்போல் விஜி ஜான்சன்.
தரம் - 10

கல்வி எனும் வாழ்க்கைக்கு சுடரேற்றும்
பள்ளி ஆசான்களுக்கு மாணவன் நான் எழுதும் கவி
சின்னஞ் சிறு சிட்டுக்களாய் இருந்த எமக்கு
கரடு முரடான பாதை வழியே வந்து கல்வியே ஒளி என்னும்
கல்வியை ஏற்ற வந்த உங்களை வாழ்த்துகின்றேன்

என் பள்ளியின் நூற்றாண்டகவையில்
நீங்கள் கற்பிக்கின்ற கல்வியிலே மூழ்கிறேன்
நீங்களும் பள்ளியில் கற்ற ஆசான்களே - என்னை
உங்களைப் போல் உயர்வடைய கற்பிக்கின்றீர்களே
உங்களை மறக்க முடியுமா வாழ்வில் வந்த தெய்வங்கள் நீங்கள்

பள்ளி வாழ்க்கையில் கிடைக்கும் சுதந்திரம்
பள்ளி செல்லாத போது தான் தெரியும்
பள்ளி சென்று பள்ளி ஆசான்களிடம் - வேண்டும்
பேச்சோ எனது வாழ்வின் - பள்ளியின்
உயர்வுக்கு காரணமாகிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை அரவணைத்த என் பள்ளி

வி. கம்சனா
2018 O/L

"என்னை அழைத்த இறைவனிடம்
என்னை மறவாமல் நீ அன்பு செய்தால்
உனக்கென்ன கைம்மாறு நான் செய்வேன்
எனும் நன்றியில் இணைந்து கொண்டு

வண்ண எழில் வலைப்பாட்டில்
வளமாய் எம்மை வளர்த்தெடுக்க
வந்துதிர்த்த எம் பள்ளியே
வாழ்க வளமுடன் வாழ்கவே

வாழ்க்கை எனும் நந்த வனத்தில் ஓர்
புதிய அத்தியாயம் என் பாடசாலைப் பதிவுகள்
தத்தளிக்கும் என் மனதிலே ஓர் புது உற்சாகம்
விடியல் தேடும் நம் வாழ்க்கையில்
விளக்காய் ஒளிர்ந்த வரலாறு படைத்திடாத
வையகம் போற்றும் இடம்தான் என் பள்ளி
அறியாமை எனும் இருளினை அகிலத்தை விட்டு விரட்டிடவே எனக்கு
அறிவுப் பெட்டகமாய் விளங்கியது என் பள்ளி வாழ்க்கை பயணம்

பலதும் கற்று பட்டம் பெற
பலவழிகளில் பயிற்றுவித்த கல்வித்தாயே
பலரையும் பண்புடன் வளர்த்தவளே
பார்ப்பவர் மனம் கவரும் எழித் தாரகையே
அழுது அழுது ஓடும் காலத்தில்
ஆசை ஆசையாக அரவணைத்த பள்ளியே
ஆராரோ ஆரிவரோ கூறி
அரவணைத்து கல்வி பசி தீர்த்த தாயே வாழ்க பல்லாண்டு வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

யோ. ஆன்சினி

## உலக நாடுகளின் சிறப்பு பெயர்கள்.

1. உலகத்தின் கூரை – திபெத்
2. சூரியன் உதிக்கும் நாடு காகித வீடு, ரோபோக்களின் வீடு – ஜப்பான்
3. நள்ளிரவில் சூரிய உதயமாகும் நாடு – நோர்வே
4. தெற்கேயுள்ள பிரித்தானியா – நியூசிலாந்து
5. நைல் நதியின் கொடை – எகிப்து
6. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் – சுவிற்சலாந்து
7. உலகின் சர்க்கரை கிண்ணம் – கியூபா
8. ஐரோப்பாவின் காப்பகம் – பெல்ஜியம்
9. ஐரோப்பாவின் நோயாளி – துருக்கி
10. மரகதத்தீவு – அயர்லாந்து
11. பொற்கோபுர நாடு – அவுஸ்திரேலியா
12. சூரியன் மறையும் நாடு – இங்கிலாந்து
13. வில்லிப் பூக்களின் நாடு – கனடா
14. கங்காருக்களின் நாடு – அவுஸ்திரேலியா
15. புனித நாடு – பலஸ்தீனம்
16. தங்கப் போர்வை நாடு – அவுஸ்திரேலியா
17. அதிகாலை அமைதி நாடு – கொரியா
18. இருண்ட கண்டம் – ஆபிரிக்கா
19. ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் – ஹங்கேரி
20. தரை கடலின் திறவு கோல் – ஜப்கோல்டர்
21. வெள்ளை யானை நாடு – ஸ்பொட்லாந்து
22. ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு – பின்லாந்து
23. பற்றை வீடு – அவுஸ்திரேலியா
24. ரொட்டி நாடு – ஸ்கொட்லாந்து
25. பசுபிக் பெருங்கடலின் சாவி – சிங்கப்பூர்
26. முத்து தீவு – பஹ்ரைன்
27. ஹெர்குலிஸ் தூண்கள் – ஜிப்ரோடர்

## உலக நகரங்களின் சிறப்புப் பெயர்கள்

1. கோயில்களின் நகரம் – காஞ்சிபுரம்
2. அரபுக் கடல் ராணி – கொச்சி
3. விளக்குகளின் நகரம் – கேரளா
4. வாசனைத் துறைமுகம் – ஹொங்ஹொங்
5. மாடிக்கட்டட நகரம் – நியூயோர்க்
6. இந்தியாவின் பூந்தோட்டம் – பெங்களூர்
7. இந்தியாவின் நுழைவாயில், ஏழு தீவு நகரம் – மும்பை
8. பொற்கதவு நகரம் – சன்பிரான்ஸிஸ்கோ
9. முடிவில்லாத நகரம் – ரோமாபுரி
10. புயலடிக்கும் நகரம் – சிக்காக்கோ
11. கனவுக் கோபுரங்களின் காற்று நகரம் – ஒக்ஸ்போட்
12. அரண்மனை நகரம் – கல்கத்தா
13. ஏழு குன்றுகளின் நகரம் – ரோம்
14. இளஞ்சிவப்பு நகரம் – ஜெய்ப்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கல்லூரித் தாய்க்கு

மரிய அபிலா அன்ரனி எட்வேட்
2018 க. பொ. த (சா/த)

உலகொன்றை கண்டது முதல்
பள்ளி செல்லும் வரை
நான் ஒரு அற்ப பூச்சி

காலங்கள் புரண்டோட – என்னை
என் அன்னை சேர்த்து விட்டாள்
பள்ளி தனில் – அன்பான
ஆசிரியர் பக்குவமாய் வகுப்பறை தனில்
பிஞ்சு பாலகியாய் குட்டி கதிரையில்
என்னோடு இன்னும் பலர்
பால் வடிந்த பிஞ்சு முகத்தோடு

வளர வளர அன்பும் வளர்ந்தது
காலப்போக்கில் வந்த யுத்த அரக்கனால்
அறியாதவயதன்று வந்த என் பிறந்த நாளில்
என் நண்பியை இழந்து – ஒரு
வருடம் கல்வியை மறந்து – என்
நண்பர்களின் மாறாத வடுக்களை
ஆண்டாண்டும் கண்ணோக்கி
யுத்த வடு மறையும் காலம்

எப்படியோ மறைந்து போக
துடி துடித்த வயதில் ஓடித் திரிந்த
முற்றமும்...
பாய்தேறிய மரங்களும்
ஒழித்து விளையாடிய இடங்களும்
என... வளர்ந்த பின் நோக்குகிறேன்.

பின் பள்ளி சென்று நண்பர்களிடம்
பட்டப்பெயர் வாங்கி...
சின்ன சின்ன குறும்புத்தனத்தால்
ஆசிரியரிடம் அடியும் வாங்கி
வீடு சென்று பள்ளி வேலை பார்த்து – விட்டு
படிக்க சாட்டு சொல்லி
புத்தகத்துக்கு பூட்டு போட்டு
பரீட்சையில் மார்க்கு வாங்கி
அம்மாவிடம் குட்டு வாங்கி
பள்ளி கதவை நிரந்தரமாக பிரியவென
அதிபரிடம் துண்டு வாங்கி
போகும் போது பார்க்கிறேன்
எனை வளர்த்த கல்லூரித்தாயை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சி சொல்லிச்சு

யஸ்மின் பவுஸ்மினா
பழைய மாணவி

அது ஒரு அழகிய காலம்
அன்பால் இணைந்திருந்த சமூகமாய்
ஆலமர நிழலில் இளைப்பாறி
ஆனந்தமாய் மகிழ்ந்திருந்தோம்

தெருவெல்லாம் தேடிச் சென்று
தெரிந்த விளையாட்டெல்லாம்
விரும்பி ஆடி மகிழ்ந்ததை
திரும்பி நினைக்கின்றோம்

கூட்டாகச் சிறுசுகள் நாம்
கூட்டாஞ் சோறாக்கியதையும்
நிம்மதியாய் சேர்ந்திருந்து
நிலாச் சோறுண்டதையும் மறப்போமா?

யாதொரு பயமின்றி குடிசை வீடுகளில்
யாவரும் கேளீர் என ஒற்றுமையாய்
வாயாரக் கதை பேசிக் கொண்டு
வறுமையை மறந்திருந்தோம்

ஆலமரத்தடியில் ஆளில்லை - இப்போது
ஆறி அமர்ந்திருக்க நேரமும் எமக்கில்லை
செல்லுகின்றோம் தெருவெல்லாம் - கூட
செல்லிடத் தொ(ல்)லை பேசி மட்டும்

மின்னலாய் வந்திட்ட
மின்சாரம் காரணமாய்
மனிதரெல்லாம் கைபேசியுடன்
மணித்தியாலங்களைத் தொலைக்கின்றனர்

தொடர் நாடகத் தொல்லைகளால்
தொடர்பறுந்த குடும்பங்களாய்
தொலை நோக்கைத் தொலைத்ததால்
தொடருதிங்கே துயரங்கள்

கட்டிளமைப் பருவத்தினரும்
கஞ்சாவுக்கு அடிமையாக
பிஞ்சு மனங்களிலும்
நஞ்சு விதை முளைக்க

நிஜங்கள் எல்லாம் மறந்து
நிழலாகிப் போன எம் சமூகம்
நிதர்சனங்கள் உறங்கிப் போக
நிம்மதியைத் தேடுகின்றது

வர்க்க பேதம் எல்லாம்
வந்த வழி போகட்டும்
சொந்த பந்தம் சேர்ந்திருந்து
சோகங்களை மறந்திடுவோம்

அன்பை இயம்பிடுவோம்
அன்பினால் இயங்கிடுவோம்
ஆதிச் சமூகம் போல்
அருகிருந்து உதவிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள்

அமலராஜ் அருள்சிகா
தரம் 8

நீரிற் குமிழிபோல் நிலையற்ற இவ்வுலகில்
நீங்கள் செய்யும் அளப்பெரும்
சேவையினை
என்றும் மறவாமல் ஏற்று உமை வரவேற்று
என்றென்றும் போற்றுகின்றோம்
உங்களையே


நிறைகுடமாய் நீங்கள்
நிலையான கல்வியினை
குறையாமல் எங்களுக்கு
நாள்தோறும் வழங்குகின்றீர்

வரமருளும் தெய்வங்களாய்
வளம் பெறும் எம் ஊரில்
செழிப்புறும் செந்தமிழை
சலிப்பின்றி அருளுகின்றீர்

பகுத்தறிவை பாரினிலே
பாங்குடனே எமக்கெல்லாம்
விழிப்புணர்வாய் வியப்புடனே
வித்தகராய் ஆக்கி வைத்தீர்

சிறப்பு மிக்க கல்வியினை
சிரம் தாழ்த்தி மனம் மகிழ்ந்து
பரப்பு மிக்க உலகத்தில்
பரம் பொருளாய் நின்றீரே

என்றென்றும் போற்றுகின்றோம்
ஆசிரியர்கள் உங்களை
வாழ்த்துகின்றோம்
தேற்றம் பெறும் இவ்வுலகில்
தோற்றமதாய் வழிசமைப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் விபரம்

✳ தி. மைதிலி - 127 (2009)



அ. மேரி விதுஷா
152 (2011)



றொ. மேரி றொபேட்சனா
173 (2013)



பி. பிரகாஷ்
158 (2014)



அ. மரிய ஜான்சனா
158 (2014)



பி. பிப்சிகா
177 (2018)



வி. எழில்
163 (2018)



ஜெ. ஜானுகா
158 (2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. (சா/ த ) பரீட்சையில் சித்தி அடைந்தோர்

**2015**



மேரி சஜித்தா செல்வநாயகம்

**2016**



உதயசீலன் மரிய லக்சலா

**2016**



தொபியாஸ் டொறின் நிஷாளினி



அமலதாஸ் அமலடியானா



விஜிதரன் விஜிதடினோஜன்

**2017**



செல்வநாயகம் ஜெயநிஜிதா



எட்வேட்லதிஸ்லாஸ் ஆன் றொக்சன்



அருள்ராஜன் மேரி விதுஷோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2017



அன்ரன் தேவதாஸ் அன்ரனிற்றா

## க.பொ.த. (சா/ த ) பரீட்சை 2018 இல் சித்தி அடைந்தோர்



விமலதாஸ் டொறக்சன்



இராஜேந்திரன் கமலிலுசினா



நீக்கிலாஸ் பௌஸ்ரீனா



ஜெயானந்தபாலன் அன்ரன் ஜென்சன்



அமலதாஸ் அமல லக்ஸ்மன்



மரியதாஸ் ஜெனுசியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தோர் விபரம்

## 2009-2019

### 2009

1. தி. மைதிலி - 127
2. அ. கௌதமி - 109
3. உ. கிதர்சனா - 107
4. வி. மதுசா - 104
5. ஜெ. தர்மினி - 102
6. த. தசானா - 101
7. ப. டிஷாளினி - 93
8. க. டினோஜன் - 91
9. சு. துவாரகா - 88
10. கு. டினோஜா - 84
11. பே. மரிய கொன்சிகா - 82
12. பே. ஆன்லுசிக்கா - 81
13. செ. மேரிசயித்தா - 75
14. அ. அமல தனுசியா - 72
15. பி. மேரி ஜெனோவா - 71
16. அ. ஜெனுசன் - 70
17. மே. சயிந்தா - 70

### 2010

1. அ. அமலடியானா - 87
2. உ. மரியலக்சலா - 85
3. ரு. அமல அவஸ்ரினா - 80
4. அ. ஜெயராஜன் - 76
5. வி. விஜித டினோஜன் - 75
6. சா. சாதுஷா - 74
7. அ. மரிய றொசானி - 73
8. பே. டொறின் நிஷாளினி - 72

### 2011

1. அ. மேரி விதுஷா - 152
2. செ. ஜெயநிஜிதா - 140
3. பா. பீற்றர் டானியல் - 124
4. அ. அன்ரனீற்றா - 106
5. பி. பீற்றர் டெனுசியஸ் - 95
6. பி. அனுயன் - 87
7. யூ. யூடிஜெசில்டா - 86
8. எ. ஆன்றொக்ஷன் - 84
9. அ. ஆன்றொக் - 79
10. யூ. ஜெயமெயின்சன் - 77
11. அ. அமிர்த வினோஜன் - 76
12. பா. டிலக்சன் - 70

### 2012

1. தே. கொலிஸ்றன் - 143
2. நீ. மேரி பௌஸ்ரினா - 123
3. ஜெ. இருதய ஜென்சன் - 121
4. அ. மரிய அபிலா - 112
5. வி. டொறக்ஷன் - 92
6. வி. ஆன்வீர்ஜினி - 88
7. பி. மார்வன் கனியூஸ் - 87
8. ரா. கமலலுசினா - 86
9. அ. அமலலக்ஸ்மன் - 83
10. வி. கம்சனா - 82
11. அருள் பிரதாப் - 79
12. ஞா. லைசன் குருஸ் - 77
13. அ. அருள்வினுஜன் - 71



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2013

1. றொ. மேரி றொபேட்சனா - 173
2. அ. அமல சுகன்யா - 144
3. பே. கலிஸ்ரஸ் நிருஷன் - 97
4. சோ. ஆன் கம்சிகா - 94
5. கி. ஜென்சிகா - 83
6. உ. மரியலக்சலா - 76
7. ச. சஜிதா - 75
8. அ. அமல நிக்சன் - 75
9. வி. கபியுலா - 70

## 2014

1. பி. பிரகாஷ் - 158
2. அ. மரிய ஜான்சனா - 158
3. ஜெ. மரிய ஜெக்சலா - 133
4. யூ. மேரி யுகன்சியா - 132
5. அ. அகில நாயகி - 124
6. றெ. றெக்சினா - 121
7. யூ. மேரி கொலின்சினி - 120
8. றொ. சாம்குருஸ் - 115
9. நி. மேரி நிருசியா - 110
10. யூ. மைக்கொலின் - 109
11. அ. மேரி அபிலா - 108
12. ஜெ. ஜெனோஜன் - 107
13. தே. நிதுஷா - 95
14. அ. டொலின்சன் - 89
15. ஹீ. அருள்த்தேவன் - 82
16. உ. மேரி சாளினி - 82
17. வி. விஜியான்சன் - 81
18. அ. விந்துஜா - 81
19. கி. கிஷாயினி - 80
20. வி. விஜித டிலாஜினி - 78
21. அ. மேரி அல்வினா - 77
22. யூ. யூடிஜெபிசா - 73
23. ச. மேரி அபிஷா - 71
24. யோ. மேரி அனோடா - 71

## 2015

1. நீ. மேரி கிறிஸ்ரினா - 124
2. அ. அருள் விந்துஜன் - 116
3. ஜெ. மேரி ஜெனோதா - 112
4. வி. மேரி அகிலினி - 107
5. அ. அமல அலஸ்ரினா - 102
6. வி. கனிதா - 101
7. அ. விக்டர்குருஸ் - 90
8. எ. மேரி லதுர்சினி - 86
9. ரு. ஜெனதாப் - 75
10. யோ. அனோஜா - 73

## 2016

1. பி. பீற்றர் ஜெனுசியஸ் - 149
2. உ. உணர்வழகன் - 148
3. அ. அருள்சிகா - 135
4. கொ. கொன்சிகா - 132
5. கி. கானநிலா - 122
6. யூ. மரிய றொனால் டினோ - 112
7. கி. பவநிதா - 111
8. ஆ. அன்பழகி - 109
9. வி. அருண்மதி - 99
10. அ. அபியானுஸ் - 95
11. கெ. மேரி சுபா - 95
12. அ. அமிர்த வினுக்சினி - 93
13. ரா. அருள் பிரியன் - 92
14. ஜெ. ஜெனிபன் - 92
15. செ. நிம்சி - 75
16. பா. டினுசன் - 73
17. ம. மரிய றொசான் - 70

## 2017

1. கி. அன்ரன் பிரியங்கன் - 143
2. யோ. சினடிசிடான் - 133



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வொ. அகவானன் - 124
4. தி. தியோனிசா - 103
5. றா. கலையரசன் - 94
6. அ. அருட்கதிர் - 93
7. பெ. டெசியானா - 92
8. ஜீ. ஜெயநிருபன் - 89
9. டெ. இசைப்பிரியா - 88
10. அ. அகக்குமரன் - 84
11. பி. திகழினி - 79
12. யோ. அயிந்நிலா - 74
13. அ. அருண் - 72
14. நீ. அருட்சிரோன் - 71
15. நி. அருளின்பன் - 70

## 2018

1. பி. பிப்சிகா - 177
2. வி. எழில் - 163
3. றொ. நீருஜா - 161
4. அ. மேரி இசாயினி - 156
5. யூ. நிலவரசன் - 146
6. சா. சாபிகரோவ் - 143
7. சூ. யூட்சினி - 135
8. சா. சத்தியா - 132
9. அ. அமல கெமன்சியா - 131
10. ஞா. மிருஜா - 130

11. றொ. ஆன்சன் குருஸ் - 124
12. வெ. மேரி றக்சனா - 115
13. த. அருளரசன் - 117
14. ஞா. ஞான சாரங்கள் - 99
15. வ. மேரி நந்தினி - 99
16. அ. அருளஎகன் - 93
17. அ. மரிய அபினா - 86
18. வி. அருண் நகை - 78
19. கெ. சுடரின்பன் - 77

## 2019

1. ஜெ. ஜானுகா - 158
2. சு. சுரேஸ்குமார் - 143
3. ரெ. செல்வசுஜிந்தினி - 143
4. றெ. றெமேன்சன் - 133
5. வி. விபிஷன் - 126
6. யோ. ஆன்சினி - 109
7. ரா. சோனியா - 106
8. கி. கினுசன் - 87
9. அ. அருள்நிலா - 87
10. உ. யூட்சினி - 83
11. இ. இந்துஜன் - 80
12. ஜீ. தஜீபன்தாஸ் - 79
13. அ. அருள் ஜொயிசாளினி - 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியறிதல்கள்

இன்றைய நூற்றாண்டு விழாவிற்கு முதன்மை அதிதியாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு. L.இளங்கோவன் (செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சு) அவர்களுக்கும் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு.கி. கமலராஜன் (வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி ) அவர்களுக்கும் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திரு.அ. உதயணன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், பூநகரி ), மற்றும் அருட்பணி மே.து. அலோய் அருனேஸ் குமார், (பங்குத்தந்தை, வலைப்பாடு) அவர்களுக்கும் பாடசாலை சமூகத்தின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைய நன்நாளில் சிறப்புற வெளிவந்துள்ள நெள - 2 (நூற்றாண்டு விழா சிறப்பிதழ்) மலரினை வெளியிட உதவிய சகலருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். மலரிற்கான ஆசிச்செய்திகளையும், வாழ்த்துரைகளையும், ஆக்கங்களையும் வழங்கியுதவிய அனைத்து உள்ளங்களிற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நூற்றாண்டு விழா சிறப்புற நடைபெற பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த புனித அன்னம்மாள் ஆலய அருட்பணிசபை, புனித அன்னம்மாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகம், நிதி உதவி வழங்கிய திரு. ஞானப்பிரகாசம் அன்ரனி நியூட்டன், திரு. வின்சன்றிபோல் டக்ளஸ் போல், திரு A.பத்மநாதன், திரு. தீ. நிக்சன், திரு. பொ. அருள், திரு. அகிலன், திரு. ஞா. ஞானரெட்ணம், அமலநாயகி கபிலன், திரு. றெறன்ஸ் - கனடா (செல்வி. வேஜின் உறவினர் ) ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

நூற்றாண்டு மலரினை வடிவமைத்து குறுகிய கால இடைவெளியில் அச்சிட்டுத் தந்த திரு. யூட்சன் (உரிமையாளர் JS கிராபிக்ஸ், யாழ்ப்பாணம்) அவர்களுக்கும் நிழற்படங்கள் தயாரித்து வழங்கிய திரு. பிரசாத் அவர்களுக்கும் விளம்பரங்களை தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படும் வலயக்கல்விப்பணிப்பாளர்,பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

0777 446975